


யாழ் தினக்குரல்
தினக்குரல்
THINAKKURAL
AN INDEPENDENT DAILY VOICE IN TAMIL
Registered in the Department of Posts of Sri Lanka under No QD/149/NEWS/2021 www.thinakkural.lk yarlthinakkural@gmail.com
ஓசை : 020 குரல் : 271 வெள்ளிக்கிழமை 10 டிசம்பர் Friday 10th December 2021. Post Box: 30 Phone: 021-7388301 Fax:021-7388304 விலை 30/= பக்கங்கள் : 12




# பொதுச் சேவையை சரியாக செய்ய முடியாதவர்கள் வெளியேறுங்கள்

## -அதிகாரிகளுக்கு வட மாகாண ஆளுநர் எச்சரிக்கை-



சட்ட ஆவணங்களால் வழிநடத்தப்படும் அரச துறை சார்ந்தவர்கள் மக்களுக்கான சேவையை சிறந்த முறையில் வழங்க முன்வரவேண்டும் என வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா மாகாண அதிகாரிகளுக்கு பணித்துள்ளார்.

அரச சேவை மூலம் மக்கள் எதிர்பார்க்கும் பலன்களை பெற்றுக்கொடுப்பதற்கு ஒவ்வொரு ஊழியரும் பொறுப்புணர்ந்து செயல்பட வேண்டும்.

தனிப்பட்ட கருத்துக்கள், தனிப்பட்ட வெறுப்பு மற்றும் மற்றொருவருடனான போட்டி அல்லது ஊழல் சிந்தனை ஆகியவற்

» பக்கம் 02




# கடந்த இரண்டு மாதங்களில் 45 தமிழ் இளைஞர்கள் கைது

## -புலிகளின் மீள் எழுச்சி எனக் கூறி பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் தடுத்துவைப்பு - சபையில் ரிஷாத்



பா.கிருபாகரன், ந.ஜெயகாந்தன்


கடந்த 2 மாதங்களுக்குள்ளே 40,45 தமிழ் இளைஞர்கள் புலிகளின் மீள் எழுச்சி என்ற தலைப்பில் கைது செய்யப்பட்டு பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழே தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள். இவர்கள் 20 வயது 22 வயது இளைஞர்களாகவுள்ளனர். 2009 ஆம் ஆண்டில் யுத்தம் முடிந்தபோது இவர்கள் 10 வயதைக் கொண்ட வர்களாகவே இருந்திருப்பார்கள். எனவே இவர்கள் விடயத்தில் சட்டமாஅதிபர் திணைக்களம் கவனம் செலுத்தி அவர்களின் விடுதலைக்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் வன்னி மாவட்ட எம்.பியுமான ரிஷாத் பதியுதீன் வேண்டுகோள் விடுத்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை இடம்

» பக்கம் 02



# அளம்பில் கடற்கரையில் இறந்து கரையொதுங்கிய ஐந்து டொல்பின்கள்



முல்லைத்தீவு - அளம்பில் கடற்கரைபகுதியில் உயிரிழந்த நிலையில் 5 டொல்பின்கள் நேற்று வியாழக்கிழமை கரையொதுங்கின.

நேற்றுக் காலை மீனவர்கள் தொழில் நடவடிக்கைக்கு சென்றபோது இவற்றை அவதானித்து, வனஜீவராசிகள் திணைக்களத்துக்கு அறிவித்தனர். இதனையடுத்து அங்கு வந்த திணைக்கள அதிகாரிகள் இவை குறித்து ஆராய்ந்து இறந்த டொல்பின்களை புதைக்க நடவடிக்கை எடுத்தனர்.

அளம்பில்,செம்மலை,கொக்குளாய் கடற்கரை பகுதியில் கடந்த காலங்களில் உயிருடன் டொல்பின் உள்ளிட்ட சில கடல்வாழ் உயிரினங்கள் கரை ஒதுங்கியமை குறிப்பிடத்தக்கது.(ச-15)

# நீதி அமைச்சரே பதவி துறந்து அரசிலிருந்து வெளியேறுங்கள்

## -உங்கள் சமூகத்திற்கு எதிராக செயற்பட முடியாது - சுமந்திரன்

பா.கிருபாகரன், ந.ஜெயகாந்தன்

மாகாணசபை முறைமையின் ஊடாக அதிகாரங்களை மாகாணங்களுக்கு பகிர்வோம், மாகாணங்களுக்கு ஏற்ற சட்டங்களை அவர்களே உருவாக்கும் அதிகாரத்தை வழங்குவோம் என சர்வதேசத்திற்கு வாக்குறுதி வழங்கிவிட்டு ஒரே நாடு ஒரே சட்டம் என்ற கொள்கையை வகுப்பது நியாயமானதல்ல. இது தற்போதைய அரசியல் அமைப்பு உருவாக்கத்திற்கு முரணானது அத்

» பக்கம் 02



# குற்றவாளிகள், கொலைகாரர்கள், திருடர்கள் அரசின் நண்பர்களாக இருப்பதால் விடுதலை

## -பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைதானோர் இன்றும் சிறையில் கஜேந்திரகுமார்-

பா.கிருபாகரன், ந.ஜெயகாந்தன்

இந்த நாட்டில் பாரிய குற்றவாளிகள், கொலைகாரர்கள், திருடர்கள் அரசின் நண்பர்களாக இருப்பதனால் குற்றத்தீர்ப்பு வழங்காது விடுதலை செய்யப்படும் நிலையில் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர்கள் இன்றும் நீண்டகாலமாக சிறையில் வாடுகின்றனர். இதுதான் இலங்கையின் சட்டம் என தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் யாழ் மாவட்ட எம்.பி.யுமான கஜேந்திரகு

» பக்கம் 02



# அரசை வீழ்த்த தீவிர முயற்சி

## பாராளுமன்றத்திற்கு உள்ளேயும் வெளியேயும்

பா.கிருபாகரன், ந.ஜெயகாந்தன்



அரசியல் ரீதியிலும் பொருளாதார ரீதியிலும் அரசை வீழ்த்துவதற்கு சில சக்திகள் பாராளுமன்றத்திலும் பாராளுமன்றத்திற்கு வெளியிலும் வலையமைப்பாக செயற்படுவ

» பக்கம் 02

# வடமேல் ஆளுநராக கரன்னாகொட நியமனம்

## -ஜனாதிபதி முன்னிலையில் பதவிப் பிரமாணம்-



வடமேல் மாகாண ஆளுநராக கடற்படையின் முன்னாள் தளபதியான அட்மிரல் ஒப் த பிளீட் வசந்த கரன்னாகொட நியமிக்கப்பட்டதுடன் நேற்றுக் காலை ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ஷ முன்னிலையில் ஆளுநராக பதவிப் பிரமாணமும் செய்துகொண்டார்.

வடமேல் ஆளுநராக பணியாற்றிய ராஜா கொல்லுரே காலமானதையடுத்து இந்த நிய

» பக்கம் 02

# வெடுக்குநாறிமலையில் வழிபட அனுமதியுங்கள்

## -சாள்ஸ் எம்.பி. சபையில் கோரிக்கை-

பா.கிருபாகரன், ந.ஜெயகாந்தன்

வவுனியா மாவட்டத்தின் வவுனியா-வடக்கு பிரதேச செயலகப் பிரிவிலுள்ள நெடுங்கேணி பிரதேசத்தின் வெடுக்குநாறிமலையில் அமைந்துள்ள ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தில் வழிபாடுகள் மேற்கொள்ளும் விடயத்தில் நீதிமன்ற தீர்ப்பு வரும் வரை இந்துக்கள் பொறுமை காக்க வேண்டுமென தேசிய மரபுரிமைகள், அரங்குக்

» பக்கம் 02



# யாழ்.புதிய பஸ் தரிப்பிடத்தில் தனியார் பேருந்து சேவைகள்

## -எதிர்வரும் 15 ஆம் திகதிமுதல் ஆரம்பம்



தனியார் பேருந்துகளின் உள்ளூர், மற்றும் கொழும்பு உள்ளிட்ட வெளிமாவட்டங்களுக்கான இரவு நேர சேவைகள் எதிர்வரும் 15 முதல் புதிய நெடுந்தூர பேருந்து நிலையத்திலிருந்து ஆரம்பிக்கப்படும் என யாழ்ப்பாண மாநகர முதல்வர் அறிவித்துள்ளார்.

நேற்று மாலை அவர் ஊடகங்களுக்கு அனுப்பி வைத்துள்ள செய்திக் குறிப்பிலேயே இந்த விடயம் தெரி

» பக்கம் 02

# வரவு செலவுத் திட்டத்தில் 3 ஆம் மதிப்பீடு மீதான வாக்கெடுப்பு இன்று

பா.கிருபாகரன், ந.ஜெயகாந்தன்

பொதுஜன பெரமுன அரசின் எதிர்வரும் 2022 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தின் அமைச்சுக்கள், இராஜாங்க அமைச்சுக்களின் குழு நிலை விவாதமான மூன்றாம் மதிப்பீடு மீதான வாக்கெடுப்பு இன்று வெள்ளிக்கி


» பக்கம் 02

# பால்மாவை இறக்க டொலரை வழங்கவும்

## -இறக்குமதியாளர்கள் சங்கம் கோரிக்கை-

க.பிரசன்னா

நாட்டில் பால்மாவுக்கான தட்டுப்பாடு நிலவுகின்ற நிலையில் தேவையான பால்மாவினை இறக்குமதி செய்வதற்கு தேவையான டொலர்



களை வழங்குமாறு நிதி அமைச்சிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக பால்மா இறக்குமதியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

நாட்டில் டொலர் தட்டுப்பாடு காரணமாக பால் மா இறக்குமதியில் மீண்டும் சிக்கல் ஏற்பட்டுள்ளது. பால் மா இறக்குமதி செய்தமைக்கான கட்டணம் கடந்த ஜனவரி மாதம் முதல் அந்த வெளிநாட்டு நிறுவனங்களுக்கு வழங்கப்பட

» பக்கம் 02

# அரச சேவைக்கு ஆட்சேர்ப்பு அடுத்த வருடமும் இல்லை



அடுத்த வருடமும் வாகன இறக்குமதிக்கு அனுமதி வழங்கப்பட மாட்டாது என நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அதேநேரம் அடுத்த வருடமும் அரச துறைக்கான புதிய ஆட்சேர்ப்புகளுக்கு அனுமதி வழங்கப்பட

» பக்கம் 02

## வரவு செலவு... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ழமை மாலை 5 மணிக்கு இடம்பெறவுள்ளது.

இலங்கையின் 76ஆவது வரவு செலவுத்திட்டத்தை நிதியமைச்சர் பசில் ராஜபக்ச நிதியமைச்சர் என்ற வகையில் முதல் முறையாக கடந்த நவம்பர் மாதம் 12 ஆம் திகதி சபையில் சமர்ப்பித்து உரை நிகழ்த்தினார் .2022 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்ட சட்டமூலம் ஒக்டோபர் மாதம் 7ஆம் திகதி நிதி அமைச்சர் பசில் ராஜபக்சவினால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிலையிலேயே அதன் இரண்டாவது வாசிப்பு கடந்த 12 ஆம் திகதி நிதி அமைச்சர் பசில்ராஜபக்சவினால் சபையில் முன்வைக்கப்பட்டு சுமார் இரு மணிநேரம் வரவு செலவுத்திட்ட உரையாற்றியிருந்தார்.

இந்த வரவு செலவுத்திட்டத்தின் இரண்டாம் மதிப்பீடு மீதான விவாதம் மறுநாள் 13 ஆம் திகதி சனிக்கிழமை 15 ஆம் திகதி திங்கட்கிழமை, 16 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை 17 ஆம் திகதி புதன்கிழமை .19 ஆம் திகதி வெள்ளிக்கிழமை 20 ஆம் திகதி சனிக்கிழமை 22 ஆம் திகதி திங்கட்கிழமை அடக்கிய 7 நாட்கள் இடம்பெற்று திங்கட்கிழமை மாலை 5 ,10 மணிக்கு இரண்டாம் மதிப்பீடு மீதான வாக்கெடுப்பு இடம்பெற்றது.

2022ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு 93 மேலதிக வாக்குகளினால் நிறைவேற்றப்பட்டது.

2022ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டத்தின் இரண்டாம் வாசிப்புக்கு ஆதரவாக 153 வாக்குகளும் எதிராக 60வாக்குகளும் அளிக்கப்பட்ட நிலையிலேயே 93 மேலதிக வாக்குகளினால் நிறைவேற்றப்பட்டது.

இந்நிலையில் வரவு செலவுத் திட்டத்தின் குழு நிலை மீதான விவாதத்திற்கு 23ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முதல் 10 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரையான ஞாயிறு தவிர்ந்த 16 நாட்கள் ஒதுக்கப்பட்டு விவாதங்கள் இடம்பெற்ற நிலையிலேயே மூன்றாம் மதிப்பீடு மீதான வாக்கெடுப்பு இன்று 10 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு இடம்பெறவுள்ளது.

## பால்மாவை இறக்க ... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வில்லை.

இதற்கு தேவையான அமெரிக்க டொலர்களை வழங்குமாறு நிதி அமைச்சிடம் கோரிக்கை விடுத்துள்ளதாக பால் மா இறக்குமதியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

முன்னதாக டொலர் தட்டுப்பாடு காரணமாக துறைமுகத்தில் தேங்கியிருந்த பால்மா கொள்கலனை வெளியிடுவதில் தாமதம் ஏற்பட்ட நிலையில் பால்மாக்களுக்கான விலையில் அதிகரிப்பு மேற்கொள்ளப்பட்டது. அத்துடன் பால்மாவினை கொள்வனவு செய்வதற்கு 5 - 7 யோகட்களை கொள்வனவு செய்ய வேண்டுமென்ற நிபந்தனையும் காணப்பட்டது.

இதேவேளை, நாட்டின் சில பகுதிகளில் ஏற்கனவே குறிப்பிட்ட வகை பால் மாக்கள் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்ட சில கடைகளில் வேறு வகை பால் மாக்களை கொள்வனவு செய்வதற்கு நிபந்தனைகள் உள்ளதாகவும் நுகர்வோர் தெரிவித்துள்ளனர்.

## வெடுக்குநாறி மலையில் ... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கலைகள் மற்றும் கிராமியக் கலைகள் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர் விதுர விக்ரமநாயக தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்ற வாய் மூல விடைக்கான வினாவின்போது தமிழ் தேசியக்கூட்டமைப்பின் வன்னி மாவட்ட எம்.பி.யான சார்ள்ஸ் நிர்மலநாதன் எழுப்பிய நெடுங்கேணி பிரதேசத்தின் வெடுக்கு நாறிமலையில் அமைந்துள்ள ஆதிலிங்கேஸ்வரர் ஆலய வருடாந்த திருவிழாவை கடந்த 2 ஆண்டுகளாக தொல்பொருள் திணைக்களம் நடத்த விடாமல் தடைசெய்துள்ளமை தொடர்பான கேள்விக்கு பதிலளிக்கையிலேயே இராஜாங்க அமைச்சர் விதுர விக்ரமநாயக இவ்வாறு தெரிவித்தார்,

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில், வவுனியா-வடக்கு பிரதேச செயலகப் பிரிவிலுள்ள நெடுங்கேணி பிரதேசத்தின் வெடுக்கு நாறிமலையில்அமைந்துள்ள ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளில் அங்கு பௌத்த மடாலயம் ஒன்றின் இடி பாடுகளே இருப்பதாக தொல்பொருளியலாளர்கள் அறிக்கையிட்டுள்ளனர். அத்துடன் இவ்விடயம் தற்போது நீதிமன்ற விசாரணையில் உள்ளது என்றார்.

இதன்போது மேலதிக கேள்வியை எழுப்பிய சார்ள்ஸ் நிர்மலநாதன் எம்.பி. ,இவ்வாறான கேள்விகளுக்கு நீங்கள் நேர்மையாகவும் சரியாகவும் பதிலாக வேண்டுமானால் முதலில் தமிழர்களும் பௌத்தர்களாக இருந்தார்கள் என்பதனை ஏற்றுக்கொள்ள வேண்டும். இதற்கான ஆதாரங்கள் பாளி மொழி வரலாற்றில் கூட உள்ளன . நாம் குறிப்பிட்ட இடத்தில் தமிழ் பௌத்தர்கள் வாழ்ந்ததற்கான அடையாளமே அது. ஆகவே அந்த இடத்தில் தமிழர்கள் வாழ்ந்ததற்கான ஆதாரம் உள்ளது.

இவ்வாறான இடங்கள் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த போதுகூட அவர்கள் எந்தமதத்தின் தொல்பொருட்களையும் அழித்தது கிடையாது. ஏனெனில் விடுதலைப்புலிகளோ தமிழர்களோ மதங்கள்,இனங்களுக்கு எதிரானவர்கள் அல்ல.

1000 வருடங்களுக்கு முன்னர் அனுராதபுரம் மாவட்டத்தில் 20 இந்துக்கோயில்கள் இருந்ததாக ஆய்வுகள், வரலாறுகள் உள்ளன. எனவே வவுனியா-வடக்குபிரதேச செயலகப் பிரிவி லுள்ள நெடுங்கேணி பிரதேசத்தின் வெடுக்கு நாறிமலையில்அமைந்துள்ள ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தில் வழிபாடுகள் மேற்கொள்ள இந்துக்கள் அனுமதிக்கப்படுவார்களா இல்லையா என்பதற்கு பதில் கூறுங்கள் என்றார்.

இதற்கு இராஜாங்க அமைச்சர் விதுர விக்ரமநாயக பதிலளிக்கையில், நாம் இந்துக்களுக்கு எதிரானவர்கள் அல்ல. அவர்களின் வழிபாட்டு உரிமைகள் பறிக்கும் நோக்கமும் எமக்கில்லை. ஆனால் தொல்பொருள் இடங்கள் பாதுகாக்கப்படவேண்டும். அதே வேளை ஆதிலிங்கேஸ்வரர் ஆலய வழிபாடுகள் தொடர்பில் வவுனியா நீதிமன்றத்தில் வழக்கு விசாரணையில் உள்ளது. எனவே அந்த வழக்கு முடியும் வரை இந்துக்கள் பொறுமை காக்க வேண்டும் என்றார்.

## நீதி அமைச்சரே... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

துடன் சர்வதேசத்திற்கு கொடுத்த வாக்குறுதிகளை மீறும் செயல் எனத் தெரிவித்த தமிழ் தேசியக்கூட்டமைப்பின் பேச்சாளரும் யாழ் மாவட்ட எம்.பி.யுமான எம்.ஏ.சுமந்திரன் .இந்த ஒரேநாடு ஒரே சட்டம் செயலணியில் சுய மரியாதையை கொண்டுள்ள எந்த தமிழரும் அங்கம் பெற முடியாது எனவும் கூறினார்.

பாராளுமன்றத்தில் நேற்று வியாழக் கிழமை இடம்பெற்ற நிதி ஒதுக்கீடுகள் மீதான குழு நிலை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்த சுமந்திரன் எம்.பி. மேலும் கூறுகையில்,

நீதி அமைச்சர் உறுதியில்லாத நிலையில் இந்த அமைச்சில் உள்ளார். அவர் தனது அமைச்சு பதவியை இராஜிநாமா செய்ய முயற்சிப்பதாக கடந்த காலங்களில் ஊடகங்கள் மூலம் அறிந்துகொண்டோம். அவர் தனது அமைச்சு பதவியை இராஜிநாமா செய்ய முயற்சித்தும் அதனை செய்ய முடியாத நிலையில் உள்ளார். சட்டம் படித்த அவரால் அதனை செய்ய முடியும்,எனினும் அதனை செய்ய முடியாத நிலை அவருக்குள்ளது.

அதேபோல் நீதி செயற்பாடுகளில் அரசின் தலையீடுகள் காணப்படுகின்றன . முன்னாள் கடற்படை தளபதி வசந்த கரன்னகொடவை வடமேல் மாகாண ஆளுநராக நியமிக்கவுள்ளதாக செய்திகளில் அறிந்து கொண்டேன். (நியமனம் இடம்பெற முன்னர் பேச்சு) காலஞ்சென்ற முன்னாள் ஆளுநர் ராஜா கொல்லுரேக்கு பதிலாக கரன்னகொடவை நியமிக்கவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. காலஞ்சென்ற முன்னாள் ஆளுநர் ராஜா கொல்லுரேவிற்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக்கொள்ளும் அதே நேரம்,11 இளைஞர்கள் கடத்தல் மற்றும் திருகோணமலை கடற்படை முகாமில் அவர்களை கொலை செய்த வழக்கில் வசந்த கரன்னகொட சந்தேகநபராக உள்ளார். அவ்வாறான ஒருவரை சட்டமா அதிபர் அவசர அவசரமாக நியாயப்படுத்தி, அவரது வழக்குகளை நீக்கி அவரை விடுவிக்க நடவடிக்கை எடுக்கின்றார்.

இறந்தவர்களின் குடும்பத்தினர் இந்த செயற்பாடுகளுக்கு நியாயம் கோரி போராடிக்கொண்டிருக்கும் நிலையில் அதற்கான தீர்ப்பு கிடைக்கும் என நீண்ட காலமாக காத்திருந்து ஓரளவேனும் நீதி நிலைநாட்டப்படும் சூழ்நிலை உருவாக்கி வந்த நிலையில் மீண்டும் வழக்கு பின்வாங்கப்பட்டுள்ளது. அவரை வடமேல் மாகாண ஆளுநராக நியமிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. குற்றப்பத்திரங்கள் மீளப்பெற்றுக் கொள்ளப்படுகின்றன. சட்டமா அதிபர் உண்மையில் சுயாதீன நபராக இருக்க வேண்டும், அரசியல் நியமமாக இருந்தாலும் கூட செயற்பாடுகள் சுயாதீனமாக இருக்க வேண்டும். ஆனால் அதனை அவதானிக்க முடியவில்லை.

அதேபோல் நீதிமன்றம் குற்றவாளியாக அறிவித்த, இன்னொரு வழக்கில் சந்தேகநபராக உள்ள ஒருவரை செயலணி ஒன்றின் தலைவராக அரசாங்கம் நியமித்துள்ளது. இதற்கு நீதி அமைச்சர் எதிர்ப்பை வெளிப்படுத்தியும் அதில் மாற்றம் ஏற்படவில்லை, அதேபோல் தமிழர்கள் இந்த செயலணியில் நியமிக்கப்படவில்லை, அது நல்ல விடயம் என்றே கருதுகின்றேன். சுய மரியாதையை கொண்டுள்ள எந்த தமிழரும் இந்த செயலணியில் அங்கம் பெற முடியாது. ஒரு சிலர் தமது சுய மரியாதையை இழந்து இந்த செயலணியில் உள்ளனர் என்றார்.

## வடமேல் ஆளுநராக ... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மனம் வழங்கப்பட்டுள்ளது. 2008 மற்றும் 2009ஆம் ஆண்டுகளில் 11 இளைஞர்கள் கடத்தப்பட்ட வழக்கில் முன்னாள் கடற்படை தளபதி வசந்த கரன்னாகொடவிற்கு எதிராக குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டிருந்தன. எனினும், 11 இளைஞர்கள் கடத்தப்பட்ட வழக்கில் முன்னாள் கடற்படை தளபதி வசந்த கரன்னாகொட மீது குற்றச்சாட்டுகளை தொடர முடியாது என சட்டமா அதிபர் திணைக்களம் நீதிமன்றத்தில் அறிவித்திருந்தது.

இந்தநிலையிலேயே தற்போது கடற்படையின் முன்னாள் தளபதி வசந்த கரன்னாகொட வடமேல் மாகாண ஆளுநராக நியமிக்கப்பட்டுள்ளார்.

## அரச சேவைக்கு ... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாட்டாது என்றும் பால் மா இறக்குமதியும் கட்டுப்படுத்தப்படும் என்றும் நிதி அமைச்சர் கூறினார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றிய அமைச்சர், அந்நிய செலாவணி பற்றாக்குறையின் தீவிரத்தன்மையே இந்த தீர்மானங்களை எடுக்கக் காரணம் என்றும் சுட்டிக்காட்டினார்.

## யாழ். புதிய ... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விக்கப்பட்டுள்ளது.

தனியார் பேருந்தின் உள்ளூர் சேவை பஸ்கள் நெடுந்தூர பேருந்து நிலையத்தில் இருந்து புறப்பட்டு தற்போது இயங்கி வரும் இடங்களில் 10 நிமிடங்கள் தரித்து நின்று பயணிகளை ஏற்றிச்செல்லும். அதேபோல் வெளியிடங்களில் இருந்து வரும் பிரயாணிகள் நெடுந்தூர பேருந்து நிலையத்தில் இறக்கப்படுவர்.

இ.போ.ச. பேருந்து நிலையத்திலிருந்து புறப்படும் வெளிமாவட்டங்களுக்கும் செல்லும் நீண்ட தூரத்திற்கு பயணிக்கும் பேருந்துகள் ஆஸ்பத்திரி வீதியினூடாக சத்திரச்சந்தியை அடைந்து அங்கிருந்து கே.கே.எஸ் வீதியூடாக சென்று பிரதான வீதியை அடைந்து வெளிமாவட்டங்களுக்கான பயணத்தினை மேற்கொள்ளும்.

வெளிமாவட்டங்களில் இருந்து வரும் பேருந்துகளும் இப் பாதையையே பயன்படுத்த வேண்டும். இப்பாதை ஒழுங்குமுறையானது உடனடியாக நடைமுறைப்படுத்தப்படுகிறது.

இ.போ.ச பேருந்து நிலையத்திலிருந்து புறப்படும் வெளிமாவட்டங்களுக்குச் செல்லும் நீண்ட தூர பேருந்துகள் ஆஸ்பத்திரி வீதியூடாக வேம்படிச் சந்திக்கு செல்வது தடை செய்யப்பட்டுள்ளது என்றும் முதல்வர் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.(ச-40,75)

## அரசை வீழ்த்த ... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தாக இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்ற வாய்மூல விடைக்கான வினா நேரத்தில் ஜே.வி.பி எம்.பி. அனுரகுமார திசாநாயக்க எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிக்கும் போதே இவ்வாறு அவர் தெரிவித்தார்.

அரசை வீழ்த்துவதற்கு சில சக்திகள் வலையமைப்பாக செயற்படுகின்றன. அந்த வலையமைப்பானது அரசுக்கும் ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ஷவுக்கும் எதிராக பாராளுமன்றத்திலும் பாராளுமன்றத்திற்கு வெளியிலும் அது தொடர்பான நடவடிக்கைகளை முன்னெடுத்து வருவதாக ஊகிக்க முடிகிறது.

நாட்டின் தற்போதைய பிரச்சினைகளுக்கான சவாலை நாம் ஏற்றுக்கொள்கின்றோம். 2022ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டம் மூலம் அனைத்து பிரச்சினைகளுக்கும் நாம் தீர்வு காண்போம் என்றார்.

## பொதுச் சேவையை ... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

றின் அடிப்படையில் சேவைகளைத் தடுக்க முடியாது.

சில சமயங்களில் மக்களின் பிரச்சினைகளுக்கான தீர்வுகளை வழங்கக் கூடாது என்று திட்டமிட்டு நேரத்தை செலவிடுகிறோமா? அல்லது அரசியலாகப் பார்க்க முயற்சிக்கிறோமா என எண்ணத் தோன்றுகிறது எனவும் ஆளுநர் கூறியுள்ளார்.

பிரச்சினைகளை அணுகும் போது அதிகாரிகள் தடுக்கப்பட்டிருந்தால் அல்லது உங்கள் செயல்பாடுகளை மேற்கொள்ளாமல் இருக்க அழுத்தம் கொடுத்தால் ஆளுநரிடம் நேரடியாக முறையிட்டால் உங்களைப் பாதுகாப்போம். எனவே தவறான வழிகளில் செல்வோர் தயவுசெய்து மாறுங்கள். முடியாவிட்டால் வெளியேற வேண்டும். இல்லாவிட்டால் வெளியேற்றப்படுவார்கள் என ஆளுநர் தெரிவித்துள்ளார்.

அதிகாரிகளின் செயற்பாடுகளை கண்காணித்து இது தொடர்பில் அறிவுறுத்துமாறு வடமாகாண பிரதம செயலாளர் மற்றும் ஆளுநரின் செயலாளருக்கு வடமாகாண ஆளுநர் எழுத்து மூலம் அறிவித்தல் விடுத்துள்ளார். (ச-75)

## குற்றவாளிகள் ... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்ற நீதி அமைச்சு, சிறைச்சாலைகள் முகாமைத்துவம் மற்றும் சிறைக்கைதிகள் புனர்வாழ்வளிப்பு இராஜாங்க அமைச்சு ஆகியவற்றின் நிதி ஒதுக்கீடுகள் மீதான குழு நிலை விவாதத்தில் உரையாற்றிய போதே இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் கூறுகையில்,

இந்த நாட்டில் பாரிய குற்றவாளிகள், கொலைகாரர்கள் திருடர்களுக்கு குற்றத்தீர்ப்பு வழங்காது விடுதலை செய்யப்படும் நிலைமையே காணப்படுகின்றது. நாட்டின் நீதித்துறையின் தரம் மற்றும் பெறுமதி எந்தளவில் உள்ளது என்பதற்கு இவை நல்ல எடுத்துக்காட்டாக உள்ளது. இலங்கையில் கொலைகாரர்கள், கொள்ளைக்காரர்கள் பலர் அரச நண்பர்களாக இருக்கின்ற காரணத்தினால் விடுவிக்கப்படுகின்றனர்.

பயங்கரவாத தடைசட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர்கள் இன்றும் நீண்ட காலமாக சிறையில் உள்ளனர். சர்வதேச நியமங்களுக்கு அமைய ஏனைய நாடுகளில் பயங்கரவாத தடை சட்டத்தின் கீழ் கைது செய்யப்படுபவர்கள், எந்த காரணமும் இல்லாவிட்டால் நீண்டகாலம் தடுத்து வைக்கமாட்டார்கள். அரசின் தனி நிலைப்பாட்டில் இவர்கள் நீண்ட காலம் சிறையில் இருக்கும் அதே வேளையில், குற்றவாளிகள் வெளியில் உள்ளனர். இதுதான் இலங்கையின் சட்டம் என்றார்.

## கடந்த இரண்டு மாதங்களில் ... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெற்ற நீதி அமைச்சு, சிறைச்சாலைகள் முகாமைத்துவம் மற்றும் சிறைக்கைதிகள் புனர்வாழ்வளிப்பு இராஜாங்க அமைச்சு ஆகியவற்றின் நிதி ஒதுக்கீடுகள் மீதான குழு நிலை விவாதத்தில் உரையாற்றிய போதே இந்த வேண்டுகோளை விடுத்த அவர் மேலும் கூறுகையில்,

2009 ஆம் ஆண்டு 12000 வரையிலான போராளிகள் சரணடைந்தார்கள் அவர்கள் புனர்வாழ்வளிக்கப்பட்டு மீண்டும் சமூகத்துடன் இணைக்கப்பட்டார்கள்.ஆனால் அதனைவிட சிறுசிறு காரணங்களினால் கைது செய்யப்பட்டு குற்றப் பத்திரிக்கை முன்வைக்கப்படாது பல தமிழ் இளைஞர்கள் சிறைகளில் பலவருடங்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.அவர்களின் விடுதலையில் கவனம் செலுத்துமாறு நீதி அமைச்சரிடம் வேண்டுகோள் விடுக்கின்றேன்.

நான் சிறையில் இருக்கும்போது அவர்கள் தமது வேதனைகளை என்னிடம் கூறினார்கள். எனவே அவர்களின் விடுதலை சம்பந்தமாக சட்டமா அதிபர் திணைக்களத்திலே இன்னும் பல வழக்குகள் குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்படாமல் உள்ளன. பல இளைஞர்களின் எதிர்காலம் கேள்விக்குறியாகவுள்ளது.எனவே இது சம்பந்தமாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். இதனை விட கடந்த 2 மாதங்களுக்குள்ளே 40,45 தமிழ் இளைஞர்கள் புலிகளின் மீள் எழுச்சி என்ற தலைப்பில் கைது செய்யப்பட்டு பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழே தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள். இவர்கள் 20 வயது 22 வயது இளைஞர்களாகவுள்ளனர். 2009 ஆம் ஆண்டில் இவர்கள் 10 வயதைக் கொண்டவர்களாகவே இருந்திருப்பார்கள். இன்று இவர்கள் வட்ஸ் அப்பில் முகப்புத்தகத்தில் சில செய்திகளை பகிர்ந்ததற்காக அவர்கள் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள் . இவர்களுக்கு வழக்கு பேச பணம் இல்லை. பெற்றோர்கள் கிளிநொச்சியில் முல்லைத்தீவில் மட்டக்களப்பில் என்று இருக்கின்றார்கள். எனவே இவர்கள் விடயத்தில் சட்டமாஅதிபர் திணைக்களம் கவனம் செலுத்தி அவர்களின் விடுதலைக்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அதேபோன்றே இந்த நாட்டில் நடந்த உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின்னர் பலர் கைது செய்யப்பட்டார்கள். அதில் 40-45 பேருக்கு வழக்கு தொடுக்கப்பட்டுள்ளது. ஏனையவர்கள் 250 பேர் மட்டில் வழக்கு தொடரப்படாமல் இரு வருடங்களுக்கு மேலாக சிறையில் வாடிக்கொண்டிருக்கின்றனர். அவர்களைப்பொறுத்தவரையில் ஒரு நாள் வகுப்புக்கு போனதாக சில சில செயலமர்வுகளில் பங்கு பற்றியதாக சிறு சிறு காரணங்களுக்காக கைது செய்யப்பட்டு பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள். இவ்வாறானவர்களுக்கு பிணையாவது வழங்குவதுபற்றி நீங்கள் சிந்திக்க வேண்டும். ஏனெனில் இவர்கள் மீது ஆயிரக்கணக்கான குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளதால் இவற்றை விசாரிக்க பல் வருடங்கள் செல்லலாம்.எனவே இந்த விடயத்தில் கவனம் செலுத்த வேண்டும் என்றார்.

# வீடுகளில் பராமரிக்கப்படும் கொரோனா தொற்றாளர் தொகை திடீர் அதிகரிப்பு

### -விசேட வைத்திய நிபுணர் மல்காந்தி கல்ஹேன-

கொரோனா தொற்றுக்குள்ளாகிப் பாதிக்கப்பட்டு வீடுகளில் சிகிச்சை பெற்று வரும் நோயாளிகளின் எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்பட்டு வருவதாக சுகாதார அமைச்சின் ஒருங்கிணைந்த கொவிட் தொற்றாளர் வீட்டு பராமரிப்பு திட்டத்தின் தலைவர் விசேட வைத்திய நிபுணர் மல்காந்தி கல்ஹேன தெரிவித்துள்ளார்.

அறிகுறியற்ற மற்றும் லேசான அறிகுறிகளைக் கொண்ட கொவிட்-19 நோயாளிகளை வீடுகளில் வைத்துப் பராமரிக்கும் செயற்றிட்டத்தின் கீழ் சிகிச்சை பெறுவோரின் எண்ணிக்கை கடந்த 3 வாரங்களாக அதிகரித்து வருவதாகவும் அவா் கூறினார்.

தற்போது இந்தத் திட்டத்தின் கீழ் 4,295 கொவிட் நோயாளிகள் வீடுகளில் வைத்துக் கண்காணிக்கப்பட்டு வருகின்றனர் எனவும் அவர் குறிப்பிட்டார்.

மீண்டும் தொற்று நோயாளர் தொகை நாட்டில் அதிகரித்து வரும் நிலையில் முககவசங்களை அணிதல், கைகளை அடிக்கடி கழுவுதல் மற்றும் சமூக இடைவெளி பேணுதல் போன்ற அடிப்படை சுகாதார வழிகாட்டுதல்களை கண்டிப்பாகப் பின்பற்ற வேண்டியதன் அவசியத்தையும் விசேட வைத்திய நிபுணர் மல்காந்தி கல்ஹேன வலியுறுத்தினார்.

அத்துடன் கொவிட் தொற்று நோயில் இருந்து பாதுகாப்பு பெற கொவிட் தடுப்பூசிகளைப் பெற்றுக்கொள்ளுமாறும் அவர் அறிவுறுத்தினார்.

இதேவேளை, தற்போது வைத்தியசாலைகளில் போதிய இடவசதி மற்றும் ஏனைய வசதிகள் இருப்பதால் வயது உள்ளிட்ட காரணிகளை கருத்திற்கொண்டு அறிகுறியற்ற கொவிட்-19 நோயாளிகளையும் கூட வைத்தியசாலைகளில் அனுமதிப்பதில் எவ்வித தடையும் இல்லை என சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்திய நிபுணர் ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார்.

# இலங்கைப் பணியாளர்களுக்கு ஜப்பானில் சிறந்த வேலை வாய்ப்பு

### -புதிய ஜப்பான் தூதுவர் பிரதமரிடம் உறுதி-

இலங்கையில் பயிற்சிபெற்ற பணியாளர்களை பணியில் ஈடுபடுத்துவதற்கு ஜப்பான் அரசாங்கம் ஆர்வமாக உள்ளதாக இலங்கைக்கான புதிய ஜப்பான் தூதுவராக அண்மையில் கடமைகளை பொறுப்பேற்ற மிசிகொஷி ஹெதெகி நேற்று அலரி மாளிகையில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை சந்தித்த போது தெரிவித்தார்.

கடந்த சில ஆண்டுகளில் குறைந்த திறன் மற்றும் நிபுணத்துவம் கொண்ட பணியாளர்களை ஆட்சேர்ப்பு செய்வது தொடர்பாக இலங்கைக்கும் ஜப்பானுக்கும் இடையே இரு புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

வெளியுறவுத்துறை அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவிக்கும் வகையில் முறையான பயிற்சி பெற்ற பணியாளர்களை ஆட்சேர்ப்பு செய்யும் வேலைத்திட்டத்தின் கீழ் இலங்கையிலிருந்து ஜப்பானுக்கு 14 துறைகளின் கீழ் பணியாளர்களை சேவையில் இணைத்துக் கொள்வதற்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

தமது பதவிக்காலத்திற்குள் இந்நாட்டின் முதலீட்டை மேம்படுத்துவது தொடர்பில் கவனம் செலுத்துவதற்கு ஆர்வமாக உள்ளதாக மிசிகொஷி ஹெதெகி தெரிவித்தார். இதுவரை இலங்கையில் 75 ஜப்பானிய முதலீட்டு நிறுவனங்கள் செயற்பட்டு வருகின்றன.

கடந்த 15 ஆண்டு காலப்பகுதிக்குள் சுமார் 382 மில்லியன் ஜப்பானிய டொலர் முதலீடு மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், அதனூடாக 12,000 இற்கும் அதிகமான வேலைவாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன.

# பண்டாரிக்குளத்தின் அலைகரை பகுதியை அத்துமீறி பிடித்த 6 பேரும் வெளியேறவும்

### -வவுனியா நீதிமன்று தீர்ப்பு-

வவுனியா பண்டாரிக்குளத்தின் அலைகரை பகுதியினை அத்துமீறி பிடித்த ஆறுபேர் உடனடியாக அவ்விடத்தினை விட்டு வெளியேறவேண்டும் என்று வவுனியா நீதிமன்று தீர்ப்பு வழங்கியுள்ளதாக வவுனியா மாவட்ட கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் உதவி ஆணையாளர் எஸ்.விஸ்ணுதாசன் தெரிவித்தார்.

இதுதொடர்பாக அவரால் நடத்தப்பட்ட ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் கூறுகையில்,

வவுனியா மாவட்டத்தில் குளங்களிற்கு சொந்தமான காணிகளை அடாத்தாக பிடித்தல் மற்றும் வயற்காணிகளை அடாத்தாக பிடித்து மண்நிரவி வீடுகள் அமைக்கும் செயற்பாடுகள் தொடர்ந்து இடம்பெற்று வந்துள்ளன.

இது தொடர்பாக வவுனியா கமநலஅபிவிருத்தி திணைக்களத்தின் பிரதி ஆணையாளரால் 2020 ஆம் ஆண்டளவில் வவுனியா பண்டாரிக்குளத்தின் அலைகரை பகுதியில் குளத்திற்கு சொந்தமான காணியினை அத்துமீறி பிடித்தமை தொடர்பாக 32 வழக்குகள் தொடரப்பட்டன.

இதனடிப்படையில் அந்த வழக்குகளில் 6 வழக்குகளிற்கான தீர்ப்பு நீதிமன்றால் புதன்கிழமை வழங்கப்பட்டுள்ளது.

அந்தவகையில் குறித்த 6 நபர்களும் அந்த இடத்தினை விட்டு வெளியேற வேண்டும் என்று நீதிமன்றால் கட்டளை பிறப்பிக்கப்பட்டுள்ளது. மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காகவே இந்தவிடயத்தினை நாம் தெரியப்படுத்துகின்றோம். ஏனெனில் குளக்காணிகளை அத்துமீறி பிடிக்கும் செயற்பாடுகள் தொடர்ந்தும் நடைபெற்றுவருகின்றன . இப்படியான தீர்ப்புக்கள் எதிர்காலத்தில் இவ்வாறான அத்துமீறல்களை குறைப்பதற்கான ஆரம்பகட்டமாக இருக்கும் என நாம் பார்கின்றோம். குளங்களையும் வயல்களையும் பாதுகாக்கவேண்டியது எமது எதிர்கால நீண்டகால தேவை. இதற்காகவே வழக்குகள் தாக்கல்செய்யப்பட்டன.

எனவே எமது மாவட்டத்தில் குளங்களை அடாத்தாக பிடித்தவர்களிற்கு எதிராக தொடர்ந்தும் சட்டநடவடிக்கை எடுக்கப்படும். எனவே பொதுமக்கள் காணிகளை கொள்வனவு செய்யும் போதும் வீடுகளை அமைக்கும்போதும் பொருத்தமான இடங்களை தெரிவுசெய்வது நன்மை பயக்கும்என்பதே எனது வேண்டுகோள். எனவே பொதுமக்களின் ஒத்துழைப்பினையும் நாம் வேண்டிநிற்கின்றோம் என்றார்

# விபத்தில் சிக்கிய தம்பாட்டி முதியவர் நேற்று உயிரிழந்தார்



யாழ்ப்பாணம் 4ஆம் குறுக்குத் தெரு பகுதியில் கடந்த 06ஆம் திகதி ஏற்பட்ட விபத்தில் சிக்கி படுகாயம் அடைந்திருந்த ஊர்காவற்றுறை தம்பாட்டியைச் சேர்ந்த முதியவர் சிகிச்சை பலனின்றி நேற்று உயிரிழந்தார்.

மோட்டார் சைக்கிளில் பயணித்த போது, லேணர்ஸ் வாகனம் மோதிய போதே குறித்த விபத்துச் சம்பவம் இடம்பெற்றது.

சம்பவத்தில் படுகாயம் அடைந்திருந்த தம்பாட்டியைச் சேர்ந்த 67 வயதான சின்னத்தம்பி இலட்சுமணன் என்ற முதியவரே படுகாயம் அடைந்திருந்தார். யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில் நேற்று அவர் உயிரிழந்ததாக அறிவிக்கப்பட்டது.

தம்பாட்டிக்கிராமத்தின் பாரம்பரிய கூத்துக் கலைஞரான அவர் கிராமத்தில் பாடல் பாடுவதிலும் வல்லவராக விளங்கியதுடன் வடக்கு மாகாண சபையின் சிறந்த கூத்துக் கலைஞனுக்கான விருதையும் ஊர்காவற்றுறை பிரதேச செயலக கூத்துக் கலைஞனுக்கான விருதையும் வென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (30)

# வடக்கில் கண்ணிவெடி அச்சுறுத்தல் உள்ள பகுதியிலும் தொல் பொருள் இடங்கள் உள்ளன

### -இராஜாங்க அமைச்சர் விதுர விக்ரமநாயக-

பா.கிருபாகரன் - ந.ஜெயகாந்தன்



வடக்கில் நிலக்கண்ணிவெடி அச்சுறுத்தல்கள் உள்ள இடங்களிலும் தொல் பொருள் இடங்கள் இருப்பதனால் அங்கும் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு அவையும் ஒதுக்கப்பட்ட இடங்களாக பிரகடனப்படுத்தப்படுமென தேசிய மரபுரிமைகள், அரங்குக் கலைகள் மற்றும் கிராமியக் கலைகள் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர் விதுர விக்ரமநாயக தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை இடம்பெற வாய் மூல விடைக்கான வினாவின்போது தமிழ் தேசியக்கூட்டமைப்பின் வன்னி மாவட்ட எம்.பி.யான சார்ள்ஸ் நிர்மலநாதன் எழுப்பிய தொல்பொருள் திணைக்களத்தினால் வர்த்தமானி அறிவித்தல் மூலமாக வடக்கு மாகாணத்தில் சுவீகரிக்கப்பட்டுள்ள காணிகளின் அளவு, அக்காணிகள்அமைந்துள்ள பிரதேசங்கள் மற்றும் அக்காணிகள் சுவீகரி க்கப்பட்ட வருடங்கள் ஆகியன தொடர்பான கேள்விக்கு பதிலளிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் கூறுகையில்,

வடக்கில் யுத்த காலத்தில் பல இடங்களில் கண்ணிவெடிகள் புதைக் கப்பட்டுள்ளமையால் இப்போதும் அந்த இடங்கள் அச்சுறுத்தலான இடங்களாகவே உள்ளன. எனினும் தற்போது அங்கு கண்ணிவெடிகள் அகற்றும்பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன. இவ்வாறான பகுதிகளிலும் தொல்பொருள் இடங்கள் உள்ளன. இவற்றை ஆவணப்படுத்தும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. அதற்கமைய எதிர்காலத்தில் இவ்வாறான தொல்பொருட்கள் உள்ள இடங்கள் ஒதுக்கப்பட்ட இடங்களாக வர்த்தமானி மூலம் பிரகடனப்படுத்தப்படும் என்றார்.

# சட்ட பூர்வமாக வெளிநாடு சென்ற பணியாளர்களுக்கு மாத்திரமே காப்புறுதி

பா.கிருபாகரன், ந.ஜெயகாந்தன்

வெளிநாடுகளுக்கு செல்லும் இலங்கை பணியாளர்களுக்கான காப்புறுதியை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தில் பதிவு செய்து சட்டபூர்வமாக செல்பவர்களால் மாத்திரமே பெற்றுக்கொள்ள முடியும் என்றும், திருட்டுத்தனமாக செல்பவர்களின் பாதுகாப்பு தொடர்பில் தங்களால் ஒன்றும் செய்ய முடியாது என்றும் தொழில் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தின் போது, ஆளும் கட்சி உறுப்பினர் சாந்த பண்டார வெளிநாடு செல்லும் பணியாளர்களுக்கான காப்புறுதி தொடர்பில் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிக்கும் போதே அமைச்சர் இவ்வாறு கூறியுள்ளார்.

இதன்போது பதிலளித்த அமைச்சர் கூறுகையில்,

சட்டபூர்வமாக சென்றவர்களுக்கு காப்புறுதியை வழங்க முடியும். குறிப்பாக பாகிஸ்தானில் உயிரிழந்த பிரியந்த குமாரவுக்காக, அமைச்சரவை பத்திரமொன்றை சமர்ப்பித்து அவரின் குடும்பத்தினருக்கு 25 இலட்சம் கொடுப்பனவை வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. இந்த விடயத்தில் பாகிஸ்தான் பிரதமர் மற்றும் அரசாங்கம் இது தொடர்பில் எடுத்துள்ள நடவடிக்கைகளை நாங்கள் வரவேற்கின்றோம்.

இதேவேளை வெளிநாடுகளுக்கு செல்லும் அனைத்து வெளிநாட்டவர்களுக்காக காப்புறுதி திட்டமொன்றை நாங்கள் அறிமுகப்படுத்தியுள்ளோம். சட்டப்படி பதிவு செய்து செல்பவர்களுக்கு இது வழங்கப்படும். ஆனால் திருட்டுத் தனமாக சுற்றுலா வீசாவில் சென்று பணியாற்றுகின்றனர். அவ்வாறானவர்கள் தொடர்பில் எமக்கு பாதுகாப்பை வழங்குவதற்கு முடியாது.

இதேவேளை வெளிநாடுகளுக்கு செல்லும் பெண்களின் பாதுகாப்புகள் தொடர்பில் விசேட வேலைத்திட்டங்களை முன்னெடுத்துள்ளோம். இதில் முகவர்களுடன் நாங்கள் மோத வேண்டியுள்ளது. பணியாளர்களை அனுப்பும் போது முகவர்களுக்கு 10 இலட்சம் வரையில் கிடைக்கின்றன. ஆனால் பணியாளர்களுக்கு குறைந்தளவான தொகையே வழங்கப்படுகின்றன. இதனால் இது தொடர்பாக தேவையான சட்டதிட்டங்களை கொண்டு வர நடவடிக்கை எடுப்போம் என்றார்.

# மரக்கறி தோட்ட மின்சார வேலியில் சிக்கி 2 பிள்ளைகளின் தாய் மரணம்

தலவாக்கலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தலவாக்கலை சுரங்கப்பாதைக்கு கீழ் உள்ள சாந்த ஜனபதய எனும் பகுதியில் வீட்டிற்கு பின்புறத்தில் மரக்கறி தோட்டத்தில் பொருத்தப்பட்டிருந்த மின்சார வேலியில் சிக்கி 2 பிள்ளைகளின் தாயொருவர் மரணமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று மதியம் இடம்பெற்ற இச்சம்பவத்தில் உயிரிழந்தவர் ஏ.எம்.சந்திரலதா(வயது 48) என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

குறித்த வீட்டார்கள் தங்களது மரக்கறி தோட்டத்தை மிருகங்களிடமிருந்து பாதுகாப்பதற்காக மின்சார வேலியை சட்டவிரோதமாக பொருத்தியுள்ளனர்.

இந்தப் பெண் ஒவ்வொரு நாளும் தோட்டத்திற்கு செல்லும் போது மின்சாரத்தை துண்டித்துவிட்டு செல்வதாகவும் நேற்றைய தினம் அதனை துண்டிக்காது மறந்து சென்றதனால் இந்தச் சம்பவம் இடம்பெற்றிருக்கலாம் என பிரதேச வாசிகள் சந்தேகம் தெரிவிக்கின்றனர்.

உயிரிழந்தவரின் சடலம் நீதவானின் மேற்பார்வையின் பின் பிரேத பரிசோதனைக்காக நுவரெலியா மாவட்ட வைத்தியசாலைக்கு அனுப்புவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாக தலவாக்கலை பொலிஸார் தெரிவித்துள்ளனர். இச்சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை தலவாக்கலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# பிரபாகரன் செய்யாத ஒன்றை இரண்டு எரிவாயு நிறுவனங்கள் செய்துள்ளன

### -பிரபல தொலைக்காட்சி நிகழ்ச்சியில் தெரிவிப்பு-

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் செய்யாத ஒன்றை இரண்டு எரிவாயு நிறுவனங்கள் செய்துள்ளதாக தென்னிலங்கையில் இருந்து ஒளிபரப்பாகும் பிரபல தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது.

நாட்டில் அண்மைய நாட்களாக எரிவாயு வெடிப்பு சம்பவங்கள் அதிகளவில் பதிவாகியுள்ள நிலையில், அது குறித்த சர்ச்சைகளும் தற்போது தலைதூக்கியுள்ளன. எரிவாயு கொள்கலன்கள் மற்றும் அடுப்புக்கள் வெடிப்பது தொடர்பில் கொழும்பின் பிரபல தொலைகாட்சி நிகழ்ச்சி ஒன்றில் இந்த கருத்து பகிரப்பட்டுள்ளது.

முப்பது வருட போரின் போது விடுதலைப் புலிகளின் தலைவர் ஆங்காங்கே குண்டுகளை வெடிக்க வைத்தார். ஆனால் எரிவாயு நிறுவனங்கள் 2700 ரூபா பணத்தையும் பெற்றுக்கொண்டு ஒவ்வெரு வீடுகளுக்கும் குண்டுகளை அனுப்பி வைத்துள்ளது. பிரபாகரன் செய்யாத ஒன்றைத்தான் இந்த இரண்டு நிறுவனங்களும் செய்துள்ளதாக அந்த நிகழ்ச்சியில் கருத்து பரிமாறப்பட்டுள்ளது.

இதேவேளை, நாட்டில் அண்மைய காலமாக எரிவாயு வெடிப்பு சம்பவங்கள் நூற்றுக்கணக்கில் பதிவாகியிருந்தது. இந்த விவகாரம் பெரும் சர்ச்சைகளை ஏற்படுத்தியிருந்தது. இந்நிலையில், எரிவாயு சிலிண்டரின் கலவையில் ஏற்பட்ட மாற்றமே நாட்டில் பதிவான வெடிப்பு சம்பவங்களுக்கு காரணம் என இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவண்ண பாராளுமன்றில் ஒப்புக்கொண்டிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# அமெரிக்காவை கடுமையாக விமர்சித்து சீனத் தூதரகம்வெளியிட்ட விளம்பரம்

இலங்கையின் உள்ளூர் நாளிதழில் வெளியிடப்பட்ட கட்டண விளம்பரத்தின் ஊடாக இலங்கையின் சீனத் தூதரகம், அமெரிக்காவை கடுமையாக விமர்சித்துள்ளது.

சீனா மற்றும் இலங்கைக்கு அழைப்பு விடுக்கப்படாத, அமெரிக்காவின் ஜனநாயகத்திற்கான மெய்நிகர் உச்சி மாநாட்டை இலக்கு வைத்து இந்த பணம் செலுத்திய விளம்பரம் வெளியிடப்பட்டுள்ளது.

அதில், ஜனநாயக அமைப்பில் கட்டமைப்பு குறைபாடுகள் மற்றும் பிரச்சினைக்குரிய நடைமுறைகளை அமெரிக்கா கொண்டிருப்பதாக சீனா குற்றம் சுமத்தியுள்ளது. இந்தியா, பாகிஸ்தான், மாலைதீவு மற்றும் நேபாளம் ஆகியவை தெற்காசிய நாடுகளில் ஜனநாயகத்திற்கான உச்சி மாநாட்டில் கலந்து கொள்ள அழைக்கப்பட்டுள்ளன.

எனினும் உச்சி மாநாட்டுக்கு இலங்கையுடன் சீனாவும் ரஷ்யாவும் அழைக்கப்படவில்லை. ஜனாதிபதி ஜோ பைடன் 2021 டிசம்பர் 9ஆம் திகதியன்று அரசாங்கம், சிவில் சமூகம் மற்றும் தனியார் துறையின் தலைவர்களுக்காக ஒரு மெய்நிகர் உச்சிமாநாட்டை நடத்துகிறார். ஜனநாயகம் எதிர்கொள்ளும் சவால்கள் மற்றும் வாய்ப்புகள் குறித்து இந்த உச்சிமாநாட்டில் கவனம் செலுத்தப்படவுள்ளது.

# தொல்லியல், மரபுரிமை செயற்றிட்டங்களை உருவாக்குவது தொடர்பான கலந்துரையாடல்

தொல்லியல் மற்றும் மரபுரிமை செயற்றிட்டங்களை எவ்வாறு உருவாக்குவது? என்பது தொடர்பான கலந்துரையாடல் ஒன்று நாளை சனிக்கிழமை முற்பகல் 10.00மணிக்கு 199, கோவில் வீதி, நல்லூரிலுள்ள சமகாலக்கலை, கட்டடக்கலை மற்றும் வடிவமைப்புக்கான இலங்கை ஆவணக் காப்பகத்தில் இடம்பெறவுள்ளது.

லண்டன் எக்ஸஸ்ரர் பல்கலைக்கழகத்தினைச் சேர்ந்த கலாநிதி. கில் ஜுலெஃப் மற்றும் லண்டனைச் சேர்ந்த லெஸ்ரர் பல்கலைக்கழக பேராசிரியர் ரூத் யங் ஆகியோர் இக்கலந்துரையாடலில் பங்கேற்று உரையாடவுள்ளனர்.

இலங்கைத் தீவின் வடக்கு மற்றும் வடமேற்கில் புதிய தொல்லியல் மற்றும் மரபுரிமைசார் செயற்றிட்டங்களை எவ்வாறு அபிவிருத்தி செய்வது? குறிப்பாக கடந்த 500ஆண்டுகளில் பொருள்சார் பண்பாடு, கட்டடங்கள் மற்றும் நிலவுருக்கள் எவ்வாறு சமூக அடையாளங்கள், இடம் மற்றும் உடைமைகளின் உணர்வினை உருவாக்க உதவுகின்றன? எனச் சிந்திப்பதற்கான வாய்ப்பினை வழங்குவதாக இக்கலந்துரையாடல் அமையும் என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

மேலும், தொல்லியல் மற்றும் மரபுரிமையை ஆராய்வதற்கும் பாதுகாப்பதற்குமான புதிய முன்வைப்புகளைப் பரிசீலிப்பதாகவும் இந்நிகழ்வானது அமையவுள்ளது. இந்நிகழ்வில் தொல்லியல், பண்பாடு, கலாசாரத்துறை சார்ந்தவர்கள், மரபுரிமைச் செயற்பாட்டாளர்கள் மற்றும் ஆர்வமுடைய அனைவரும் கொவிட் 19 தொற்றுக்கமைய சுகாதார வழிகாட்டல்களுக்கு அமைய பங்கேற்க முடியும் என சமகாலக்கலை, கட்டடக்கலை மற்றும் வடிவமைப்புக்கான இலங்கை ஆவணக் காப்பகத்தின் முகாமையாளர் க. ஸ்ரீபன் அறிவித்துள்ளார்.

தினக்குரல்
THINAKKURAL
An Independent Daily Voice in Tamil
ஏசியன் மீடியா பப்ளிகேஷன் (பிரைவேட்) லிமிட்டட்
இலக்கம் : 207, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
ஆசிரிய பீடம்:- 0217388301, 0217388302, 0217388303
பக்ஸ்:- 0217388304 விளம்பரம்:- 0217388307, விநியோகம்:- 0217388309
வெள்ளிக்கிழமை 10 டிசம்பர் 2021 Friday 10th December 2021

## ஒருதினத்தை மட்டும் அனுஷ்டிப்பது அடிப்படை யதார்த்தத்தை மாற்றாது

வருடாந்தம் டிசம்பர் 10 இல் அனுசரிக்கப்படும் சர்வதேச மனித உரிமைகள் தினத்திற்கான கருப்பொருளொன்றை ஐ. நா. வெளியிடுகிறது. இந்த ஆண்டின் கருப்பொருள் 'சமத்துவம்,ஏற்றத் தாழ்வுகளைக் குறைத்தல், மனித உரிமைகளை மேம்படுத்துதல் ' என்பதாகும். 'சகலமனிதர்களும் சுதந்திரம்,கௌரவம், உரிமைகள், சமமான பிறப்புரிமை'என்று கூறப்பட்டாலும் துரதிர்ஷ்டவசமாக, உலகின் பலபாகங்களில் அடிப்படை மனித உரிமைகளும் சுதந்திரங்களும் அரசியலாக்கப்படுவதையும் குறிப்பாக இன , மத சிறுபான்மையினருக்கு எதிரான பாரபட்ச ங்கள் , துன்புறுத்தல்கள் இல்லாதொழிக்கப்படாமல் தொடர்ந்துகொண்டிருப்பதையும் அவதானிக்க முடியும்.வெறுப்பும் குரோதமும் அடிப்படை உரிமை மீறல்களுக்கு தூண்டுதலாக அமைகின்றன . ஐ.நா.பொதுச் சபை 1948 இல் மனித உரிமைகளுக்கான உலகளாவிய பிரகடனத்தை ஏற்றுக்கொண்டிருந்தது. அந்தப் பிரகடனம் அனைத்து மனிதர்களினதும் அடிப்படை உரிமைகளையும் விவரிப்பதுடன் இது மனித உரிமைகளின் முதலாவது உலகளாவிய அறிவிப்பாகவும் அமைகின்றது.

கொரோனா வைரஸ் தொற்றுநோய், சுற்றுச்சூழல் அழிவு, சமத்துவமின்மை , காலநிலை நெருக்கடி ஆகியவற்றின் பாதிப்புகளை உலகம் எதிர்கொள்ளும் போது, ஜனநாயக ரீதியாக தெரிவுசெய்யப்படும் அரசாங்கங்கள் உயரடுக்கினரிடமிருந்து அதிகாரத்தையும் வளங்களையும் மீட்டெடுத்து , மனித உரிமைகள் மற்றும் பொது மக்களின் நலன்களை முன்னிலைப்படுத்தவேண்டிய தருணம் மேலெழுந்துள்ளதாக உரிமைகளுக்கான செயற்பாட்டாளர்கள் கூறுகின்றனர். ஐ.நா. பொதுச் சபையானது மனித உரிமைகளுக்கான பிரகடனத்தை உருவாக்கி அதிகாரபூர்வமாக 1948 டிசம்பர்10 இல் அதனை உள்ளீர்த்துக்கொண்டிருந்தது. போர்க்காலத்தில் தோன்றியதிலிருந்து, இந்த சர்வதேச அமைப்பு உலகில் சமாதானத்தை நிலைநாட்ட முயற்சிக்கும் பொறுப்பை எடுத்துக்கொண்டது என்பது வெளிப்படையானது. மனித உரிமைகளை விளக்குவது மற்றும் கடைப்பிடிப்பது ஐ .நா. வின் முதல் முன்னுரிமைக்கான அம்சமாக குறிப்பிடப்பட்டுள்ளது.

மனித உரிமைகள் விவகாரத்தில் ஐ. நா. சபையின் நேர்மையை வெளிப்படுத்துவதும், சர்வதேச மனித உரிமைகள் தினத்தைக் கொண்டாடுவதும் விருதுகளை வழங்குவதும் பல்வேறு செயல்பாடுகளை ஏற்பாடு செய்வதும் ஊக்குவிக்களிக்கும் விடயமாக இருந்தாலும் ஏழு தசாப்தங்களுக்குப் பின்னரும் மனித உரிமைகள் குறித்த பிரகடனத்திற்கு அதன் உறுப்பு நாடுகள் மதிப்பளித்து வருவதாக கூறுவது எந்தளவிற்கு யதார்த்தபூர்வமானதென்பது முக்கியமான கேள்வி. அதேவேளை மனித உரிமைகள் விவகாரத்தில் எந்த ளவிலும் தனது ஆற்றலை நிரூபிப்பதில் உலகளாவிய நிறுவனம் வெற்றிபெற்றுள்ளதா? என்பதும் மற்றொரு கேள்வி. ஆனால் இதற்கான பதில் வெளிப்படையாக இல்லை. ஏனெனில் உலகில் பரந்த பகுதி போர்க்களங்களாக மாறியுள்ளன. அதேவேளை ஐ.நா. மட்டும் மனித உரிமைகளை பாதுகாக்கும் என எதிர்பார்க்க முடியாது. ஒவ்வொரு மட்டத்திலும் இந்த உரிமைகளைப் பாதுகாப்பதை உறுதிசெய்வது ஒவ்வொரு நாட்டினதும் சமூகங்களினதும் பொறுப்பாகும். மனித உரிமைகள் மீறப்படாத நாடொன்று இல்லையென்றே கூறவேண்டும். போர், பஞ்சம், பட்டினி, படுகொலைகள் போன்ற சில முக்கியமான விடயங்களுடன் மட்டும் மனித உரிமை மீறல்கள் நின்றுவிடவில்லை என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

உரிமைகள் சிறிய சம்பவங்களிலும் உள்ளன. அவை மீறப்படுவது பொதுவாக வெளிப்படுவதில்லை.அத்துடன் அவை மனித உரிமை மீறலாக அதிகளவுக்கு கருதப்படுவதுமில்லை. வறுமை காரணமாக பசி, வேலையில்லாத் திண்டாட்டம், நோய்களை எதிர்த்துப் போராட சுகாதார வசதிகள் இல்லாதமை , பயம் மற்றும் சமாதானம், பாதுகாப்புக்கு உத்தரவாதம் இல்லை என்ற பிரச்சினை, பயங்கரவாதம், அதிகாரம் மிக்கவர்களால் நலிந்த பிரிவினருக்கு அரசின் பாதுகாப்பு கிடைக்காதமை , நியாயமற்ற கைதுகள், விசாரணைக்கு உட்படுத்தப்படாமல் காவலில் வைத்திருப்பது அல்லது ஒழுங்கமைக்கப்பட்ட கலவரங்களுக்கு எதிராக நடுநிலையான பாதுகாப்புப் பொறிமுறையை உறுதி செய்யாமை போன்ற பிரச்சினைகள் உரிமை மீறல்களுடன் தொடர்புபட்ட பிரச்சினைகளாகும்.குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்படாமல் நீண்டகாலம் தடுப்புக் காவல்களில் வைக்கப்பட்டிருப்போர் காணாமலாக்கப்பட்டோரின் உறவுகளின் அவலநிலை, சொந்தக் காணிகளுக்கு திரும்பிச்செல்ல இடமளிக்கப்படாமை போன்றவையும் பாரியளவிலான மனித உரிமை மீறல்களுக்கு சான்றாக உள்ளது. உண்மையில் குழப்பமான ஒரு விசித்திரமான சூழல் எங்கும் நிலவுகிறது. சில பிரதேசங்கள் அராஜகத்தை எதிர்கொண்டுள்ளன. வெளியிடங்களைச் சேர்ந்த ஆக்கிரமிப்பாளர்கள் தங்களை வலுக்கட்டாயமாக திணித்துள்ளனர். பல இடங்களில் இனம் மற்றும் பிராந்திய தகராறு என்ற பெயரில் கொலைகளும் அராஜகங்களும் இடம்பெற்றுள்ளன .

சர்வதேச மட்டத்தில் அரசுகளுக்கிடையிலான ஒப்பந்தங்கள் மூலம் மனித உரிமைகளும் சட்டமாக மாறியுள்ளன .பல நாடுகளில் அரசியலமைப்பு சட்டத்தினூடாக மனித உரிமைகளுக்கு உத்தரவாதம் வழங்கப்படுகிறது. மனித உரிமைகளின் தற்போதைய நிலை உண்மையில் அதிகளவுக்கு தாழ்ந்த மட்டத்திலேயே உள்ளது.உள்நாட்டுப் போர்கள், புலம்பெயர்வு , ஆட்கடத்தல் , காணாமலாக்கப்படுதல் போன்றவற்றால் மனித உரிமைகள் மோசமாக மீறப்படும் நிலை உருவாகிறது . மனித உரிமைகளை தீவிரமாக எடுத்துக்கொள்ள வேண்டும், மனித உரிமைகளை கடைப்பிடிக்காதவர்களிடம் சகவாசம் இல்லையென்று கூறவேண்டும். அதேசமயம் ஒரு தினத்தை மட்டும் பாரம்பரியமாக அனுஷ்டிப்பதும் , விருதுகளை வழங்குவதும் மனித உரிமை மீறல் தொடர்பான அடிப்படை யதார்த்தத்தை மாற்றாதென்பதை உணர்ந்துகொள்வது அவசியம்.

# மத சகிப்புணர்வின்மைக்கு தண்டனை விலக்கீட்டை அனுமதிப்பதனால் ஏற்படும் பெருங்கேடு



கலாநிதி
ஜெகான் பெரேரா

பாகிஸ்தானில் மதநிந்தனை செயலைச் செய்ததாக இலங்கையர் ஒருவரை குற்றம் சாட்டி வெறிபிடித்த கும்பலால் அவர் கொல்லப்பட்டமை சமூகத்தில் வெடித்துச் சிதறும் உணர்ச்சிகளின் பயங்கரமானதொரு ஆபத்தை எப்பொழுதும் நினைவூட்டச் செய்கிறது. யுகங்களாக, மனிதர்களுக்குள் பதுங்கியிருக்கும் மிகவும் ஆதிகாலத்தன்மையை மனிதமயமாக்க மதம் உதவுகிறது. "உங்கள் மத்தியில் உள்ள அந்நியரிடம் கருணை காட்டுங்கள், ஏனென்றால் நீங்கள் எகிப்து தேசத்தில் அந்நியர்களாக இருந்தீர்கள்'' என்பது பைபிளின் கட்டளை. அதன் போதனைகளைப் பின்பற்றுவதாகக் கூறும் ஆட்களால் இது அடிக்கடி புறக்கணிக்கப்படுகிறது. இத்தகைய மனிதாபிமானமற்ற செயல்கள் இடம்பெற்றுள்ளமை பாகிஸ்தானில் மட்டும் அல்ல குறிப்பாக தேர்தல் ஆதாயத்திற்காக, மக்களிடம் உயர்ந்த நெறிமுறைகளை விதைக்க தேசிய தலைமைத்துவம் தவறுகின்றபோது அடிக்கடி இது இடம்பெறுகிறது.

பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கான்,அதிகாரத்திற்கு வருவதற்காக பாகிஸ்தானின் மத நிந்தனைச் சட்டத்தை பாதுகாத்து, இஸ்லாமிய அடிப்படைவாதத்தை ஊக்குவித்ததாகவும் இப்போது மக்களின் பிரச்சினைகளை தீர்க்கத் தவறிவரும் தனது அரசுக்கு ஆதரவைத் திரட்டுவதாகவும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. அரசியலமைப்பின் ஒரு ஷரத்து புனித நபிக்கு எதிராகஎந்தஒருகுற்றச்சாட்டு,சூழ்ச்சி அல்லது மறைமுகமான நடவடிக்கைக்கும் மரண தண்டனைக்கான ஆணையை வழங்குகிறது . தற்போது பாகிஸ்தான் இந்த சட்டத்திற்கு அமைவாகவும் ஏனைய மனித உரிமைகள் விவகாரங்களையும் கொண்டிருப்பதன் காரணமாக இலங்கையைப் போலவே ஐரோப்பிய ஒன்றியத்தால் பொருளாதாரத் தடைகளை எதிர்கொள்கிறது. ஐரோப்பிய ஒன்றியம், ஊடகவியலாளர்களின் பாதுகாப்பு, மதத் தீவிரவாதம், நிந்தனை சட்டங்களை தவறாக பயன்படுத்துதல் மற்றும் நாட்டின் சில பகுதிகளில் கட்டாய மதமாற்றம் தொடர்பான பிரச்சினைகளை எழுப்பியுள்ளது. தண்டனை விலக்கீட்டிலிருந்து விடுபடாத ஒரு சமரச அரசியல் சூழலானது , எது சரி எது தவறு என்ற அவர்களின் கருத்துக்களுக்கு அமைவாக மக்கள் சட்டத்தை தங்கள் கைகளில் எடுத்துக்கொள்ள அவர்களை வழிநடத்துகிறது. அதிகாரத்தைப் பெறுவதற்கும் தக்கவைத்துக்கொள்வதற்கும் மதம் அல்லது இனத் தேசியம் ஆகியவற்றின் அடிப்படையில் மக்களின் உணர்ச்சிகளைத் திரட்டுவது தீமையானதை செய்வதன் மூலம் பெரும் மோசமான விளைவை எதிர்கொள்வது போன்றதாகும்.ஜனாதிபதி கோதாபய ராஜபக்ஷவும் இலங்கை அரசாங்கத்தின் ஏனைய உறுப்பினர்களும் தமது பிரஜைகளுக்கு எதிரான கொடூரமான குற்றத்திற்காக அவர்களின் கடுமையான கண்டனங்களைத் தெரிவித்ததோடு நீதியைக் கோரியுள்ளனர். பிரதமர் கான் நீதியை நிலைநாட்டுவதாக உறுதியளித்துள்ளதுடன் பாகிஸ்தானுக்கு 'அவமானத்தின் நாள்' என்றும் குறிப்பிட்டுள்ளார். குற்றத்தில் ஈடுபட்டதாகக் கூறப்படும் நூற்றுக்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டுள்ளனர். பாகிஸ்தான் சிவில் சமூகக் குழுக்கள் நடந்ததற்கு மன்னிப்புக் கூறும் பிரதிமைகளும் உள்ளன. அதேபோன்று யுத்தம் இடம்பெற்ற காலங்களிலும் சர்வதேச சமூகத்தின் சில பிரிவுகளால் எழுப்பப்பட்ட மனித உரிமை மீறல்கள் தொடர்பான பிரச்சினைகளிலும் இராஜதந்திர ரீதியாக பாகிஸ்தான் வழங்கிய ஆதரவை இலங்கையின் சிவில் சமூகம் நினைவுகூரும். அதேவேளை பிற மதங்கள் மற்றும் இனங்கள் மீது வெறுப்புணர்வைத் தூண்டுபவர்களுக்கு அரச இயந்திரத்தில் முக்கிய பதவிகள் வழங்கப்படுகையில் நாம் அச்சமடைய வேண்டும்.

### ஆபத்தான கலவை

ஜே.வி.பி. கிளர்ச்சி, 1983 கலவரம் மற்றும் அண்மைக்காலமாக அளுத்கம, திகன மற்றும் குருநாகலில் இலங்கைக்குள் என்ன நடந்தது என்பது குறித்து இலங்கையர்கள் கவனத்தில் கொள்ள வேண்டியது அவசியம். இந்த நிகழ்வுகள் அனைத்திலும் அரசின் உடந்தையான தன்மை அல்லது செயலற்ற தன்மை இருந்தது. இது ஒரு கும்பலின் காட்டுமிராண்டித்தனமான செயல்களை விட மோசமானது. ஏனெனில் அரசு நாட்டின் நாகரிகத்தை பிரதிநிதித்துவப்படுத்துகிறது. இலட்சியக் காரணங்களுக்காக அரசில் சேர்ந்துள்ள பெரும்பாலான அரசின் சிரேஷ்ட அதிகாரிகள் அரசியல் தலையீடுகளால் தங்கள் கடமைகளைச் செய்ய முடியாது அல்லது செய்யாமல் இருக்கும் அளவுக்கு அரச இயந்திரத்தின் அதீத அரசியலே இந்த அரசின் தோல்விக்குக் காரணம். பிரதமர் கானைப் போலவே, ஜனாதிபதி ராஜபக்ஷவும் தற்போதைய அரசாங்கமும் தேசியவாதம் மற்றும் இன பெரும்பான்மையினரின் அச்சம் தொடர்பாக அவர்களின் விருப்பத்தை பூர்த்தி செய்தல் என்பனவற்றின் மூலம் தேர்தல்களில் வெற்றி பெற்றனர். அதன் பங்காளிகள் சில இன மற்றும் மத சிறுபான்மையினர் மீது வெறுப்பை உமிழ்ந்தனர். இலங்கையில் அரசின் தோல்வி நிலைமை மேலும் தீவிரமடைந்து வருவதற்கான குழப்பமான அறிகுறிகள் தென்படுகின்றன. முன்னாள் ஆளுநர் அசாத் சாலி எட்டு மாதங்களாக விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த நிலையில், அவர் விடுதலை செய்யப்பட்டார். சட்டமா அதிபரால் அவருக்கு எதிராக முன்வைக்கப்பட்டிருந்த அனைத்து குற்றச்சாட்டுகளும் தகைமை இல்லாததால் தள்ளுபடி செய்யப்பட்டன. அவருக்கும் அவரது குடும்பத்துக்கும் இழைக்கப்பட்ட அநீதி, அவரது எட்டு மாத வாழ்க்கை மற்றும் அவரது நற்பெயருக்கான இழப்பு , அவர் உயர்ந்த அந்தஸ்தில் இருப்பவர் என்பதால் இழப்பீடுகள் தேவைப்படக்கூடும் . முன்னாள் ஆளுநரைப் போல தங்கள் வழக்குகளை எதிர்த்துப் போராடும் திறன் குறைந்த எண்ணற்றோர் இருப்பார்கள். ஆயுதக் களஞ்சியத்தைக் கண்டுபிடிக்க அழைத்துச் செல்லும் போது தப்பிச் செல்ல முயன்றதாகக் கூறப்படும் கைதிகள் பொலிஸ் காவலில் பல கொலைகள் அல்லது துப்பாக்கிச்சூட்டில் இடையில் சிக்கிய அல்லது தற்கொலையென பொலிஸ் காவலில் பல கொலைகள் நடந்துள்ளன. சில வழக்குகளில் சிறையில் அடைக்கப்பட்டவர்களின் குடும்பத்தினர் மற்றும் வழக்கறிஞர்கள் தடுப்புக்காவலில் உள்ளவர்கள் கொல்லப்படுவதற்கு திட்டமிடப்பட்டிருப்பதாக முன்கூட்டியே எச்சரித்தும் எதுவும்செய்யப்படவில்லை, மரணங்கள் இடம்பெறு கின்றன என்பது விடயங்களை மோசமாக்குகிறது.

மூன்று தசாப்த கால யுத்தம் முடிவடைந்த விதம் அல்லது உயிர்த்த ஞாயிறு குண்டுவெடிப்புகள் அல்லது மத்திய வங்கி பிணைமுறி ஊழல் அல்லது சீனி வரி ஊழல், யுகதனவி மின் உற்பத்தி நிலைய விவகாரம் போன்றவற்றுடன் தொடர்புடையவற்றில் பொறுப்புணர்வை உறுதிப்படுத்துவதில் அதே இயலாமை அல்லது விருப்பமின்மை பல நிலைகளில் காணப்படலாம்.மிக சமீபத்தில் அதிக எண்ணிக்கையிலான சமையல் எரிவாயு சிலிண்டர்கள் வெடித்து,உயிரிழப்பு மற்றும் மக்களின் வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டன. இந்த விடயங்கள் எதிலும் மூளையாக செயற்பட்டவர்களை விசாரணையில் கண்டுபிடித்து நீதி வழங்கப்படவில்லை. காலப்போக்கில் வழக்குகள் மறக்கப்பட்டு, தவறு செய்தவர்கள் தங்கள் குற்றங்களில் இருந்து தப்பிக்கலாம். நாட்டில் ஏற்படக்கூடிய நெருக்கடியான சூழ்நிலையைக் கருத்தில் கொண்டுதான் புனிதமான மத நூல்களின் வழிகாட்டுதலின்படி, மக்களின் கருணை மற்றும் அக்கறையின் உணர்வை பிரதிநிதித்துவப்படுத்தும் ஒரு வழக்கில் உயர் நீதிமன்றம் ஒரு வலுவான தீர்ப்பை எழுதியுள்ளது. இது, காட்டில் இருந்து பிடிக்கப்பட்டு, சமூகமட்டத்தில் கௌரவத்துக்காக வீடுகள் மற்றும் கோவில்களுக்குக் கொண்டுசெல்லப்படும் யானைகளை அவற்றின் உரிமையாளர்கள் எனக் கூறப்படுவோரிடம்திருப்பிக்கொடுக்க வேண்டும் அல்லது காட்டுக்கு விடப்படவேண்டும் அல்லது சரணாலயங்களுக்கு அனுப்பப்பட வேண்டும் என்பது பற்றியதாக உள்ளது .

### நல்லாட்சி

சட்டத்தின் ஆட்சிக்கும், பரிசீலனைகள் மற்றும் சமநிலைகள் முறைமைகளுக்கும் நீண்டகால மாற்றங்களை ஏற்படுத்தக்கூடிய ஒரு தீர்ப்பில், அரசியல் ரீதியாக சர்ச்சைக்குரிய ஒரு வழக்கில் புத்திசாலித்தனமாக, டென்னிங் பிரபு ஆங்கிலேய நீதிமன்றங்களில் வழங்கிய ஒரு புகழ்பெற்ற தீர்ப்பை நீதிமன்றம் மேற்கோள் காட்டியது. பொதுமக்கள் சம்பந்தப்பட்ட விடயங்களில் சட்டமா அதிபர் பொதுநலன்களின் பாதுகாவலர் என்று எமது அரசியலமைப்புச் சட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அவர் அன்றைய அரசாங்கத்தில் உறுப்பினராக இருந்தாலும், முழுமையான புறநிலை மற்றும் பற்றின்மையுடன் பொதுநலனை பிரதிநிதித்துவப்படுத்துவது அவரது கடமை. அவர் எந்தத் தரப்பிலிருந்தும் எந்தவொரு வெளிப்புற அழுத்தம் வந்தாலும் சுதந்திரமாக செயற்பட வேண்டும். இந்த அவதானிப்புகள் இலங்கையின் சட்டமா அதிபரின் பாத்திரத்திற்குப் பொருந்தும் என்று நீதிமன்றம் கூறியது. இந்த வழக்கில் பிரதிவாதிகளாக பிரதமர் மற்றும் வனவிலங்குத்துறை அமைச்சர் ஆகியோர் குறிப்பிடப்பட்டிருந்தனர். சட்டமா அதிபர் போன்ற பதவிகள் மேலே உள்ள நீதிமன்றத் தீர்ப்பின்படி முடிவெடுக்கும் நபர்களால் நிரப்பப்பட வேண்டுமானால், அவர்கள் நேர்மையும் தகுதியும் கொண்ட நபர்களாக இருப்பது அவசியம். அரசியல் தலையீடு இல்லாமல் அவர்கள் தங்கள் பணியைச் செய்யக் கூடிய இடமும் தேவை. இந்த நோக்கத்தை அடைவதற்காகவே இரண்டு வெவ்வேறு அரசியல் கட்சிகளைச் சேர்ந்த இருவேறு அரசியல் தலைவர்கள் தலைமையிலான இரண்டு வெவ்வேறு அரசாங்கங்கள் முறையே 2001 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் 17ஆவது மற்றும் 19ஆவது திருத்தங்கள் நிறைவேற்றப்படுவதை உறுதி செய்ய நடவடிக்கை எடுத்தன. இந்த இரண்டு திருத்தங்களும் ஜனாதிபதியின் அதிகாரங்களைக் குறைத்தல் மற்றும் அரசியல் தலையீடுகளிலிருந்து அரச நிறுவனங்களின் சுதந்திரத்தை அதிகரிக்க முற்படும் பொதுவான அம்சத்தைக் கொண்டிருந்தன. திரைக்குப் பின்னால் செயற்படும் அரசியல் செல்வாக்கு மிக்கவர்களிடமிருந்து நாட்டில் அதிகரித்துவரும் தண்டனை விலக்கீட்டை கையாள்வதில் சுயாதீனமான ஒரு பொலிஸ் படை, நேர்மையுடன் செயற்படுவதற்கான வாய்ப்புகள் அதிகம். இந்த ஆண்டு இறுதிக்குள் ஒரு புதிய அரசியலமைப்பு வரைவுக்கான அரசாங்கத்தின் உறுதிமொழி, ஆட்சி முறையை மறுசீரமைப்பதற்கும் அனைத்துவகையான தீவிரவாதத்திற்கும் தூண்டுதலாக இருக்கும் தண்டனை விலக்கீடு மற்றும் வெறுப்பை வளர்க்கும் பலதரப்பட்ட மீறல்கள் மற்றும் பலவீனங்களுக்கு முற்றுப்புள்ளி வைப்பதற்கான ஒரு வாய்ப்பை வழங்குகிறது. பாகிஸ்தானின் மதரீதியான சட்டத்தைப் போல அல்லாமல் அரசியல் வெளி மதச்சார்பற்றதாக இருக்க வேண்டும் மத அல்லது இன தேசியவாத சார்புத்தன்மைகளிலிருந்து விடுபட வேண்டும். அரசாங்க, எதிர்க்கட்சி மற்றும் சிவில் சமூக உறுப்பினர்களைக் கொண்ட பலதரப்பு அரசியலமைப்புப் பேரவையின் ஊடாக அரச உயர் அதிகாரிகளை நியமிக்கும் திட்டத்தை மீண்டும் அறிமுகப்படுத்துவது ஜனாதிபதி மட்டுமே நியமனங்களைச் செய்வதை விட சிறந்த நியமனங்களுக்கு வழிவகுக்கும். அரசியலமைப்புப் பேரவையின் உறுப்பினர்கள் ஒன்றிணைந்து, அரசின் உயர் பதவிகளுக்கு மிகவும் பொருத்தமான ஆட்களைத் தேர்ந்தெடுத்து, அரசியல் உள்நோக்கம் கொண்ட தலையீட்டிலிருந்து அவர்களைத் தனிமைப்படுத்துவார்கள். ஜனநாயகத்தில் சுதந்திரமான கடைசி கோட்டையான உயர் நீதித்துறையின் விடயத்தில் இது மிகவும் முக்கியமானதாகும். உண்மையான நல்லாட்சிக்கு பல மட்டங்களின் ஊடும் பல நிறுவனங்களின் முடிவெடுக்கும் விடயத்தில் நேர்மை மற்றும் தரம் ஆகியவற்றின் தற்போது ஏற்பட்டுள்ள சீரழிவு, பரிசீலனைகள் மற்றும் சமப்படுத்தலை அடிப்படையாகக் கொண்ட வலுவான அரசாங்க முறைமையின் தேவையை முன்னிலைப்படுத்துகிறது.

**'பாகிஸ்தானின் மதரீதியான சட்டத்தைப் போல அல்லாமல் அரசியல் வெளி மதச்சார்பற்றதாக இருக்க வேண்டும். மத அல்லது இன தேசியவாத சார்புத்தன்மைகளிலிருந்து விடுபட வேண்டும்'**

**மிக சமீபத்தில் அதிக எண்ணிக்கையிலான சமையல் எரிவாயு சிலிண்டர்கள் வெடித்து, உயிரிழப்பு மற்றும் மக்களின் வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டன. இந்த விடயங்கள் எதிலும் மூளையாக செயற்பட்டவர்களை விசாரணையில் கண்டுபிடித்து நீதி வழங்கப்படவில்லை. காலப் போக்கில் வழக்குகள் மறக்கப்பட்டு, தவறு செய்தவர்கள் தங்கள் குற்றங்களில் இருந்து தப்பிக்கலாம்**



# மன்னாரில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கை முன்னெடுப்பு

## -விசேட குழுவினர் வீடுகளுக்கு சென்று சோதனை-



மன்னார் மாவட்டத்தில் டெங்கு நோயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரும் வகையில் நேற்றுமுதல் எதிர் வரும் புதன்கிழமை வரை டெங்கு ஒழிப்பு வாரம் அமுல் படுத்தப்பட் டுள்ளது.

இந்த நிலையில் நேற்றுக் காலை 8.30 மணியளவில் மன்னார் மாவட் டச் செயலகத்தில் டெங்கு ஒழிப்பு வார ஆரம்ப நிகழ்வு ஆரம்பமானது.

மன்னார் மாவட்ட பிராந்திய சுகா தார சேவைகள் பணிப்பாளர் வைத் தியர் ரி.வினோதன் தலைமையில் இடம்பெற்ற ஆரம்ப நிகழ்வில் மேலதிக அரசாங்க அதிபர், அனர்த்த முகாமைத்துவ பிரிவினர் உள்ளடங்கலாக பொதுச் சுகாதார பரிசோதகர்கள், டெங்கு ஒழிப்பு பிரிவினர், பொலிஸார் மற்றும் அழைக்கப்பட்ட திணைக்கள பிரதி நிதிகள் ஆகியோர் கலந்துகொண் டனர்.

இதன் போது குழுக்கள் அமைக்கப் பட்டதோடு, பனங்கட்டிக்கொட்டு மற் றும் சின்னக்கடை பகுதிகளில் உள்ள வீடுகளுக்குக் குறித்த குழுவினர் செ ன்று டெங்கு பரிசோதனைகளை மேற் கொண்டனர்.

மேலும் பிரதேச செயலகம், உள்ளூ ராட்சி மன்றங்கள், பாதுகாப்புத் துறை யினர், சுகாதார திணைக்களம் மற்றும் சமூக மட்ட அமைப்புகள் இணைந்து சிரமதான முறையிலும், குறிப்பாக டெங்கு தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ள பனங்கட்டுகொட்டு, எமில் நகர், பெரிய கடை, பேசாலை 5,8 ஆம் வட்டாரம், தோட்டவெளி போன்ற கிராமங்கள் உயர் ஆபத்துள்ள இடங்களாகச் சுகாதாரத் துறையினர் அடையாளப்படுத்தி உள்ளனர்.

குறித்த இடங்களில் எதிர் வரும் ஒரு வாரங்களுக்கு சிரமதானம் மேற்கொள்ளப்பட உள்ளதோடு, அப்ப குதிகளில் உள்ள வீடுகளுக்கு விசேட குழுவினர் சென்று வீடுகள் பரிசீலிக்கப் பட்டு அவர்களுக்கு ஆலோசனைகள் வழங்கப்பட்டு டெங்கு நோயினை கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# கட்டுநாயக்கவில் சிக்கிய போதைப்பொருள் கடத்திய பிரேசில் நாட்டு யுவதி

இலங்கைக்குள் பிரவேசிக்க முற்பட்ட பிரேசில் நாட்டு இளம் பெண்ணை கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்து குடிவரவு மற்றும் குடியகல்வு அதிகாரிகள் நேற்றுக் கைது செய்து மீண்டும் பிரேசிலுக்கு நாடு கடத்தியுள்ளனர்.

அவர் சர்வதேச போதைப்பொருள் கடத்தலில் ஈடுபட்டுள்ள 23 வயது பிரேசிலைச் சேர்ந்த பெண்.

பிரேசில் அரசாங்கம் அவரைக் கைது செய்யத் தயாராகும் போது அவர் தாய்லாந்திற்கு தப்பிச் சென்றுள்ளார்.

எனவே, இவரைக் கைது செய்ய பிரேசில் அரசாங்கம் இன்டர்போலின் உதவியை நாடியிருந்த நிலையில், இன்டர்போல் சர்வதேச சிவப்பு அறிவி த்தல் பிறப்பித்தது.

இவருடைய தாய்லாந்து விசா காலாவதியானதால், தாய்லாந்தில் இருந்து இலங்கை சென்றுள்ளார்.

இந்த நிலையில், பிரேசில் நாட்டைச் சேர்ந்த பெண், நீண்ட நாட்களாக தாய்லாந்தில் தங்கியிருந்த நிலையில், சர்வதேச பொலிஸாரிடம் சிக்காமல் இருப்பதற்காக வேறு நாட்டிற்குள் பிரவேசிக்க திட்டமிட்டுள்ளதாக முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

# இலவச மருத்துவ முகாம்



மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டு நிறுவனத்தின் நிதி அனுசரணையுடன், வட மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களமும், கிளிநொச்சி மாவட்ட செயலகமும் இணைந்து ஏற்பாடு செய்த இலவச மருத்துவ முகாம் நேற்று கண்டாவளையில் இடம்பெற்றது.

நேற்றுக் காலை 9 மணியளவில் ஆரம்பமான குறித்த மருத்துவ முகாம் தர்மபுரம் பொதுநோக்கு மண்டபத்தில் இடம் பெற்றது.

வட மாகாண ஆளுநரின் ஆலோசனைக்கு அமைவாக மத வழிபாட்டுத்தலங்களில் கடமைபுரியும் மதகுருமார்கள், மற்றும் ஊழியர்களிற்காக ஏற்பாடு செய்யப்பட்ட குறித்த நடமாடும் சேவையில் பொதுமக்களும் கலந்துகொண்டு கண்டாவளை சுகாதார சேவைகள் பணிமனையினரிடம் சிகிச்சைகளையும், மருத்துவ ஆலோசனையையும் பெற்றனர்.(55)

# வறிய குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவி வழங்கி வைப்பு



பூமணி அம்மா அறக்கட்டளையின் ஏற்பாட்டில் யாழ்.சுண்டுக்குளி ஈச்சமோட்டை ஜே-66 கிராம சேவையாளர் பிரிவில் 26 வறிய குடும்பங்களுக்கு நேற்று முன்தினம் மேற்படி கிராம சேவையாளர் அலுவலகத்தில் வைத்து உலர் உணவு நிவாரணப் பொருட்கள் வழங்கி வைக்கப்பட்டது.

பூமணி அம்மா அறக்கட்டளையின் ஸ்தாபகத் தலைவரும், பிரான்ஸ் சர்வதேச தமிழ் வானொலி பணிப்பாளருமான சரவணையூர் விசுவாசம் செல்வராசாவின் நெறிப்படுத்தலில் மேற்குறித்த பகுதிகளில் வசிக்கும் குறைந்த வருமானங்களைக் கொண்ட வறியநிலையிலுள்ள 26 குடும்பங்களுக்குப் பூமணி அம்மா அறக்கட்டளையின் வாழ்வாதார நிவாரண உதவிப் பணியாக அறக்கட்டளையின் இலங்கை நிர்வாகிகளான தலைவர் நா.தனேந்திரன், செயலாளர் ந.விந்தன் கனகரட்ணம், உபசெயலாளர் இ.சற்குருநாதன், இணைப்பாளர் ரி.யோசேப், நிர்வாக சபை உறுப்பினர் எச்.சத்தியா,ஆலோசகர் இ.மயில்வாகனம் ஆகியோர் கலந்து கொண்டு பயனாளிகளுக்கு உலர் உணவு நிவாரணப் பொருட்களை வழங்கி வைத்தனர்.(18)

# முதியோர், மற்றுத்திறனாளிகள் விழா அனுஸ்டிப்பு



முதியோர் மற்றுத்திறனாளிகள் விழா நேற்று கிளிநொச்சியில் இடம் பெற்றது.

உலக தரிசனம் (வேர்ள்ட்விசன்) நிறுவனத்தின் நிதி பங்களிப்புடன் சமூக சேவை திணைக்களமும், கிளிநொச்சி மாவட்ட செயலகமும் இணைந்து நடாத்திய 2021ஆம் ஆண்டுக்கான முதியோர் மாற்றுத்திறனாளிகள் விழாவினை நேற்று ஏற்பாடு செய்திருந்தனர்.

இதன்போது முதியோர் மற்றும் மாற்றுத்திறனாளிகளாக இருந்து சாதித்தவர்கள் கௌரவிக்கப்பட்டனர். இதேவேளை கண்டாவளை பிரதேச செயலக சமூக சேவைகள் உத்தியோகத்தர் மாவட்ட அரசாங்க அதிபரினால் கௌரவிக்கப் பட்டிருந்தார். நிகழ்வில், முதியோர் மற்றும் மாற்றுத்திறனாளிகளின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.(55)

# மதத் தலங்களில் கடமையாற்றுவோருக்கான இலவச மருத்துவ முகாம்

வடக்கு மாகாண ஆளுநரின் நெறிப்படுத்தலில் வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையில் காரைநகர் பிரதேச செயலகமும் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையும் இணைந்து நடாத்துகின்ற மத வழிபாட்டுத் தலங்களில் கடமை புரிவோருக்கான இலவச மருத்துவ முகாம் எதிர்வரும் திங்கட்கிழமை மு.ப. 8 மணி தொடக்கம் காரைநகர் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் இடம்பெறவுள்ளது.

இவ் இலவச மருத்துவ முகாமில் காரைநகர் பிரதேச மத வழிபாட்டுத் தலங்களில் பணிபுரியும் மதகுருமார், பரிபாலன சபையினர் மற்றும் தொண்டர்கள் பங்குபற்றிப் பயன்பெறுமாறும், பங்குபற்றுவோர் தமது தேசிய அடையாள அட்டையுடன் வருகை தருவதுடன் முதல் நாள் இரவு 10 மணிக்குப் பின்னர் உணவு உட்கொள்ளாமல் இருந்து, முகக் கவசம் அணிந்து வருகை தருமாறும் (கிளினிக் கொப்பி வைத்திருப்போர் அதையும் தம்முடன் எடுத்து வரவும்.) கேட் டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

# மரண அறிவித்தல்

தோற்றம் 19 * 11 * 1933



மறைவு 07 * 12 * 2021

## இராமலிங்கம் பொன்னம்பலம்

(R.P மாஸ்டர், ஓய்வுநிலை பௌதீகவியல் ஆசிரியர், யா/உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி)

யாழ்ப்பாணம் உடுப்பிட்டி, கிளானையைப் பிறப்பிடமாகவும் கரணவாய் மத்தியை வதிவிடமாகவும் கொண்ட இராமலிங்கம் பொன்னம்பலம் (R.P மாஸ்டர், ஓய்வுநிலை பௌதீகவியல் ஆசிரியர், யா/உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி) அவர்கள் கடந்த (07-12-2021) செவ்வாய்க்கிழமை அன்று யாழ்ப்பாணத்தில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தாமோதரம்பிள்ளை இராமலிங்கம் (முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்), மீனாட்சிப்பிள்ளை ஆகியோரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான பரராஜசிங்கம், மீனாட்சிப்பிள்ளை ஆகியோரின் அன்பு மருமகனும், தனபாக்கியவதியின் அன்புக் கணவரும் வாசுகி மற்றும் ரேணுகாவின் (ஆசிரியை, பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை) தந்தையும் காலஞ்சென்றவர்களான ஈஸ்வரி,பரமேஸ்வரி, தாமோதரம்பிள்ளை,பரமேஸ்வரன், தசரதன் மற்றும் இராமகிருஷ்ணன்,மீனாம்பாள் ஆகியோரின் அன்புச் சகோதரரும் Dr.R..அஜந்தன் மற்றும் Dr.S.வசீகரன் ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்றவர்களான இரகுநாதன்,குணபாக்கியவதி,புஷ்பநாதன்,பாலசுப்ரமணியம் மற்றும் சிவராஜேஸ்வரி, சிவகுமாரன் (நிற்சிங்கம்),சுலோச்சனா ஆகியோரின் அன்பு மைத்துனரும் உமேஷன், சௌமியா மற்றும் ஆர்த்தி ஆகியோரின் அன்பு தாத்தாவும் நிரஞ்சனன், ஜனார்த்தனன்,மயூரதன் காலஞ்சென்றவர்களான பாலகுமார்,சகுந்தலா மற்றும் சந்திரா,நளாயினி ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்ற அனுரதி சசிதரன் மற்றும் ரதிக்கா அரவிந்தன் ஆகியோரின் அன்பு பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கடந்த (07-12-2021) செவ்வாய்க்கிழமை அன்று மாலை 4.00 மணியளவில் எள்ளங்குளம் இந்து மயானத்தில் நடைபெற்றது. இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

இலக்குமி வாசா,
கரணவாய் மத்தி,
கரவெட்டி.

தொடர்புகளுக்கு;
வாசுகி அஜந்தன் (மகள்) - 0777797356
ரேணுகா வசீகரன் (மகள்) - 0775898141

# கணினி உபகரணங்கள் கையளிப்பு



பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி சுரேன் ராகவனின் பன்முகப்படுத்தப்பட்ட நிதியில் முல்லைத்தீவு மாவட்டம் துணுக்காய் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள யோகபுரம் மயில்வாகனம் தமிழ் மகா வித்தியாலயத்திற்கு 2 இலட்சம் ரூபா பெறுமதியான ஸ்மார்ட் வகுப்பறைக்கான கணணி உபகரணங்கள் நேற்று வழங்கி வைக்கப்பட்டது.

கலாநிதி ராகவனின் ஒருங்கிணைப்புச் செயலாளர் கதிர்வேல் செவ்வேள் உபகரணங்களை பாடசாலை அதிபரிடம் உத்தியோகபூர்வமாக கையளித்தார்.(75)

# மீண்டும் பேருந்து தரிப்பிடம்



முல்லைத்தீவு -முத்தையன் கட்டு இடது கரையில் பேருந்து தரிப்பிடத்தினை தனிநபர் ஒருவரின் வாழ்வாதார முயற்சிக்கு வழங்கியமைக்கு இப்பகுதி பொது அமைப்புகள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளன.

1987ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட குறித்த பேருந்து தரிப்பிடம் அண்மையில் தனி நபரின் வாழ்வாதார முயற்சிக்கு என சிறு கடையாக மாற்றப்பட்டது. இச் செயற்பாட்டினை புதுக்குடியிருப்பு பிரதேச சபை மேற்கொண்டிருந்தது.

இச் செயற்பாட்டிற்கு இப்பகுதி பொது அமைப்புகள் எதிர்ப்புத் தெரிவித்ததுடன் குறித்த கட்டடத்தில் பேருந்து தரிப்பிடமே அமைய வேண்டும் எனவும் வலியுறுத்திய நிலையில் புதுக்குடியிருப்பு பிரதேச சபை மீண்டும் பேருந்து தரிப்பிடத்தினை அமைப்பதற்கான செயற்பாடுகளை முன்னெடுத்துள்ளது.

பிரதேச சபை மீண்டும் பேருந்து தரிப்பிடத்தினை அமைப்பதற்காக எடுத்துள்ள முயற்சிகளுக்கு முத்தையன் கட்டு இடது கரை பொது அமைப்புகள் நன்றி தெரிவித்துள்ளதாகவும் புதுக்குடியிருப்பு பிரதேச சபையினரால் தெரிவிக்கப்படுகின்றது.(27)

# மரண அறிவித்தல்

தோற்றம் 25 * 12 * 1954



மறைவு 09 * 12 * 2021

## சின்னத்தம்பி இலட்சுமணன்

ஊர்காவற்றுறை-தம்பாட்டியை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி இலட்சுமணன் நேற்று (09.12.2021) வியாழக்கிழமை அகாலமரணமடைந்தார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.12.2021) வெள்ளிக்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெற்று மாலை 4 மணியளவில் தம்பாட்டி-விராட்டிமுனை இந்து மயானத்தில் தகனக் கிரியை இடம்பெறும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்;
குடும்பத்தினர்.
தொ.இல-0779181094

நாரந்தனை வட மேற்கு
தம்பாட்டி-
ஊர்காவற்றுறை.


# TENDER NOTICE

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

## SELECTING A SERVICE PROVIDER FOR MAINTENANCE OF SANITARY PLUMBING AND FIRE PROTECTION SYSTEM

| Tender Number | FMD/MTN/HO/2021/04 |
|---|---|
| Tender Description | Selecting a Service Provider for Maintenance of Sanitary Plumbing and Fire Protection Systems at CBSL Buildings |
| Bid closing and opening | Date : 22nd December 2021<br>Time : 1430 hrs.<br>Location : Head Office Building, Central Bank of Sri Lanka, No 30, Janadhipathi Mawatha, Colombo-01. |
| Pre-bid meeting | Date : 15th December 2021<br>Time : 1000 hrs.<br>Location : Head Office Building, Central Bank of Sri Lanka, No 30, Janadhipathi Mawatha, Colombo-01. |

For further information please refer
https://www.cbsl.gov.lk/en/tenders
or contact Maintenance & Project Engineer on 011-2477479

Director, Facilities Management Department
Central Bank of Sri Lanka

# உடப்பு தமிழ் பிரதேச சபையை அமைக்க அமைச்சர் டக்ளஸிடம் கோரிக்கை

புத்தளம், உடப்பு பிரதேசத்தில் தமிழ் மக்கள் செறிந்து வாழுகின்ற பிரதேசங்களை இணைத்து புதிய பிரதேச சபை ஒன்றினை உருவாக்கித் தருமாறு கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

ஆராய்ச்சிக் கட்டு பிரதேச சபைத் தலைவர் தட்சணாமூர்த்தி தலைமையில் உடப்பு பிரதேச சமூக பிரதிநிதிகள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை மாளிகாவத்தையில் அமைந்துள்ள கடற்றொழில் அமைச்சில் நேற்று முன்தினம் சந்தித்து பல்வேறு விடயங்கள் தொடர்பாகக் கலந்துரையாடினர்.

இதன்போது, உடப்பை சூழவுள்ள பிரதேசத்தில் சுமார் 10 ஆயிரத்திற்கும் அதிகமான தமிழ் மக்கள் வாழ்ந்து வருகின்ற நிலையில், தமிழ் பிரதேச சபை ஒன்றினை உருவாக்குவதற்கு ஒத்துழைப்பு வழங்குமாறு கோரிக்கை முன்வைத்துள்ளனர்.

அத்துடன் உடப்பு கிராமத்திற்கு அச்சுறுத்தலாக விளங்கும் கடலரிப்பினை தடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் மீனவர் இறங்குதுறை ஒன்றிற்கான தேவை இருப்பதனால் அதனை அமைத்துத் தருமாறும் கோரிக்கை முன்வைத்துள்ளனர்.



சம்பந்தப்பட்ட தரப்புக்களுடன் கலந்துரையாடி தமிழ் பிரதேச சபையை உருவாக்குவதற்கான சாத்தியங்கள் பற்றி ஆராய்வதாக தெரிவித்ததுடன், கடலரிப்பு மற்றும் இறங்குதுறை போன்ற விடயங்கள் தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் கலந்துரையாடி நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (75)

# காலம் காலமாக ஒதுக்கப்பட்ட இணுவில் காரைக்கால் மக்கள்

-நல்லூர் பிரதேச சபை உறுப்பினர் தெரிவிப்பு-



நான் நல்லூர் பிரதேச சபைக்கு உறுப்பினராகத் தெரிவு செய்யப்படுவதற்கு முன்னரும் எத்தனையோ சபைகளும், நிர்வாகங்களும் மாறி மாறி வந்த போதும் நாங்கள் மாத்திரம் காலம் காலமாக ஒதுக்கப்பட்டு வந்தோம். ஒழுங்கான வீதியில்லை, மின் விளக்குகள் இல்லை, காரைக்கால் இந்துமயானம் கூட முன்னர் கவனிப்பாரின்றி இருந்தது. ஆனால், தற்போது இந்த நிலை மாறியுள்ளது. என நல்லூர் பிரதேச சபை உறுப்பினர் தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், என் வட்டாரத்தில் 12 இற்கும் மேற்பட்ட வீதிகள் அகலம் குறைந்த வீதிகளாகவுள்ளன. மழைகாலங்களில் மேற்படி வீதிகளில் வசிக்கும் மக்களும், வீதியால் போக்குவரத்துச் செய்யும் பாடசாலை மாணவர்கள் உட்படப் பலரும் மிகவும் பாதிக்கப்பட்டிருந்தார்கள். கடந்த மூன்று வருட காலமாக இதுதொடர்பில் நான் கோரிக்கைகள் விடுத்த போதும் எதுவும் இடம்பெறவில்லை.

ஆனாலும், நல்லூர் பிரதேச சபையின் 2022 ஆம் ஆண்டுக்கான பாதீட்டில் இதுதொடர்பான திட்டமும் உள்ளடக்கப்பட்டுள்ளது. நீண்டகாலமாக நாம் முகம் கொடுத்துவந்த கழிவு தரம் பிரிக்கும் நிலையத்திற்கான காணி பிரதேச செயலாளர் ஊடாகத் தற்போதைய நல்லூர் பிரதேச சபையின் தவிசாளரதும், செயலாளரினதும் முயற்சியால் கிடைக்கப் பெற்றிருக்கின்றது. இருவருக்கும் எமது பகுதி மக்கள் சார்பான நன்றிகளையும், வாழ்த்துக்களையும் நான் தெரிவித்துக் கொள்கின்றேன்.

என் மக்கள் அனுபவிக்கும் துன்பங்களுக்கு முடிவு வரவிருக்கிறது. எனவே, இந்தப் பாதீடு சிறந்த பாதீடு என்பதில் ஐயமில்லை. இந்தப் பாதீட்டுக்கு என் ஆதரவையும் அளிக்கின்றேன். இணுவில் காரைக்காலில் அமைக்கப்பட்டிருந்த கழிவுதரம் பிரிக்கும் நிலையம் நாற்றமெடுத்த காரணத்தால் இதனைத் தடுக்க வேண்டும் என்ற குறிக்கோளுடன் நான் அரசியல்வாதியானேன். இதுதொடர்பில் நான் தெரிவித்த கருத்துக்கள் ஊடகங்களிலும் வெளிவந்திருந்தது. நல்லூர் பிரதேச சபைக்கு வந்த காலப் பகுதி முதல் சபை அமர்வுகளில் அதிகமாக நான் உரையாற்றியதும் இந்த விடயத்தைப் பற்றித் தான்.

வட்டார மக்களின் தேவைகள், குறிக்கோள்களை நிறைவேற்றுவது தான் எங்கள் நோக்கம், குறிக்கோள். இதனை மீறி நான் ஒருகாலமும் சென்றவள் அல்ல. முன்னைய தவிசாளரின் ஆட்சிக் காலத்தில் வருடங்களாகச் சமர்ப்பிக்கப்பட்ட பாதீடுகளை நான் எதிர்த்திருந்த போதிலும் அத்தனை அபிவிருத்தி வேலைகளையும் எங்கள் வட்டாரத்தில் நிறைவேற்றியிருந்தேன். நான் சபைக்கு வந்த நோக்கத்திற்கு உரிய தீர்வு எட்டப்படாத காரணத்தால் நான் இவ்வாறு பாதீடுகளை எதிர்க்க வேண்டி ஏற்பட்டது. இதுதொடர்பில் சபையில் நான் முன்னர் பதிவும் செய்திருந்தேன்.

இதன்பின்னர் நாங்கள் புதிய தவிசாளரைத் தெரிவு செய்ய வேண்டி ஏற்பட்டது. கழிவு தரம் பிரிக்கும் நிலையம் மூலம் என் மக்களும், நானும் தினமும் படுகின்ற வேதனைகளை, மக்கள் பிரச்சினைகளை நான் கட்சித் தரப்பினருக்கு எடுத்துக் கூறினேன். இருந்த போதிலும் நாங்கள் எடுத்த முடிவுக்கு கட்டுப்படுங்கோ என எனக்குச் சொல்லப்பட்டது. மக்கள் பிரச்சினைகளை மீண்டும் மீண்டும் கூறியும் எனக்கு அதற்கான நீதி கிடைக்கவில்லை. இதனால், பாதீடு தோற்கடிப்பின் பின் நான் எனது சொந்த முடிவின் பிரகாரம் புதிய தவிசாளராகத் தற்போதைய தவிசாளரை முன்மொழிந்தேன்.

இதன் காரணமாக கட்சியிலிருந்து நீக்கப்பட்டேன். பதவி வறிதாக்கல் எனத் தெரிவித்துத் தேர்தல் ஆணையகத்திடமிருந்து எனக்கொரு கடிதம் வந்தது. சபையில் அனைத்து விடயங்கள் தொடர்பிலும் பேசிக் கொள்கின்றார்கள். ஆனால், கழிவகற்றல், சுகாதாரம் சம்பந்தமாக யாரும் பேசுவதில்லை.

எனக்கு கிடைத்த பதவி விகிதாசாரப் பிச்சை போடப்பட்ட பதவி. இந்தப் பதவியை இராஜினாமாச் செய்தால் வேறொரு பெண்ணுக்குச் சந்தர்ப்பம் கிடைத்தால் நன்று எனச் சிந்தித்தேன். இதற்கமைய நல்லூர்த் தொகுதியில் உள்ளுராட்சி சபைத் தேர்தலில் போட்டியிட்டவர்களின் பட்டியலை எடுத்துப் பார்த்தேன். அந்தப் பட்டியலை நான் பார்வையிட்ட போது ஒரு வீட்டில் மகள், தாய், பேர்த்தியார் என அந்தப் பட்டியல் நிரப்பப்பட்டிருந்தது. நான் இந்தப் பதவியிலிருந்து நீங்கினால் எனது இடம் வெற்றிடமாகத் தானிருக்கும்.

என் வட்டாரத்தில் செய்ய வேண்டிய வேலைகளும் வெற்றிடமாகத் தானிருக்கும். என் இடத்தை நான் வீணாக்க விரும்பாத காரணத்தால் நான் அடுத்த கட்டத்திற்கு நகர்ந்தேன் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார். (18)

# கசிப்பை மீட்ட பிரதேச சபையின் ஊழியர்கள்

மானிப்பாய் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சங்கானை பகுதியில் நேற்றைய முன்தினம் சந்தேகத்திற்கிடமான முறையில் நபரொருவர் கசிப்பினை கைவசம் வைத்திருந்தார். இதனை அவதானித்த வலி. மேற்கு பிரதேச சபையின் ஊழியர்கள் கசிப்பினை கைப்பற்றினர்.

கசிப்பினை கைப்பற்றியவுடன் குறித்த ஊழியர்கள் மானிப்பாய் பொலிஸாருக்கு தகவல் வழங்கி, பொலிஸாரை அவ்விடத்திற்கு வரவழைத்து கசிப்பினை அவர்களிடம் ஒப்படைத்தனர். இருப்பினும் கசிப்பினை வைத்திருந்த சந்தேகநபர் தப்பித்துச் சென்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (75)

# வீட்டிற்கான அடிக்கல் நாட்டி வைப்பு



கிராமத்திற்கு ஓர் வீடு திட்டத்தின் கீழ் தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட மட்டுவில் மத்தி ஜே/312 கிராம அலுவலர் பிரிவில் தெரிவு செய்யப்பட்ட பயனாளிக் குடும்பம் ஒன்றிற்கான வீட்டிற்கு நேற்று முன்தினம் அடிக்கல் நாட்டி வைக்கப்பட்டது.

யாழ் .மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுத்தலைவர் அங்கஜன் இராமநாதனின் சிபாரிசுக்கு அமைவாக தெரிவு செய்யப்பட்ட குறித்த வீட்டிற்கான அடிக்கல்லை சாவகச்சேரி பிரதேசசபையின் சுதந்திரக் கட்சி உறுப்பினர் தி.தங்கவேலு நாட்டி வைத்திருந்தார். தேசிய வீடமைப்பு அதிகாரசபையின் ஆறு இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் குறித்த வீடு அமையப்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது-(13)

# கைலாசபதியின் 39 ஆவது ஆண்டு நினைவுக் கூட்டம்



பேராசிரியர் க. கைலாசபதியின் 39 ஆவது ஆண்டு நினைவுக் கூட்டம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பி.ப. 4 மணியளவில் இல. 62, கே.கே. எஸ். வீதி, கொக்குவில் சந்தியில் அமைந்துள்ள தேசிய கலை இலக்கியப் பேரவையின் கவிஞர் முருகையன் கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.

சுகாதார வழிகாட்டல்களுக்கு அமைவாக இடம்பெறவுள்ள இந் நிகழ்வில் ஆர்வலர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு தேசிய கலை இலக்கியப் பேரவையினர் அழைத்து நிற்கின்றனர்.

## சபை உறுப்பினரின் நிதியில் வீதி விளக்குகள் பொருத்தும் நடவடிக்கை



சாவகச்சேரி பிரதேசசபை உறுப்பினர் வை.ஜெகதாஸின் பிரதேசசபை ஒதுக்கீட்டில் நேற்று முன்தினம் கொடிகாமம் மத்தி பிரதேசத்தில் தேவைப்பாடுள்ள இடங்களில் தெரு விளக்குகள் பொருத்தப்பட்டன.

பொதுமக்கள் வீதி விளக்குகளைப் பாதுகாத்து பகல் வேளைகளில் மின்சாரத்தை வீண் செலவு செய்யாமல் பயன்படுத்த வேண்டும் எனப் பிரதேசசபை உறுப்பினர் கேட்டுக்கொண்டுள்ளார்-(13)

## மின்கம்பத்தினை உடைத்து தள்ளிய வாகனம்; கிராமத்திற்கான மின்சாரம் துண்டிப்பு

முல்லைத்தீவு- கொக்குளாய் முதன்மை வீதியில் சிலாவத்தை பகுதியில் மின்சார சபைக்கு சொந்தமான உயர் அழுத்த மின் கடத்தி செல்லும் மின்கம்பம் ஒன்றின் மீது கனரவாகனம் மோதி விபத்துக்குள்ளானதில் மின்கம்பம் முற்றாக சேதமடைந்துள்ளது.

இதனால் சிலாவத்தை கிராமத்திற்கான மின்சாரம் நேற்று அதிகாலை தொடக்கம் மாலை 3மணிவரை துண்டிக்கப்பட்டுள்ளது. மின்கம்பத்தினை சீர்செய்யும் நடவடிக்கையில் மின் சார சபையினர் ஈடுபட்டுள்ளார்கள். (15)

# விபத்தில் படுகாயமடைந்த ஆசிரியர் உயிரிழப்பு

கொடிகாமம், மீசாலை, புத்தூர் சந்திப் பகுதியில் இரு மோட்டார் சைக்கிள்கள் மோதி விபத்துக்குள்ளானதில் படுகாயமடைந்த ஆசிரியர் ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்ததாக பொலிசார் தெரிவித்தனர்.

கடந்த மாதம் 28ஆம் திகதி மாலை தனியார் கல்வி நிலையத்தில் கற்பித்தலை நிறைவுசெய்து விட்டு, தனது வீட்டிற்கு சென்று கொண்டிருந்த போது இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இச் சம்பவத்தில் மீசாலையை சேர்ந்த கந்தசாமி சுதாகரன் (வயது- 36) என்பவரே படுகாயங்களுக்கு உள்ளான நிலையில் சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டிருந்த நிலையில் சிகிச்சை பயனின்றி நேற்று முன்தினம் மாலை உயிரிழந்துள்ளார்.(44)

## மாநகர சபையின் பாதீடு உறுப்பினர்களால் ஏகமனதாக அங்கீகரிக்கப்படும்

- முதல்வர் உறுதிபடத் தெரிவிப்பு-



வரவு செலவுத்திட்டம் யாழ் .மாநகர சபை உறுப்பினர்களால் ஏகமனதாக அங்கீகரிக்கப்படும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கின்றதென யாழ் மாநகரசபை முதல்வர் விஸ்வலிங்கம் மணிவண்ணன் தெரிவித்தார்.

யாழ் நாயன்மார்கட்டு குளப்புனரமைப்பு பணிகள் நேற்றைய தினம் யாழ். மாநகர முதல்வர் தலைமையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், வரவு செலவுத் திட்ட தயாரிப்பின் போது அனைத்து உறுப்பினர்களுடனும் கலந்து பேசி அவர்களுடைய கோரிக்கைகளையும் உள்ளடக்கியே தயாரித்து இருக்கின்றோம். ஆகவே அவர்களுடைய கோரிக்கைகளை உள்ளடக்கிய வரவு செலவுத்திட்டத்தை அவர்களே தோற்கடிப்பார்கள் என்று நான் நினைக்கவில்லை.

யாழ் மாநகர சபையில் அங்கம் வகிக்கின்ற அனைத்துக் கட்சிகளின் தலைமைகளிடமும் மாநகர சபையில் முன்வைக்கப்படுகின்ற வரவு செலவு திட்டத்தை ஆதரிக்க வேண்டும் என நான் பகிரங்கமாகவும் அன்பாகவும் ஒரு கோரிக்கையை விடுக்கின்றேன்.

மாநகர சபை வரவு செலவு திட்டத்தை தோற்கடிக்கும் முகமாக கட்சித்தலைவர்கள் செயற்படமாட்டார்கள் என நான் நினைக்கின்றேன் என்றார். (75)

# சங்கத்தினை இயங்க வைக்கக் கோரிக்கை



முல்லைத்தீவு -முத்தையன் கட்டு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினை மீள இயக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. 1972 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இச்சங்கம் 2009 ஆம் ஆண்டு வரை சிறப்பாக இயங்கியது.

மக்கள் இடம் பெயர்ந்து 2010ஆம் ஆண்டில் மீள் குடியேற்றம் செய்யப்பட்ட பின்னர் சங்கம் இயங்கத் தொடங்கியது. 2014ஆம் ஆண்டு இச்சங்கம் மூடப்பட்டது. இதுவரை சங்கம் திறக்கப்படவில்லை. இதன் காரணமாக முத்தையன்கட்டு, கனகரட்ணபுரம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 500 இற்கு மேற்பட்ட குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

போர் காலத்தில் சிறப்பாக இயங்கிய சங்கம் கடந்த ஏழு ஆண்டுகளாக மூடப்பட்ட நிலையில் உள்ளன. இச்சங்கத்தினை இயங்க வைப்பதற்கு கூட்டுறவுடன் தொடர்புடைய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என இக்கிராம பொது அமைப்புகள் கோரிக்கை விடுத்துள்ளன. இச்சங்கம் இயங்குவதன் மூலம் கூட்டுறவுத் துறை வளர்ச்சி பெறும்.

விவசாயத்தினை நம்பியுள்ள மக்கள் கூட்டுறவுச் சங்கம் ஒன்றின் மூலம் பயன் பெறக் கூடிய வாய்ப்புகள் உள்ளன. போர் காலத்தில் சிறப்பாக இயங்கிய சங்கம் தற்போது இயங்க முடியாமல் இருப்பது முத்தையன்கட்டு மக்களை பாதித்துள்ளது. (27)

## வீதியின் இரு புறப் பற்றைகளையும் அகற்றக் கோரிக்கை

கிளிநொச்சி- பூநகரி 10ஆம் கட்டையில் இருந்து முக்கொம்பன் கிராமத்திற்குச் செல்லும் வீதியின் இரு புறப் பற்றைகளையும் அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கும்படி முக்கொம்பன் பொது அமைப்புகள் வேண்டுகோள் விடுத்துள்ளன.

குறித்த வீதியில் பயணிப்பவர்கள் விலங்குகளில் மோதுண்டு விபத்துகளை எதிர்கொள்வதாகவும் பயிர்ச் செய்கைக் காலங்களில் யானைகள் காடுகளில் இருந்து குறித்த வீதியில் மாலை 04 மணிக்குப் பின்னர் நடமாடி வீதியில் பயணிப்பவர்களை தாக்க முற்படுவதாகவும் அத்துடன் குடமுருட்டிக் குளத்தின் கீழான பயிர்ச் செய்கைகளை அழித்து வருவதாகவும் மக்களினால் தெரிவிக்கப்படுகின்றது.

முக்கொம்பனில் இருந்து 10ம் கட்டை சந்தி வரையான எட்டு கிலோ மீற்றர் தூர வீதியின் இரு புறப் பற்றைகளையும் துப்புரவு செய்வதன் மூலம் இரவு வேளைகளில் பூநகரி பிரதேச வைத்தியசாலைக்கும் முக்கொம்பன், சின்னப்பல்லவராயன்கட்டு மக்கள் பாதுகாப்பாகச் செல்ல முடியும் என தெரிவிக்கின்றனர். 2010ஆம் ஆண்டிற்குப் பின்னர் தற்போதைய விளையாட்டு அமைச்சர் நாமல் ராஜபக்ஷவிடம் முக்கொம்பன் மக்கள் விடுத்த கோரிக்கைக்கு அமைய குறித்த வீதி கொங்கிறீட் வீதியாக மாற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

(27)

# ஒமிக்ரோன் தொற்றிய பெண், கணவன் மீது சட்ட நடவடிக்கை

## -சுகாதார பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர்-

க.பிரசன்னா

இலங்கையில் ஒமிக்ரோன் தொற்றுடன் அடையாளம் காணப்பட்ட முதலாவது பெண் மற்றும் அவரது கணவருக்கு எதிராக தனிமைப்படுத்தல் சட்டத்தின் பிரகாரம் சட்ட நடவடிக்கையினை மேற்கொள்வதற்கு தீர்மானித்துள்ளதாக சுகாதார பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹன தெரிவித்துள்ளார்.

ஒமிக்ரோன் தொற்றினால் பாதிக்கப்பட்ட பெண் கடந்த 24 ஆம் திகதி இலங்கை விமான நிலையத்தில் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனைகளின் மூலம் தொற்று உறுதி செய்யப்பட்டது. அவர் எவ்வித கொவிட் தடுப்பூசியினையும் பெற்றிருக்கவில்லை.

தொற்றினால் பாதிக்கப்பட்ட பெண் விமான நிலையத்திலிருந்து லூனா சிகிச்சை நிலையத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டு ஒரு நாளுக்குப் பின்னர் வீட்டுக்கு செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளார். அதற்கான காரணம் குறித்து முகவரும் சுகாதார அமைச்சும் எவ்வித உத்தியோகபூர்வ தகவலையும் வழங்கவில்லை.

ஒமிக்ரோன் தொற்றுக்குள்ளான பெண்ணின் உறவினர்களின் சில மாதிரிகள் வழங்கப்பட்டு ஏறக்குறைய ஏழு நாட்கள் கடந்துள்ள போதிலும் இது வரை எவ்வித அறிக்கைகளும் கிடைக்கப்பெறவில்லை. பாதிக்கப்பட்ட பெண் அம்புலன்ஸின் மூலம் வீட்டுக்கு அனுப்பப்படவில்லை. அவரது கணவரால் அழைத்துச் செல்லப்பட்டுள்ளார். எவ்வித விசாரணையும் மற்றும் மேற்பார்வையும் இன்றி குறித்த பெண் செல்வதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளதுடன் அவர் எங்கு சென்றார், சந்தித்தவர்கள் தொடர்பில் பிரச்சினை எழுந்துள்ளது.

குறைந்த பட்சம் இந்த பெண் தொடர்பில் அப்பகுதியிலுள்ள சுகாதார அதிகாரிக்கு தகவல்கள் வழங்கப்படவில்லை. தனிமைப்படுத்தல் கட்டளைச்சட்டத்தின் 45 ஆவது பிரிவின் அடிப்படையில், தொற்றுடன் ஒருவர் அடையாளம் காணப்பட்டால் அப்பகுதிக்குப் பொறுப்பான சுகாதார வைத்திய அதிகாரிகளுக்கு அறிவிப்பது கட்டாயமாகும். எனினும் அவ்வாறு அறிவிக்கப்படவில்லை.

இந்த விடயங்கள் தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு தெரிவிப்பதற்கு ஒவ்வொருவருக்கும் பொறுப்புள்ளது. எனவே தனிமைப்படுத்தல் கட்டளையின் 46 ஆவது பிரிவுக்கு அமைவாக பாதிக்கப்பட்ட பெண் மற்றும் அவரது கணவருக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படுமெனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# மன்னிப்பு கோருகிறது பாகிஸ்தான்

பாகிஸ்தானின் சியால்கோட் பகுதியில் கடந்த வாரம் கலகக் கும்பலால் கொலை செய்யப்பட்ட பிரியந்த குமாரவின் குடும்பத்தின் நிதிப் பாதுகாப்பு அல்லது இழப்பீடு தொடர்பான விடயங்கள் தொடர்பில்,வெளிநாட்டு அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் நேற்று கொழும்பில் உள்ள பதில் பாகிஸ்தான் உயர்ஸ்தானிகர் தன்வீர் அஹமட்டை சந்தித்துக் கலந்துரையாடினார்.

பாகிஸ்தானுக்கும் இலங்கைக்கும் இடையிலான நீண்டகால நட்புறவையும் நம்பிக்கையையும் எடுத்துரைத்த அமைச்சர், மறைந்த பிரியந்த குமாரவின் குடும்பத்திற்கு நீதி கிடைப்பதற்காக பாகிஸ்தான் அரசாங்கம் தேவையான நடவடிக்கைகளை முன்னெடுக்கும் என நம்பிக்கை தெரிவித்தார்.

சனிக்கிழமை,பாகிஸ்தான் வெளிநாட்டு அமைச்சர் ஷா மஹ்மூத் குரேஷியுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டதை நினைவுகூர்ந்த அமைச்சர், அவர் தனது இரங்கலைத் தெரிவித்ததாகவும், விசாரணையின் அனைத்து தகவல்களையும் விரைவில் இலங்கைக்கு வழங்குவதாக உறுதியளித்ததாகவும் தெரிவித்தார்.

இந்த விசாரணையை தனிப்பட்ட முறையில் பொறுப்பேற்று, சம்பவம் குறித்து உடனடியாக விசாரணைகளை முன்னெடுப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ள பாகிஸ்தான் பிரதமரின் தலையீட்டை வெளிநாட்டு அமைச்சர் பாராட்டினார்.

சியால்கோட்டில் உள்ள வர்த்தக சமூகம் நல்கிய 100,000 அமெரிக்க டொலர் நன்கொடை மற்றும் பிரியந்த குமாரவின் மாத சம்பளத்தை அவரது விதவை மனைவிக்கு வழங்குவதாக அறிவிக்கப்பட்டுள்ளமையை அவர் வரவேற்றார்.

காலஞ்சென்ற பிரியந்த குமாரவின் இரு பிள்ளைகளின் எதிர்காலம் குறித்தும், உரிய நேரத்தில் கொடுப்பனவுகளை பெற்றுக் கொடுப்பதன் முக்கியத்துவம் குறித்தும் இலங்கை அரசாங்கம் கரிசனை கொண்டுள்ளதாக அமைச்சர் பீரிஸ் சுட்டிக்காட்டினார். எந்தவொரு இடையூறும் இல்லாமல் ஒவ்வொரு மாதமும் அவரது சம்பளம் குடும்பத்திற்குக் கிடைப்பதை உறுதி செய்வதற்கான வழிமுறையை ஏற்பாடு செய்யுமாறு பாகிஸ்தான் தூதுவரிடம் அவர் கேட்டுக்கொண்டார்.

இச்சம்பவத்திற்கு தனது மனமார்ந்த மன்னிப்புக்களைத் தெரிவித்துக் கொண்ட பதில் உயர்ஸ்தானிகர், முழுமையான விசாரணைகளுக்குத் தேவையான நடவடிக்கைகளை பாகிஸ்தான் அரசாங்கம் முன்னெடுத்துள்ளதாகவும், குடும்பத்திற்கு இழப்பீடு வழங்குவதை உறுதி செய்வதாகவும் உறுதியளித்தார். பாகிஸ்தானில் வாழும் ஏனைய அனைத்து இலங்கையர்களினதும் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில் பாகிஸ்தானில் உள்ள சட்ட நடைமுறைப்படுத்தல் முகவர் நிலையங்கள் செயற்பட்டு வருவதாக அவர் மேலும் தெரிவித்தார்

# ரணில் தாக்கல் செய்த மனு; ஜனவரி 28 ல் விசாரணை

அரசியல் பழிவாங்கல்களை விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் இறுதி பரிந்துரைகளை வலுவிழக்கச் செய்யும் எழுத்தாணை உத்தரவை பிறப்பிக்குமாறு கோரி, ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரணில் விக்ரமசிங்க தாக்கல் செய்த எழுத்தாணை மனுவை எதிர்வரும் ஜனவரி மாதம் 28 ஆம் திகதி விசாரணை செய்ய மேன்முறையீட்டு நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

இந்த மனு நிஸங்க பந்துல கருணாரத்ன, தேவிகா அம்பரத்ன மற்றும் டி.எம்.சமரக்கோன் ஆகிய மூவரடங்கிய நீதிபதிகள் குழாம் முன்னிலையில் நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

மனு மீதான விசாரணைகள் நிறைவடையும் வரை, பரிந்துரைகளை வலுவிழக்கச் செய்யுமாறு ரணில் விக்ரமசிங்க தனது மனுவில் கோரிக்கை விடுத்துள்ளார்.

ஆணைக்குழு தனது விசாரணைகளை மேற்கொண்ட விதம் முற்றிலும் சட்டவிரோதமானது என மனுவில் குற்றஞ்சுமத்தப்பட்டுள்ளது.

இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு செய்த முறைப்பாடுகளுக்கு தாம் பொறுப்புக்கூற வேண்டும் என ஆணைக்குழுவின் இறுதி பரிந்துரைகளில் தெரிவிக்கப்பட்டுள்ளமையை ஊடகங்கள் வாயிலாக தாம் அறிந்து கொண்டதாக ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க உயர் நீதிமன்றத்தில் சுட்டிக்காட்டியிருந்தார். ஆணைக்குழுவில் ஆஜராகி விடயங்களை தெளிவுபடுத்துவதற்கு போதுமான கால அவகாசம் வழங்காமையானது, நாட்டின் சட்டத்திற்கு மாத்திரமின்றி தர்மத்திற்கும் முரணான செயல் எனவும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரணில் விக்ரமசிங்க குறிப்பிட்டுள்ளார்.

# வேலை தேடி இளைஞர்கள் வெளிநாடு செல்வது நல்லது

## -அந்நிய செலாவணி கிடைக்கும் - அமைச்சர் நாமல்-

பா.கிருபாகரன், ந.ஜெயகாந்தன்



நாட்டின் அந்நிய செலாவணிக்கு உதவியளித்து பொருளாதாரத்தை பலப்படுத்துவதற்காக உதவினால் இளைஞர்கள் வெளிநாடுகளுக்கு செல்வதால் பிரச்சினை இல்லை என்று விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்ற நீதி அமைச்சு,இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சு,தொழில்நுட்ப அமைச்சு,அபிவிருத்தி கூட்டிணைப்பு மற்றும் கண்காணிப்பு அமைச்சு, சிறைச்சாலைகள் முகாமைத்துவம் மற்றும் சிறைக்கைதிகள் புனர்வாழ்வளிப்பு இராஜாங்க அமைச்சு ஆகியவற்றின் நிதி ஒதுக்கீடுகள் மீதான குழு நிலை விவாதத்தின் இறுதியில் பதிலளித்து உரையாற்றும் போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

அதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

இளைஞர், விளையாட்டு அமைச்சாக நாங்கள் பணியாற்றும் போது மற்றைய அனைத்து அமைச்சுகளுடனும் நாங்கள் இணைந்து செயற்பட வேண்டியுள்ளது. நாங்கள் ஒரு இலட்சம் இளைஞர்களை அடிப்படையாகக் கொண்டு இணையம் மூலம் ஆய்வு நடத்தினோம். இளைஞர்கள் அவர்களின் பல்வேறு பிரச்சினைகளை முன்வைத்துள்ளனர். அவர்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காண வேண்டும். அந்த ஆய்வில் எதிர்காலம் தொடர்பில் எதிர்பார்ப்பு இல்லாமையே அதிகளவில் இருந்தது. அதற்கு பல்வேறு காரணங்கள் இருக்கலாம்.

நாட்டில் இன்று 30 வீதமான இளைஞர்கள் வேலையில்லாது இருக்கின்றனர். கொவிட் நிலைமையால் இதில் மாற்றங்கள் ஏற்படலாம். நாங்கள் அரசாங்கமாக இருந்து இவற்றுக்கு தீர்வு காண்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இதனால் இளைஞர்கள் மத்தியில் தொழில் பயிற்சிகளை அதிகரிக்க தேவையான நடவடிக்கை எடுக்கின்றோம். தொழிற்பேட்டைகளுக்கு சென்று பார்த்தால் அங்கு இடங்கள் உள்ளன. இப்போது இளைஞர்கள் வெளிநாடுகளுக்கு செல்வது தொடர்பாக கதைக்கின்றோம். அவர்கள் வேலைகளை தேடி எங்கே சென்றாலும் பிரச்சினையில்லை. அவர்கள் எமது அந்நிய செலாவணிக்கு உதவி பொருளாதாரத்தை பலப்படுத்த உதவினால் எந்தப் பிரச்சினையும் இல்லை.

எவ்வாறாயினும் நாங்கள் நீண்ட கால வேலைத்திட்டங்களுடன் இளைஞர்கள் தொடர்பில் திட்டங்களை அமைக்க வேண்டும். தொழில்நுட்பத்துடன் நாங்கள் இளைஞர்களை கொண்டு செல்ல வேண்டும் என்றார்.


# 5ம் ஆண்டு நினைவலைகள்

பிறப்பு 05 * 06 * 1938



இறப்பு 06 * 12 * 2016

அமரர்

## வைத்திலிங்கம் இராசேந்திரம்

அன்பாய் அரவணைத்து

அனைத்து செல்வங்களையும் உவந்தளித்து

எம்மையெல்லாம் நல்வழிப்படுத்திய தந்தையே

ஆண்டுகள் எத்தனை சென்றாலும்

உம் நினைவுகள் எம்மை விட்டு என்றும் அகலாது

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

செல்லமுத்து வீதி,
அச்சுவேலி வடக்கு,
அச்சுவேலி.

என்றும் உங்கள் நினைவுகளுடன்
குடும்பத்தினர்.



# VACANCIES
# UNIVERSITY OF JAFFNA, SRI LANKA

This has reference to the advertisement dated 03.12.2021 calling application for the vacancies for the Academic positions at the following faculties:

1. Faculty of Engineering
2. Faculty of Agriculture

It is hereby amended the bank account details as follows;

"The deposit of a sum of Rs.100/- credited to the Peoples Bank in favour of University of Jaffna **Collection Account No: 970000090000387** of Bursar, University of Jaffna.".

09.12.2021

REGISTRAR
UNIVERSITY OF JAFFNA,
SRI LANKA.



# நல்லூர் பிரதேச சபையின் 2022ம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டம் மக்கள் பார்வைக்கு

நல்லூர் பிரதேச சபையின் 2022ம் ஆண்டிற்கான நிகழ்ச்சித்திட்ட வரவு செலவுத் திட்டம் 1987ம் ஆண்டு பிரதேச சபைச் சட்டத்தின் 15ம் இலக்க 168ம் பிரிவிற்கமைய தயாரிக்கப்பட்டு 07.12.2021ம் திகதிய சபை அமர்வில் அங்கீகரிக்கப்பட்டு 09.12.2021 திகதி தொடக்கம் 22.12.2021ம் திகதி வரை பிரதேச சபையின் தலைமை அலுவலகம், உப அலுவலகங்கள் மற்றும் பொது நூலகங்களில் மக்கள் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளது என்பதுடன் அலுவலக நேரத்தில் பார்வையிடலாம் என்பதனையும் அறியத்தருகின்றேன்.

ப.மயூரன்
தவிசாளர், நல்லூர் பிரதேச சபை.



# Invitation for Bids (IFB 07)

## Department of Agrarian Development, Jaffna
## Procurement of Goods (Barbed wires)

1. The Chairman, Department Procurement Committee on behalf of the Department of Agrarian Development , Jaffna invites sealed bids for the procurements mentioned in the tables below from eligible and qualified bidders possessing a minimum laid down experience.
2. Bidding will be conducted through the National Competitive Bidding (NCB)
3. Interested eligible bidders may obtain further information and inspect the Bidding Documents at the Department of Agrarian Development, Pointpedro Road, Nallur, Jaffna during office hours
4. A complete set of bidding documents in English language shall be obtained by interested bidders from the Department of Agrarian Development ,Jaffna only, on any working days from 10.12.2021 up to 22.12.2021 between 9.00 am to 3.00 pm on submission of a written request with a certified copy of Business Registration Certificate and upon payment of a non- refundable fee as described in the table below.
5. Bids should be submitted only on the documents obtainable from the, Department of Agrarian Development, Jaffna and Securely Sealed bids shall be sent by registered post addressed to The Chairman, Department of Agrarian Development , Point Pedro Road, Nallur, Jaffna or deposited in the Tender Box available at the Department of Agrarian Development on or before 23.12.2021, 2.30 p.m. Late bids will be rejected. Original and duplicate bids should be enveloped separately and the both envelopes (Original & Duplicate) should be sealed in one envelope. Bidders should write the Procurement of Barbed wires on the top left hand corner of this envelope. Bids will be opened at 2.30 p.m on the same day in the presence of the bidders or bidders' representatives who choose to attend.
6. Procurement Committee will keep the right to make final decision in regard to accept or reject Bids.

Goods
Table

| Bid ID | Item | Description | Qty | Bid Security Amount (in Rs.) | Bid Security Valid Period until | Non Refundable Fee (in Rs.) |
|---|---|---|---|---|---|---|
| 9/2/1/TENDER/2021 | Supply of barbed wire | 14gauge 4 points 3 aparts –(Weight -25 Kg/Roll or Length -900Ft / Roll) | 200 Nos | 20,000.00 | 23.01.2022 | 1000.00 |

Date:- 10.12.2021

The Chairman,
Department Of Agrarian Development,
Jaffna District.
T.P No- 021 222 2396
Fax No- 021 222 4058

# அவிஷ்க- திசர சிக்ஸர் மழை; ஜப்னா கிங்ஸ் 3 ஆவது வெற்றி



கண்டி வோரிஸர்ஸுக்கு எதிராக நேற்று முன்தினம் இடம்பெற்ற போட்டியில் திசர பெரேரா மற்றும் அவிஷ்க பெர்னாண்டோவின் அதிரடியான சிக்ஸர்களால் ஜப்னா கிங்ஸ் 14 ஓட்டங்களினால் வெற்றி பெற்றுள்ளது.

2021 லங்கா பிரீமியர் லீக் டி-20 கிரிக்கெட் தொடரின் 7 ஆவது போட்டி கொழும்பு ஆர்.பிரேமதாச மைதானத்தில் திசர பெரேரா தலைமையிலான ஜப்னா கிங்ஸ் மற்றும் அஞ்சலோ பெரேரா தலைமையிலான கண்டி வோரிஸர் அணிகளுக்கு இடையில் இடம்பெற்றது.

போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற கண்டி வோரிஸர், முதலில் துடுப்பெடுத்தாடும் வாய்ப்பினை எதிர் அணிக்கு வழங்கியது.

அதற்கிணங்க ஜப்னா கிங்ஸ் அணி முதலில் துடுப்பெடுத்தாடும்போது மழை குறுக்கிட்டதனால் போட்டி ஆரம்பத்திலேயே இடை நிறுத்தப்பட்டது.

பின்னர் மைதான ஊழியர்களின் கடின உழைப்பின் பலனாக, ஒரு அணிக்கு 14 ஓவர்கள் வீதம் 106 நிமிடங்கள் கழித்து ஆட்டம் தொடங்கியது.

நிலைமையினை உணர்ந்து அதிரடியான ஆட்டம் காட்ட ஆரம்பித்த ஜப்னா கிங்ஸ் 14 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட் இழப்புக்கு 181 ஓட்டங்களை குவித்தது.

வலது மற்றும் இடது கை துடுப்பாட்ட வீரர்களான இவர்களின் மூன்றாவது விக்கெட்டுக்கான இணைப்பாட்டம் அணிக்காக 33 பந்துகளில் 105 ஓட்டங்களை பெற்றுக் கொடுத்தது.

அவிஷ்க பெர்னாண்டோ இன்னிங்ஸில் 7 சிக்ஸர்களையும், திசர பெரேரா 6 சிக்ஸர்களையும் மொத்தமாக விளாசினர்.

ஜப்பான கிங்ஸ் குவித்த 181 ஓட்டங்களில் 128 ஓட்டங்கள் சிக்ஸர்கள் மற்றும் பவுண்டரிகள் மூலம் கிடைக்கப் பெற்றவை ஆகும்.

182 ஓட்டம் எடுத்தால் வெற்றி என்ற இலக்கை துரத்திய கண்டி வோரியர்ஸ் அணியால் 14 ஓவர்களில் 6 விக்கெட் இழப்புக்கு 166 ஓட்டங்களை மட்டுமே எடுக்க முடிந்தது.

சரித் அசலங்கா மற்றும் கானர் லூயிஸ் ஜோடி முதல் விக்கெட்டுக்கு 30 பந்துகளில் 64 ஓட்டங்களை அணிக்காக பெற்றுக் கொடுத்தது. உலகின் நம்பர்1 டி-20 பந்து வீச்சாளரான ஹசரங்கவின் பந்து வீச்சுக்களை கடுமையாக தாக்கிய அசலங்க மொத்தமாக 19 பந்துகளில் 2 சிக்ஸர்கள், 5 பவுண்டரிகளுடன் 42 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். அதன் பின்னர் களமிறங்கிய ரோவ்மன் போல், கானர் லூயிஸுடன் இணைந்து அதிரடி காட்டினார். கண்டி வோரியர்ஸ் அணிக்காக ரோவ்மன் போல் 19 பந்துகளில் 61 ஓட்டங்களை குவித்தார்.

இறுதியாக கண்டி வோர்யர்ஸ் அணியினரால் மட்டுப்படுத்தப்பட்ட 14 ஓவர்கள் நிறைவில் 166 ஓட்டங்களை மாத்திரமே பெற முடிந்தது.

இந்த வெற்றி நான்கு போட்டினை எதிர்கொண்ட ஜப்னா கிங்ஸுக்கு கிடைத்த மூன்றாவது வெற்றியாகும். அதேநேரம் கண்டி வோரியர்ஸுக்கான மூன்றாவது தோல்வியாகும்.

# ஒலிம்பிக் போட்டியை புறக்கணித்த நாடுகளுக்கு சீனா எச்சரிக்கை

2022 பீஜிங் குளிர்கால ஒலிம்பிக் போட்டிகளை தூதரக ரீதியாக புறக்கணிப்பதாக அறிவித்துள்ள நாடுகளுக்கு, தவறான செயல்களுக்கு விலை கொடுக்கப்படும் என்று சீனா எச்சரித்துள்ளது.


அமெரிக்கா, இங்கிலாந்து, அவுஸ்திரேலியா மற்றும் கனடா ஆகியவை சீனாவின் மனித உரிமைகள் பதிவு குறித்த கவலைகள் காரணமாக 2022 பீஜிங் குளிர்கால ஒலிம்பிக் விளையாட்டுகளுக்கு அரசாங்கப் பிரதிநிதிகளை அனுப்பாது என்று கூறியுள்ளது.

சீனாவின் ஜின்ஜியாங் மாகாணத்தில் மனித உரிமை மீறல்கள் தொடர்பான கவலைகளுக்கு மத்தியில் சர்வதேச நாடுகள் மேற்கண்ட தீர்மானத்தை எடுத்திருந்தன.

இந் நிலையிலேயே சீனா போட்டிகளை புறக்கணிக்கும் நாடுகளுக்கு எச்சரித்துள்ளதுடன், அமெரிக்கா, பிரிட்டன் மற்றும் அவுஸ்திரேலியா ஆகியவை அரசியல் சூழ்ச்சிக்கு ஒலிம்பிக் மேடையைப் பயன்படுத்தியுள்ளதாக குற்றம் சாட்டியுள்ளது.

பீஜிங்கில் பெப்ரவரி மாதம் குளிர்கால ஒலிம்பிக் போட்டிகள் நடைபெற உள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# பொதுநலவாய பளுதூக்கல் போட்டி; தங்கப் பதக்கம் வென்றார் ஸ்ரீமாலி



உஸ்பெகிஸ்தானிலுள்ள டஷ்க்கெண்ட் நகரில் நடைபெற்று வரும் உலக பளுதூக்கல் போட்டித் தொடர் மற்றும் பொதுநலவாய பளுதூக்கல் போட்டியின் இரண்டாவது தினத்தில் இலங்கையின் ஸ்ரீமாலி சமரக்கோன் பொதுநலவாய பளுதூக்கல் போட்டித் தொடரில் பெண்களுக்கான 45 கிலோ கிராம் எடைக்குட்பட்ட பிரிவில் தங்கப் பதக்கத்தை சுவீகரித்தார்.

ஸ்ரீமாலிக்கு உலக பளுதூக்கல் பதக்கம் வெல்ல முடியாமல் போனபோதும், பொதுநலவாய பளுதூக்கல் போட்டித் தொடரில் இலங்கைக்காக தங்கப் பதக்கம் வென்றுள்ளார்.

இதில் அவர், ஸ்னெட்ச் முறையில், 58 கிலோ கிராம் எடையும் க்ளீன் அண்ட் ஜேர்க் முறையில் 78 கிலோகிராம் எடையும் என மொத்தமாக 136 கிலோ கிராம் எடையை தூக்கியிருந்தார்.

இந்த வெற்றியின் மூலம், ஸ்ரீமாலி சமரக்கோன் அடுத்தாண்டு நடைபெறவுள்ள பேர்மிங்ஹாம் பொதுநலவாய விளையாட்டு விழாவில் போட்டியிடுவதற்கு நேரடித் தகுதியை பெற்றுக்கொண்டார்.




# 33 ஆவது தேசிய இளையோர் மரதன் 12 ஆம் திகதி ஆரம்பம்



33 ஆவது தேசிய இளையோர் மரதன் ஓட்டப் போட்டி எதிர்வரும் 12 ஆம் திகதியன்று அதிகாலை 5 மணிக்கு கொழும்பு காலிமுகத்திடலுக்கு அருகில் ஆரம்பமாகவுள்ளது.

ஆண்கள் பங்கேற்றும் இந்த மரதன் போட்டியானது, காலி முகத்திடலிலிருந்து ஆரம்பமாகி காலி வீதியினூடாக மொரட்டுவை புதிய வீதி, பாணந்துறை ஊடாக களுத்துறை மாவட்ட செயலாளர் காரியாலயத்தின் அருகே நிறைவடைவுள்ளதாக தேசிய இளைஞர் சேவைகள் பேரவை குறிப்பிடுகின்றது.

இதைத்தவிர, பெண்கள் பங்கேற்கும் 21 கிலோமீற்றர் தூரம் கொண்ட அரை மரதன் ஓட்டப் போட்டியாக நடத்த. போட்டி ஏற்பாட்டுக்குழுவால் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதே வேளை, 33 ஆவது இளையோர் விளையாட்டு விழா எதிர்வரும் 19, 20 மற்றும் 21 ஆம் திகதிகளில் கொழும்பு சுகததாச விளையாட்டரங்கில் நடத்தப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# இங்கிலாந்துக்கு எதிரான தொடரை கைப்பற்றியது இலங்கை அணி

19 வயதுக்குட்பட்ட இலங்கை மற்றும் இங்கிலாந்து கிரிக்கெட் அணிகள் பங்கேற்று வருகின்ற 5 போட்டிகள் கொண்ட இளையோர் சர்வதேச ஒருநாள் தொடரை ஒரு போட்டி எஞ்சியுள்ள நிலையில் இலங்கை அணி 3க்கு 1 என்ற கணக்கில் கைப்பற்றியது.

நேற்று முன்தினம் கொழும்பு எஸ்.எஸ்.சீ. மைதானத்தில் நடைபெற்ற 4 ஆவது போட்டியில் 19 வயதுக்குட்பட்ட இலங்கை அணி 126 ஓட்டங்களால் அபார வெற்றியை ஈட்டியது.

இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 50 ஓவர்களில் 7 விக்கெட்டுக்களை இழந்து 243 ஓட்டங்களை குவித்தது.

துடுப்பாட்டத்தில் பவன் பத்திராஜ (60), ரவீன் டி சில்வா (59) அரைச் சதங்களை அடித்தனர். இவர்களைத் தவிர ஆரம்ப வீரராக களமிறங்கிய ஷெவொன் டேனியல் 39 ஓட்டங்களை பெற்றுக்கொண்டார்;.

பந்துவீச்சில் பெஞ்சமின் கிளிப் 3 விக்கெட்டுக்களையும், நதன் போர்ன்வல் 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

244 ஓட்டங்களை நோக்கி துடுப்பெடுத்தாடிய 19 வயதுக்குட்பட்ட இங்கிலாந்து அணியினர் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 117 ஓட்டங்களை மாத்திரமே பெற்றனர்.

துடுப்பாட்டத்தில் ஜோர்ஜ் தோமஸ் 40 ஓட்டங்களையும், ஹெரி க்ரோஷோ 31 ஓட்டங்களையும் அதிகப்பட்சமாக பெற்றுக்கொடுத்தனர்.

துடுப்பாட்டத்தில் அரைச்சதம் அடித்து அசத்தியிருந்த ரவீன் டி சில்வா இலங்கை அணி சார்பாக பந்துவீச்சிலும் அசத்தி 3 விக்கெட்டுக்களை கைப்பற்றியிருந்தார்.

இவரைத் தவிர மதீஷ பத்திரண 2 விக்கெட்டுக்களையும் ஷெவொன் டேனியல், வனுஜ சஹான், சதீஷ ராஜபக்ஷ ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டுக்களை கைப்பற்றினர்.

இந்த வெற்றியின் மூலம் 4 போட்டிகள் நிறைவில் இலங்கை அணி 3க்கு 1 என்ற கணக்கில் முன்னிலையுடன் தொடரைக் கைப்பற்றியுள்ளது.



இப்பத்திரிகை ஏசியன் மீடியா பப்ளிக்கேஷன்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட்டால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 267 ஆம் இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 2021 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 10 ஆம் திகதி வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# தொற்றா நோய்களைக் கட்டுப்படுத்த மாவட்ட மட்டத்தில் செயற்குழு



தொற்றா நோய்களைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்காக, மாவட்டக் குழுவின் அங்குரார்ப்பண நிகழ்வு மட்டக்களப்பு மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்றுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டச் செயலாளரும் அரசாங்க அதிபருமாகிய கே.கருணாகரன் தலைமையில், மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போது மாவட்டச் செயற்குழு அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது.

சுகாதார அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள சுற்று நிருபத்திற்கு அமைவாக, ,நாடளாவிய ரீதியில் தொற்றா நோய்கள் தொடர்பான மாவட்டமட்டக் குழுக்கள் மாவட்ட ரீதியாக ஸ்தாபிக்கப்பட்டு வரும் நிலையில், மட்டக்களப்பு மாவட்டத்தில், தொற்றா நோய்களைக் குறைப்பதற்காக விசேட வேலைத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

தொற்றா நோய்களினால் ஏற்படும் மரண வீதத்தினைக் குறைக்கும் பொருட்டு, ஆரம்பிக்கப்பட்டுள்ள மாவட்ட மட்டச் செயற்குழுவின் ஊடாக, பிரதேச மட்டத்தில் செயற்பாடுகளை ஆரம்பித்தல் தொடர்பாகவும், பிரதேச மட்டக் குழுக்களுள் துறைசார் நிபுணர்களையும் உள்வாங்கி அமைத்து, செயற்திறனுடன் செயற்படுத்தல் தொடர்பாகவும், பொதுமக்களை எவ்வாறு விழிப்புணர்வூட்டுவது என்பது தொடர்பாகவும், அதிகாரிகளுக்கு இதன் போது, அறிவுறுத்தல்கள் மற்றும் ஆலோசனைகள் வழங்கப்பட்டன.

மூன்று வருடங்கள் செயலாற்றவுள்ள மாவட்ட மட்ட செயற்குழுவானது, மாவட்ட மட்டத்தில் சேவையாற்றும் துறைசார் அதிகாரிகள் 16 பேரை உறுப்பினர்களாகக் கொண்டு செயற்படவுள்ளது. குறித்த கலந்துரையாடலில், பிரதேச செயலாளர்கள், சுகாதாரத் துறை சார்ந்த அதிகாரிகள், பொலிஸ் திணைக்கள அதிகாரிகள், உள்ளூராட்சி மன்றங்களின் அதிகாரிகள், வலயக்கல்வி பணிமனைகளின் அதிகாரிகள், கமநல சேவை அதிகாரிகள், மாவட்ட சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் அதிகாரிகள், சுற்றாடல் அதிகார சபை அதிகாரிகள் மற்றும் மாவட்ட விளையாட்டு துறைசார் அதிகாரிகள் உட்பட, மேலும் பல துறைசார் திணைக்களங்களின் அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

எதிர்வரும் ஜனவரி மாதம் 31 ஆம் திகதிக்கு முன்பாக மட்டக்களப்பிலிலுள்ள, 14 பிரதேச செயலாளர் பிரிவுகளிலும், தொற்றாநோய்களைக் குறைப்பதற்கான பிரதேச மட்டச் செயற்குழு ஆரம்பிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# 100 அடிப் பள்ளத்தில் பாய்ந்த கார்; சாரதி காயங்களுடன் மீட்பு

தலவாக்கலை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சென்.கிளயார் பிரதேசத்தில், நேற்று அதிகாலை ஒரு மணியளவில் இடம்பெற்ற, வாகன விபத்தில், சாரதி காயமடைந்த நிலையில், நுவரெலியா மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நுவரெலியாவிலிருந்து கொட்டகலைப் பகுதிக்குச் சென்ற கார் நுவரெலியா - ஹட்டன் பிரதான வீதியில் சென்.கிளயார் பிரதேசத்தில், வீதியை விட்டு விலகி, 100 அடிப் பள்ளத்தில் பாய்ந்து விபத்திற்குள்ளானது.

மேற்படி காரில், சாரதி மட்டும் பயணித்துள்ளதாகவும், அவரே இவ்வாறு காயங்களுக்கு உள்ளானதாகவும், பொலிஸார் தெரிவித்தனர். சாரதி மதுபானம் அருந்திய நிலையில், அவரின் கவனக் குறைவினாலேயே, குறித்த விபத்து இடம்பெற்றதாக, பொலிஸாரின் விசாரணையிலிருந்து தெரியவந்துள்ளது. மேலதிக விசாரணைகளை தலவாக்கலைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்

# ஓமிக்ரோன் குறித்து மருத்துவப் பேராசிரியர் வெளியிட்ட முக்கியமான தகவல்



இலங்கை, ஐரோப்பா உள்ளிட்ட நாடுகளில் ஓமிக்ரோன் கோவிட் வகையானது, வேகமாகப் பரவாதென, ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின், நோயெதிர்ப்பு மற்றும் மூலக்கூறு மருத்துவத் துறைப் பணிப்பாளர், வைத்தியர் சந்திம ஜீவந்தர தெரிவித்துள்ளார்.

தென்னாப்பிரிக்க விஞ்ஞானிகள் குழுவொன்று மேற்கொண்ட பரிசோதனையில், ஓமிக்ரோன் பற்றிய இந்தத் தகவலைக் கண்டுபிடித்துள்ளதாக, அவர் தனது ட்விட்டர் பக்கத்தில் குறிப்பிட்டுள்ளார். இந்த வைரஸ், நோய்த் தடுப்பு மருந்துகளுக்கு கட்டுப்படவில்லை என்றாலும், பூஸ்டர் தடுப்பூசி மூலம் அதிலிருந்து பாதுகாப்பை பெற்றுக் கொள்ள முடியுமென்று, ஆய்வில் தெரியவந்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும், இந்த வைரஸ் குறித்து, இன்னும் உறுதியான முடிவுக்கு வர முடியாதெனவும், அதனை ஆய்வு செய்வதற்கு, அதிக நேரமும், தரவுகளும் தேவைப்படுவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# பரீட்சைகள் திணைக்களத்தின் விசேட அறிவிப்பு




இவ் வருடத்திற்கான க.பொ.த (சா/த) பரீட்சையில், அழகியல் பாடங்களில் தங்களின் செயல்முறைப் பரீட்சைக்குத் தோற்றவிருக்கும் பரீட்சார்த்திகள் தற்போது கோவிட்-19 தொற்றினால் பாதிக்கப்பட்டிருந்தால், வேறு வசதியான நாளில் மேற்படி பரீட்சைக்குத் தோற்றுவதற்கு ஏற்பாடு செய்து கொள்ள முடியுமென, பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

இது குறித்து அனைத்துப் பாடசாலை அதிபர்களுக்கும் சுற்றறிக்கை மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.தற்போது தனிமைப் படுத்தலில் இருப்பவர்களும், மேற்படி நடைமுறையைப் பின்பற்றலாம். இவ்வாறான கோரிக்கைகளை, பாடசாலைப் பரீட்சார்த்திகள், தமது அதிபர்களூடாக மேற்கொள்ள வேண்டுமெனவும், பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பிலான தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கு தனியார் பரீட்சார்த்திகள் பரீட்சை திணைக்களத்தை தொடர்பு கொள்ள வேண்டுமெனவும், திணைக்களம் அறிவித்துள்ளது. இந்த செயல்முறைப் பரீட்சைகள், நாடு தழுவிய ரீதியில் பரீட்சைகள் திணைக்களத்தினால், டிசம்பர் 1 ஆம் திகதி ஆரம்பித்து எதிர்வரும் 11 ஆம் திகதி வரை நடைபெறும். மேலதிக விபரங்களை 0112 784208 மற்றும் 0112 784537 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு, பெற்றுக் கொள்ள முடியும் எனவும், பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.


# கேள்வி அறிவித்தல்

## பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, கிளிநொச்சி, வடக்கு மாகாணம்

1. தலைவர், பிராந்திய பெறுகைக்குழு, பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, கிளிநொச்சி அவர்கள், கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிட்டுள்ள கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனைக்கும், அதன் பிரிவுக்குட்பட்ட வைத்தியசாலைகளுக்கும் 2022 ஆம் ஆண்டிற்கான நிழல் பிரதி எடுக்கும் இயந்திரங்கள் (Photo Copiers) மற்றும் குளிரூட்டிகள் (Air Conditioners) பராமரிப்பு மற்றும் சுத்திகரிப்பு சேவைக்கு இப்போது தகவுடையோரும் தகைமைபெற்றவருமான கேள்வியாளர்களிடம் இருந்து குறிவீடு செய்யப்பட்ட விலைக்கேள்விகளைக் கோருகின்றார்.

| விடயம் | குறிவீட்டு இலக்கம் | இயந்திரங்களின் எண்ணிக்கை | ஒப்பந்த காலம் | மீளளிக்கப்படாத வைப்புத் தொகை (ரூபா) | மீளளிக்கப்படும் வைப்புத் தொகை (ரூபா) | மீளளிக்கப்படும் வைப்புத் தொகைக்கான காலம் |
|---|---|---|---|---|---|---|
| நிழல் பிரதி எடுக்கும் இயந்திரங்களின் பராமரிப்பு மற்றும் சுத்திகரிப்பு சேவை | NP/45/04/02 /PC/2021/01 | 24 | ஒரு வருடம் | 2,500.00 | 25,000.00 | 25.02.2022 |
| குளிரூட்டிகளின் பராமரிப்பு மற்றும் சுத்திகரிப்பு சேவை | NP/45/04/ 02/AC/ 2021/01 | 73 | ஒரு வருடம் | 2,500.00 | 50,000.00 | 25.02.2022 |

2. விலைக்கேள்வியானது தேசிய போட்டி கேள்வி (NCE) மூலம் நடாத்தப்படும்.
3. விலைக் கேள்விதாரர்கள் உரிய வகையிலான வியாபாரபதிவுடையவராகவும், கறுப்புப் பட்டியலில் பெயர் இடம்பெறாதவராயிருத்தலும் வேண்டும்.
4. தகைமைகள் பற்றிய தேவைப்பாடுகள் கேள்வி ஆவணத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது.
5. அக்கறை கொண்டுள்ள கேள்வியாளர்கள் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, A9 வீதி, கிளிநொச்சி (தொலைபேசி இல: 0212285932/ 0212225719) அவர்களிடமிருந்து மேலதிக தகவல்களைப் பெறலாம் என்பதுடன் இம்முகவரியில் காலை 09.00 மணியிலிருந்து பிற்பகல் 15.00 மணிவரை கேள்வி ஆவணங்களை பரிசோதனை செய்யலாம்.
6. அக்கறை கொண்டுள்ள கேள்வியாளர்களினால் ஆங்கில மொழியிலான கேள்வி ஆவணங்களின் பூரணமான தொகுதியொன்றை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, A9 வீதி, கிளிநொச்சி எனும் முகவரியில் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றை சமர்ப்பித்து 10.12.2021 ஆம் திகதி முதல் 23.12.2021 ஆம்திகதிவரைமு.ப09.00 மணிதொடக்கம்பி.ப 15.00மணிவரையானகாலப்பகுதியில் மேலே அட்டவணையில் கூறப்பட்டுள்ள மீளளிக்கப்படாததொகையினை கட்டணமாக செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.
7. கேள்விகள் 24.12.2021ம் திகதியன்று முற்பகல் 10.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் தலைவர், பிராந்திய கேள்விச்சபை, பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, A9 வீதி, கிளிநொச்சி எனும் முகவரியில் நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ இரு பிரதிகளில் ஒப்படைத்தல் வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்விதாரர்கள் குறியீட்டு இலக்கத்தினை தபாலுறையின் இடது மேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும். நேரடியாக கீழேயுள்ள முகவரியில் வருகைதரவிரும்பும் கேள்வியாளர்களின் பிரதிநிதிகளது சமூகத்தில் முடிவுறுத்தல் காலத்தின் பின் உடனடியாக கேள்விகள் திறக்கப்படும்.
8. மேலே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு கேள்விப் பிணைப்பணம் (Bid Security) செலுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.
9. 01/10/2021 ஆம் திகதிக்குப்பின் அந்தந்தப் பிரதேச செயலாளர்களிடம் இருந்து பெறப்பட்ட தமது சொத்துக்களின் பெறுமதியை உறுதிப்படுத்தும் சான்றுக்கடிதமும் அத்துடன் வங்கி உத்தரவாதக்கடிதம் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
10. ஏற்கனவே சேவையினை வழங்கி வரும் ஒப்பந்தக்காரர்கள் எதிர்வரும் காலங்களுக்கு புதியவர்களாகவே கருதி தீர்மானம் எடுக்கப்படும்.
11. இவ் விலைமனுக்கோரலை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ அல்லது எந்தவொரு நிலையிலுமோ இப்பூரண நடவடிக்கையிலிருந்து எவருக்கும் நட்டஈடு எதுவும் செலுத்தாமலே இவ்விலைமனுகோரலை இரத்து செய்வதற்கு பெறுகைக்குழு தலைவருக்கு பூரண அதிகாரம் உண்டு.

தலைவர்,
பிராந்திய பெறுகைக்குழு,
பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்பணிமனை,
கிளிநொச்சி.



# கேள்வி அறிவித்தல்
# சபைநிதி வேலைத்திட்டம் - 2021

## வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை, கரவெட்டி.

தலைவர், பெறுகைக்குழு, வடமராட்சிதெற்கு மேற்கு பிரதேசசபை, கரவெட்டி, வடமாகாணம், தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க்குறிப்பிட்ட அட்டவணையில் காட்டப்பட்டுள்ள வேலைகளுக்காக கோருகின்றார்.

1. தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது.
2. கேள்வி பெறத்தகுதியுடையவராவதற்கு, வெற்றிபெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும், அட்டவணையிற் காட்டியபடி பொருத்தமான தரத்தில் வீதி, கட்டடம் அமைப்பதற்கான சீடா (CIDA) பதிவினை மேற்கொண்டவராகவும், தொடர்இலக்கம் 03 ஆவது வேலைக்கு வியாபார பெயர்ப்பதிவுச்சான்றிதழ், வியாபார உரிமம் உடையவராகவும் இருத்தல் வேண்டும்.
3. தேவையான தகைமைகள், கேள்வி ஆவணம் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) கேள்வி ஆவணம் பகுதி 5 இல் காட்டப்பட்டுள்ளது.
4. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் தவிசாளர், வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை, கரவெட்டி. (தொலைபேசி, தொலைநகல் : 021-2263271 இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் வேலை நாட்களில் காலை 09.00 மணிமுதல் 14.00 மணிவரை 10.12.2021 - 24.12.2021 வரையான காலப்பகுதியில் கேள்வி ஆவணங்களை பார்வையிடலாம்.
5. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கிலமொழியில் தவிசாளர், வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேசசபை, கரவெட்டி எனும் இடத்திலிருந்து 10.12.2021 திகதியிலிருந்து 24.12.2021 வரை காலை 09.00 மணிக்கும் 14.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா 2000.00 செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்படல் வேண்டும்.
6. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் கேள்வியை இரு பிரதிகளில் தயாரித்து மூலப்பிரதி, இணைப் பிரதியை தனித்தனி உறைகளிட்டு தவிசாளர், வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேசசபை, கரவெட்டி எனும் முகவரிக்கு 27.12.2021 ம் திகதி 10.30 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைத்தல் வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது, கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகைதரும் கேள்விதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.
7. கேள்வியானது கேள்விகள் சமர்ப்பிக்கும் இறுதித் திகதியிலிருந்து 1 - 2 வரையான வேலைகளிற்கு 63 நாட்கள் வரையும் (அறுபத்து மூன்று நாட்கள் (28.02.2022) வரையும்) 3 - 6 வரையான வேலைகளிற்கு 49 நாட்கள் வரையும் (நாற்பத்தொன்பது நாட்கள் (14.02.2022) வரையும்) செல்லுபடியாகும்.
8. கேள்விப்பிணை வைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.

| தொடர் இல | கேள்வி எண் | வேலை விபரம் | மதிப்பீட்டுத் தொகை (With out Vat) (ரூ) மில்லியன் | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் | வேண்டப்படும் கேள்விப் பிணை: பிணைவைப்பு (ரூபா) | வேண்டப்படும் கேள்விப் பிணை: செல்லுபடியாகும் காலம் |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | NP/14/41(12)/2/ Council/2021/16 | வீதிக்கு பெயர்ப்பலகை பொருத்துதல் - வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேசசபை எல்லைப்பகுதிக்குள் | 2.775 | 90 நாட்கள் | வியாபார பெயர்ப்பதிவுச் சான்றிதழ் வியாபார & உரிமம்-2021 | 28,000.00 | 28.03.2022 |
| 02 | NP/14/41(12)/2/ Council/2021/29 | முள்ளி சேதனப்பசளை தயாரிக்கும் இடத்தில் பல்நோக்கு மண்டபம் அமைத்தல் (J/370) | 3.328 | 90 நாட்கள் | C8 & C7 | 33,500.00 | 28.03.2022 |
| 03 | NP/14/41(12)/2/ Council/2021/30 | பிட்டிது இந்து மயான வீதி புனரமைப்பு (J/370) | 0.924 | 45 நாட்கள் | C9 & C8 | 9,500.00 | 14.03.2022 |
| 04 | NP/14/41(12)/2/ Council/2021/31 | சமரபாகு குமாரிபோடை வீதி புனரமைப்பு (J/357) | 0.990 | 45 நாட்கள் | C9 & C8 | 10,000.00 | 14.03.2022 |
| 05 | NP/14/41(12)/2/ Council/2021/32 | தலைமை அலுவலகத்தில் முன்பக்க மதில், காவலாளி அறை, களஞ்சியம் புனரமைப்பு (J/381) | 1.04 | 60 நாட்கள் | C9 & C8 | 10,500.00 | 14.03.2022 |
| 06 | NP/14/41(12)/2/ MISC/Deposit/ 2021/01 | உடுப்பிட்டிச் சந்தையின் மதில் அமைத்தல். (J/359) | 0.716 | 45 நாட்கள் | C9 & C8 | 7,500.00 | 14.03.2022 |

09. கேள்விகோரல் பற்றிய முன் கூட்டிய கூட்டம் 17.12.2021 ஆந் திகதி 14.30 மணிக்கு வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேசசபை அலுவலகத்தில் நடைபெறும். ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் கலந்து கொள்ளலாம். இதற்கு எதுவித கொடுப்பனவுகளும் வழங்கப்படமாட்டாது.

10.12.2021

தலைவர்,
உள்ளூர் அதிகார பெறுகைச்சபை,
வடமராட்சி தெற்கு மேற்குபிரதேச சபை,கரவெட்டி,
வடக்குமாகாணம்.

# என்ன ஒரு அற்புத தேசம்! என்ன ஒரு அற்புத ஆட்சி! வசந்த கரனாகொடவுக்கு ஆளுநர் பதவி குறித்து மனோ

இலங்கையின் முன்னாள் கடற்படை தளபதி வசந்த கரனாகொட வடமேல் மாகாண ஆளுநராக நியமனம் செய்யப்பட்டுள்ளதாக வெளியான செய்திகள் குறித்து நாடாளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் தனது முகநூலில் பதிவொன்றை செய்திருக்கின்றார்.



அவர் அதில் தெரிவித்துள்ளதாவது.

முன்னாள் கடற்படை தளபதி வசந்த கரனாகொடா மீது இறுதி யுத்தம் நடந்த 2008/2009 காலத்தில் கொழும்பில் வசதி படைத்த தமிழ் குடும்ப இளைஞர்கள் 11பேரை கப்பம் பெறுவதற்காக வெள்ளை வான் மூலம் கடத்தி கொலை செய்ததாக குற்றம்சாட்டப்பட்டு வழக்கு நடந்தது.

2008/ 2009 வேளையில் எனது தலைமையிலான மக்கள் கண்காணிப்பு குழு இந்த கொடுமையை பதிவு செய்து உலகிற்கு அறிவித்தது. இதற்காக எனக்கும் அச்சுறுத்தல் பரிசாக கிடைத்தது. வந்து சுட்டு விட்டு போங்கடா என நான் சொன்னேன். கடத்தப்பட்ட இளைஞர்களின் உடல்கள் கூட கிடைக்கவில்லை. காணாமல் போன பிள்ளைகளின் தாய்மார்கள் அழுத அழுகை இன்னமும் என் நெஞ்சில் ஒலிக்கிறது. அன்றைய போராட்டங்கள் மனதில் நிழலாடுகின்றன.

கொழும்பு எம்பியாக மக்கள் கண்காணிப்பு குழு அழைப்பாளராக - நான் மற்றும் ரவிராஜ், சிறிதுங்க, விக்கிரமபாகு பிரியாணி ஆகியோர் அச்சுறுத்தல்களுக்கு மத்தியில் பலரை காப்பாற்றினோம். பல கடத்தல்களை தடுத்து நிறுத்தினோம். எம்மையும் மீறி பல நடந்தன. வெள்ளை வான் கடத்தல்கள் அரசியல் காரணங்களுக்காக ஆரம்பித்து இது போன்ற கப்பம் பெறவேண்டி நிகழ்ந்தன.

2019ம் வருடத்தில் சட்ட பூர்வமாக வசந்த கரனாகொட மீது சாட்டப்பட்ட இந்த குற்றச்சாட்டு மரண தண்டனைக்குரிய குற்றமாகும். இன்று இந்த அரசாங்கம் பதவிக்கு வந்த பின் கடந்த மாதம் அவர் மீதான குற்றச்சாட்டுகளையும் வழக்கையும் சட்டமா அதிபர் வாபஸ் பெற்றார். கரனாகொட சுதந்திர மனிதனாக வெளியே வந்தார். இன்று அவரது சாதனையை பாராட்டி முன்னாள் கடற்படை தளபதி வசந்த கரனாகொட வடமேல் மாகாண ஆளுநராக நியமிக்கப்பட்டு உள்ளதாக செய்திகள் வெளியாகி உள்ளன.

# மர ஆலை ஒன்றில் பாரிய தீ விபத்து


களுத்துறை - வஸ்கடுவ பகுதியில் உள்ள மர ஆலை ஒன்றில் நேற்று அதிகாலை பாரிய தீ விபத்து ஏற்பட்டிருக்கின்றது.



இத் தீ விபத்தால் அதிகளவான மரக்குற்றிகள் எரிந்து நாசமாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

களுத்துறை வடக்கு பொலிஸார் பிரதேசவாசிகளின் உதவியுடன் களுத் துறை மாநகர சபையின் இரண்டு தீயணைப்பு வாகனங்களைப் பயன்படுத்தி தீயைக் கட்டுப்படுத்தும் பணியில் ஈடுபட்டனர். காய்ந்த மரம் மற்றும் மரக்கட்டைகள் சேமிப்புப் பகுதியில் தீ விபத்து ஏற்பட்டது. தீ விபத்திற்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை என்பதுடன், தீயினால் ஏற்பட்ட சேதமும் இதுவரை கணக்கிடப்படவில்லை.

# ரணில் விக்கிரமசிங்கவின் ரீட் மனு விசாரணைக்கு வருகிறது



முன்னாள் பிரதமரும் தற்போதைய பாராளுமன்ற உறுப்பினருமான ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக அரசியல் பழிவாங்கல் தொடர்பான விசாரணை ஆணைக்குழுவினால் முன்வைக்கப்பட்ட பரிந்துரையை ரத்து செய்யுமாறு கோரி தாக்கல் செய்யப்பட்ட ரீட் மனுவை எதிர்வரும் ஜனவரி மாதம் 28 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள் ளுமாறு மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

நிஸ்ஸங்க பந்துல கருணாரத்ன, தேவிகா அபேரத்ன மற்றும் டி. எம். சமரகோன் ஆகிய மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் மூவரடங்கிய நீதிபதிகள் குழு முன்னிலையில் இந்த மனு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இதன் போது ரணில் விக்கிரமசிங்க சார்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி பைஸர் முஸ்தபா விடுத்த கோரிக்கையை ஏற்றுக்கொண்ட மேன்முறையீட்டு நீதிமன்றம், குறித்த மனுவை ஜனவரி 28 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொ ள்ளுமாறு உத்தரவிட்டுள்ளது.

# பண்டிகை காலத்தில் மிக அவதானத்துடன் செயற்படவும் விசேட வைத்திய நிபுணர் ஹேமந்த ஹேரத் கோரிக்கை

நாட்டில் தினசரி அடையாளம் காணப்படும் தொற்றாளர்கள் எண்ணிக்கை பாரதூரமானதாக இல்லாவிட்டாலும், தொற்றாளர் எண்ணிக்கை கணிசமான அளவில் குறைவடையாமை கவனிக்கப்படவேண்டிய விடயமாகும்.

எனவே பண்டிகை காலங்களில் மிகவும் அவதானத்துடன் செயற்படுமாறு மக்களை கேட்டுக் கொள்வதாக பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்திய நிபுணர் ஹேமந்த ஹேரத் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில், கடந்த சில வாரங்களுக்கு முன்னர் 500 ஆகக் காணப்பட்ட நாளாந்த தொற்றாளர் எண்ணிக்கை தற்போது 700 வரை அதிகரித்துள்ளமை விசேட அவதானம் செலுத்தப்பட வேண்டிய விடயமாகும். தொற்றாளர் எண்ணிக்கை இதனை விட குறைவடையச் செய்வதே எமது எதிர்பார்ப்பாகும்.

அதற்கான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன. நாடு திறக்கப்பட்டு ள்ள நிலையில் வெள;வேறு சமூக மற்றும் பொருளாதார நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன. அதற்கமைய தொற்றாளர் எண்ணிக்கையில் மேலும் அதிகரிப்பு ஏற்பட வாய்ப்புள்ளது. தற்போது பாரியளவில் தொற்றாளர் எண்ணிக்கை அதிகரிக்காவிட்டாலும், நாளாந் தம் இனங்காணப்படும் தொற்றாளர் எண்ணிக்கையில் வீழ்ச்சி ஏற்படாமை அவதானம் செலுத்தப்பட வேண்டிய விடயமாகும். மகி ழ்ச்சிக்காக ஏற்பாடு செய்யப்படுகின்ற நிகழ்வுகளில் விருந்துபசாரங்களின் போது கொவிட் தொற்று அதிகமானோருக்கு பரவக் கூடிய வாய்ப்புக்கள் அதிகமாகும். இதற்கு முன்னர் சிறிய கொ த்தணிகள் ஏற்பட்ட அனைத்து சந்தர்ப்பங்களிலும், அலுவலகங்களில் ஒன் றாக உணவு உண்பவர்கள் மத்தியில்

வைரஸ் பரவல் அதிகமாகக் காணப்பட்டமையை அவதானிக்கக் கூடிய தாக இருந்தது. எனவே பண்டிகை காலங்களில் இவ்வாறான செயற்பாடு களின் போது மிகவும் அவதானமாக செயற்படுமாறு கேட்டுக் கொள்கின்றோம். சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் வெளியிடப்பட்டுள்ள சுகாதார விதிமுறைகளை முறையாக பின்பற்றுமாறும் கேட்டுக் கொள்கின்றோம் என்றார்.

## வாகன வரி அனுமதிப் பத்திரத்தை இணையத்தில் பெற்றுக் கொள்வதில் சிக்கல்

நாடு முழுவதும் வாகன வருமான அனுமதிப் பத்திரத்தை, இணையம் ஊடாகப் பெற்றுக் கொள்ளும் செயற்பாடு தடைப்பட்டுள்ளது.

இணையம் ஊடாக இந்த வசதியைப் பெற்றுக் கொள்வதற்காகப் பிரவேசிப்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதையடுத்து. இந்த நிலை ஏற்பட்டுள்ளதாக, மோட்டார் வாகனப் போக்குவரத்து திணைக்களத்தின், மாகாணக் காரியால அதிகாரிகள் தெரிவித்தனர்.

எவ்வாறாயினும், தொழில்நுட்ப பிரிவினர், இந்த நிலையை வழமைக்குக் கொண்டு வருவதற்கு, தொடர்ந்தும் சேவையில் ஈடுபட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

நாடு முழுவதும் வாகன வருமான அனுமதிப் பத்திரத்தை, இணையம் ஊடாகப் பெற்றுக் கொள்ளும் செயற்பாடுகள் தடைப்பட்டு, இரண்டு வாரங்கள் கடந்துள்ளன.

இணைய வசதியினூடாக வாகன வருமான அனுமதிப் பத்திரத்திற்கான விண்ணப்பங்களை முன்வைப்போரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளமையினால், இந்த நிலை ஏற்பட்டுள்ளதாக, தகவல் தொழில்நுட்ப முகவர் நிறுவனத்தின், அதிகாரியொருவர் குறிப்பிட்டார்.

# சிறைச்சாலை சம்பவத்தில் நான் குற்றவாளியா?

### -விசாரணை கோரும் லொஹான் ரத்வத்த

அனுராதபுரம் சிறைச்சாலை சம்பவம் தொடர்பில் விசாரிப்பதற்காக அமைக்கப்பட்ட ஆணைக்குழுவினால் லொஹான் ரத்வத்த குற்றவாளியாக கூறியுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளது என்று எதிர்கட்சி உறுப்பினர் நளின் பண்டார தெரிவித்த நிலையில், யாருக்கும் கிடைக்காத அந்தக் குழுவின் அறிக்கை இவருக்கு மாத்திரம் எப்படி கிடைத்தது என்று சிஐடி ஊடாக விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று லொஹான் ரத்வத்த தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற கைத்தொழில், வர்த்தக அமைச்சுகள் மற்றும் நான்கு இராஜாங்க அமைச்சுகளுக்கான நிதி ஒதுக்கீடு மீதான குழுநிலை விவாதத்தில் இரத்தினக் கல் மற்றும் தங்க ஆபரணங்கள் இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த சிறைச்சாலைகள் அமைச்சு தொடர்பிலும் கருத்து வெளியிட்டு உரையாற்றினார்.

லொஹான் ரத்வத்த, இரத்தினக் கல் மற்றும் தங்க ஆபரணங்கள் இராஜாங்க அமைச்சுக்கு மேலதிகமாக தான் முன்னர் வகித்த சிறைச்சாலைகள் அமைச்சு தொடர்பிலும் கருத்து வெளியிட்டிருந்தார். இதனால் இவர் சிறைச்சாலைகள் இராஜாங்க அமைச்சராக இன்னும் பதவி வகிக்கின்றாரா என்ற குழப்பங்கள் காணப்படுகின்றன.

அவருக்கு அந்தப் பதவி எவ்வாறு இல்லாது போனது என்பது தெரியும். அப்போது ஜனாதிபதியினால் ஓய்வு பெற்ற நீதிபதிகள் அடங்கிய ஆணைக்குழுவொன்றை அமைத்திருந்தார். அவர் குற்றவாளியாகியுள்ளதாக அந்த ஆணைக்குழுவின் தகவல்கள் கூறுகின்றன. இதனால் அந்த அறிக்கையை வழங்குமாறு கேட்கின்றேன் என்றார்.

இதன்போது ஒழுங்குப் பிரச்சினையை முன்வைத்து எழுந்த இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த, யாருக்கும் அந்த அறிக்கையின் தகவல்கள் கிடைக்கவில்லை. அமைச்சரவைக்கும் கிடைக்கவில்லை. இவ்வாறான நிலைமையில் இவருக்கு மாத்திரம் கிடைத்தது என்று விசாரணை நடத்த வேண்டும். இது தொடர்பில் சீஐடிக்கு கூறி தேடிப்பார்க்க வேண்டும் என்றார்.

இதனை தொடர்ந்து மீண்டும் கருத்து வெளியிட்ட நளின் பண்டார, நீங்கள் அந்த அறிக்கையை சமர்ப்பித்தால் அதில் என்ன இருக்கின்றது என்று கூறலாம். இரவில் சிறைச்சாலைக்கு சென்று தூக்கு மேடையை பார்க்கப் போன சம்பவம் சரியா? பிழையா? என்று நாட்டுக்கு தெரிந்து கொள்ள முடியும் என்றார்.

# மத்திய மாகாணத்தில் சுகாதாரப் பணியாளர்கள் பணிப்புறக்கணிப்பு

### -கண்டி தேசிய வைத்தியசாலை முன் போராட்டம்-

மத்திய மாகாணத்தை உள்ளடக்கிய பணிப்புறக்கணிப்பு போராட்டம் நேற்று முன்னெடுக்கப்படுவதாக சுகாதார நிபுணர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

நேற்று காலை 7.00 மணிக்கு மத்திய மாகாணத்தில் பணிப்புறக்கணிப்பு போராட்டம் ஆரம்பிக்கப்பட்டதாக சங்கத்தின் தலைவரான ரவி குமுதேஷ் தெரிவித்தார்.

வடமேல் மாகாண சபையில் நேற்றுமுன்தினம் ஆரம்பிக்கப்பட்ட பணிப்புறக் கணிப்பு போராட்டம் நேற்று காலை 7.00 மணியுடன் நிறைவடைந்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். இதேபோன்ற வேலைநிறுத்தப் போராட்டம் இந்த மாதத்துக்குள் நாடு முழுவதிலும் உள்ள அனைத்து மாகாணங்களிலும் மேற்கொள்ளப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். இதேவேளை கண்டி தேசிய வைத்தியசாலைக்கு முன்பாகவும் நண்பகல் போராட்டம் ஒன்று நடத்தப்படவுள்ளதாகவும் ரவி குமுதேஷ் மேலும் தெரிவித்துள்ளார்.

# எச்சில் துப்புபவர்களுக்கு எதிராகப் பாயும் சட்டம்

நெடுஞ்சாலைகளில் எச்சில் துப்புபவர்கள் மீது, கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமென, பொலிஸ் பாதுகாப்பு மற்றும் ஜனாதிபதி செயலகத்தின் விசேட பணிகள் மற்றும் சுற்றாடல் பிரிவின் பணிப்பாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ரொஷான் ராஜபக்ஷ தெரிவித்தார்.இது தொடர்பான புதிய சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

இதன்படி, குற்றவியல் சட்டத்தின் மூன்று பிரிவுகளின் கீழ், நெடுஞ்சாலைகளில், எச்சில் துப்புபவர்களுக்கு எதிராக, சட்ட நடவடிக்கை எடுக்க முடியுமென்று, அவர் சுட்டிக்காட்டினார்.தற்போது நிலவும் தொற்றுநோய் நிலைமையை கருத்திற் கொண்டு, இந்தச் சட்டங்களை கடுமையாக அமுல்படுத்தத் தீர்மானித்துள்ளதாகவும், அவர் மேலும் தெரிவித்தார்.

# அரச நிறுவன அதிகாரிகளுக்கு அழைப்பு விடுத்துள்ள மனிதவுரிமை ஆணைக்குழு

எரிவாயு விவகாரத்தில், அரச நிறுவனங்களின் அலட்சியம் குறித்து, விசாரணைகளை மேற்கொள்வதற்காக, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு அழைப்பு விடுத்துள்ளது.

நுகர்வோர் விவகார அதிகார சபை, இலங்கை கட்டளைகள் நிறுவனம் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சு ஆகியவற்றிற்கே, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு அழைப்பு விடுத்துள்ளது.

அதாவது எரிவாயு விவகாரத்தில், அரச நிறுவனங்களின் அலட்சியம் குறித்து இலங்கை இளம் ஊடகவியலாளர்கள் சங்கம், சமூக ஆர்வலர்கள் குழு ஆகியன இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்துள்ளன.

குறித்த முறைப்பாடுகளுக்கு அமைய, இலங்கை கட்டளைகள் நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகம், நுகர்வோர் விவகார அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சின் செயலாளர் ஆகியோரை, ஆணைக்குழுவில் முன்னிலையாகுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

# கொலையில் முடிந்த காணிப் பிரச்சினை; ஒருவர் கொலை; சந்தேகநபர் படுகாயம்

காணி தகராறு அடிதடியில் முடிந்த நிலையில் தாக்குதலுக்கு இலக்கான நபர் ஒருவர் உயிரிழந்திருக்கின்றார். இந்த கொலைச் சம்பவம், பல்லேவெல பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

தாக்குதலுக்குள்ளாகி சிகிச்சை பெற்று வந்த நபர் சிகிச்சை பலனின்றி உ யிரிழந்திருக்கின்றார். இவ்வாறு கொலைச்செய்யப்பட்டவர் 70 வயதுடைய பல்லேவெல பிரதேசத்தைச் சேர்ந்தவராவார். கொலையுடன் தொடர்புடைய சந்தேகநபரும் காயமடைந்த நிலையில் கைது செய்யப்பட்டு பொலிஸ் பாதுகாப்புடன் வத்துபிட்டிவல வைத்தியசாலையில் சிகிச்சை பெற் று வருகின்றார். இந்நிலையில் குறித்த சம்பவம் தொடர்பில் பல்லேவெல பொலிஸார் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# திரவ உரக் கொள்கலன்களும் வெடிக்கின்றன ஹொரவபொத்தான விவசாய சங்கத் தலைவர்

நாடு முழுவதும் தினசரி எரிவாயு சிலிண்டர் வெடிப்பு சம்பவங்கள் பதிவாகு ம் நிலையில் இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட இயற்கை திரவ உர கொள்கலன்களும் வெடித்துச் சிதறுவதாக சிங்கள ஊடகம் ஒன்று செ ய்தி வெளியிட்டிருக்கின்றது.

ஜனாதிபதியின் யோசனைக்கு அமைவாக நாட்டில் பயிர்களுக்கு இரசாயன உரங்களைப் பயன்படுத்துவதைத் தடைசெய்து, இயற்கை உரங்களைப் பயன்படுத்துவதற்கான திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. இந்தியாவிலிருந்து பயிர்ச்செய்கைக்காக இறக்குமதி செய்யப்பட்ட திரவ உரம் அடங்கிய கொள்கலன்கள் வெடித்து தற்போது வீணாகி வருவதாக ஹொரவப்பொத்தானை பிரதேச விவசாயிகள் குற்றம் சுமத்துகின்ற னர். இம்முறை



பயிர்ச்செய்கைக்கு விண்ணப்பிப்பதற்காக விவசாயத் திணைக்களம் சுமார் 200 திரவ உர கொள்கலன்களை தமது உழவர் அமைப்புக்கு வழங்கியுள்ளதாகவும், ஏற்கனவே சுமார் 100 திரவ உர கொள்கலன்கள் வெடித்து வீணாகியுள்ளதாகவும் ஹொரவப் பொ த்தானை விவசாயிகள் சங்கத்தின் தலைவர் தெரிவித்துள்ளார்.

# உலங்குவானூர்தியின் கருப்பு பெட்டி கண்டுபிடிப்பு; பரபரப்பை ஏற்படுத்திய விபத்து சதியா?

## தீவிர விசாரணைகள் ஆரம்பம்



நீலகிரி விமானப்படை உலங்குவானூர்தி விபத்து நிகழ்ந்த பகுதியில் இருந்து கருப்புபெட்டி கண்டெடுக்கப்பட்டுள்ளது. இதன்படி குறித்த உலங்குவானூர்தி எவ்வாறு விபத்தில் சிக்கியது என்ற பரபரப்பு தகவல்கள் வெளியாகி உள்ளன.

சூலூர் விமானப்படை தளத்தில் இருந்து காலை 11.30 மணிக்கு முப்படைத் தளபதி உள்பட 14 பேர் பயணித்த எம்.ஐ.17வி5 ரக உலங்குவானூர்தி புறப்பட்டது.

இதனை குன்னூர் இராணுவ பயிற்சி மைதானத்தில் இருக்கும் சிப்கானா கிளப்பில் தரையிறக்க முடிவு செய்யப்பட்டு, அதற்காக தீயணைப்பு வாகனமும் தயார் நிலையில் இருந்தது.

மேட்டுப்பாளையம் அருகே சென்றபோது வானில் கடுமையான மேகமூட்டம் அதிகமாக இருந்து உள்ளது. பனி மூட்டத்திலும் செல்லக்கூடிய வசதி இருப்பதால் உலங்குவானூர்தி தொடர்ந்து பயணித்தது. ஆனால் மேட்டுப்பாளையத்தை கடந்தபோதே உலங்குவானூர்தி தள்ளாடியபடியே சென்று உள்ளது.

குன்னூர் காட்டேரி பூங்கா அருகே உள்ள இப்சேட் எஸ்டேட் தொழிலாளர்கள் குடியிருப்பு பகுதியில் சென்ற போதும் பனிமூட்டமாகவே காணப்பட்டது. அப்போது திடீரென்று அங்கு இருந்த 40 அடி உயரம் கொண்ட மரத்தில் விமானத்தின் ஒரு இறக்கை மோதியது. இதே போல் உலங்குவானூர்தியின் வால்பகுதியும் மற்றொரு மரத்தில் மோதியது.

தொடர்ந்து மற்றொரு மரத்தில் மோதிய உலங்குவானூர்தி கீழே விழுந்து தீப்பிடித்தது. இதை நேரில் பார்த்த அப்பகுதி பொது மக்கள் விரைந்து சென்று மீட்க ஓடி வந்துள்ளனர்.

ஆனால் உலங்குவானூர்தி டமார், டமார் என சத்தம் வந்ததால் வெடி பொருட்கள் இருக்கலாம் என்ற அச்சத்தில் அதன் அருகே செல்ல பயந்து உடனடியாக தீயணைப்புதுறை மற்றும் அதிகாரிகளுக்கு தகவல் கொடுத்தனர். அவர்கள் விரைந்து வந்து விபத்தில் சிக்கியவர்களின் உடல்களை மீட்டனர்.

முப்படை தளபதி சென்ற விமானம் விபத்துக்குள்ளானது குறித்து விமானப்படை விசாரணை நடத்த உத்தரவிட்டிருந்தது. உடனடியாக விமானப்படை அதிகாரிகளும் சம்பவம் நடந்த காட்டேரி பகுதிக்கு விரைந்தனர்.

விபத்து நடந்த இடத்தை நேரில் பார்வையிட்டனர். விபத்தில் சிக்கிய ஹெலிகொப்டரின் உதிரி பாகங்கள் உள்ளிட்டவற்றை பார்வையிட்டனர். தொடர்ந்து உலங்குவானூர்தி விபத்து எப்படி ஏற்பட்டது? பனி மூட்டத்தால் விபத்து ஏற்பட்டதா? அல்லது உலங்குவானூர்தி ஏதாவது கோளாறு இருந்ததா? என பல்வேறு கோணங்களில் விசாரணையை தீவிரப்படுத்தியுள்ளனர்.

மேலும் விபத்தை நேரில் பார்த்த அப்பகுதியை சேர்ந்த கிராம மக்களிடமும் உள்ளூர் பொலிஸார் உதவியுடன் விமானப்படையினர் விசாரித்தனர்.

விபத்துக்குள்ளான எம்.ஐ.17 வி5 ரக உலங்குவானூர்தி முக்கிய வி.வி.ஐ.பிக்கள் மட்டுமே பயன்படுத்தக்கூடிய ஒரு ஹெலிகாப்டர் ஆகும். ஏனென்றால் இந்த ஹெலிகொப்டர் மிகவும் பாதுகாப்பானது என்பதால் முக்கிய வி.வி.ஐ.பி.க்கள் தாங்கள் செல்வதற்கு இதனையே பயன்படுத்தி வந்துள்ளனர்.

பொதுவாகவே இந்த உலங்குவானூர்தி புறப்படுவதற்கு முன்பு கடுமையான சோதனைக்கு உட்படுத்தப்படும். அந்த வகையில் முப்படை தலைமை தளபதி புறப்பட்ட இந்த எம்.ஐ.17 வி.5 ரக உலங்குவானூர்தியும் பரிசோதிக்கப்பட்டது.

அதன்பின்னரே முப்படை தளபதி உள்பட 14 பேர் டெல்லியில் இருந்து உலங்குவானூர்தியில் பயணித்துள்ளனர். பலமுறை பரிசோதிக்கப்பட்டும் இந்த உலங்குவானூர்தி விபத்தில் சிக்கியுள்ளது.

பொதுவாகவே இராணுவ உயர் அதிகாரிகள் பயணிக்கும் போதும், அவர்கள் செல்லக்கூடிய விமானம், உலங்குவானூர்தி அதிகபட்ச பாதுகாப்பு கொண்டதாக இருக்கும். விபத்தில் சிக்கிய இந்த எம்.ஐ.17 வி 5 ரக உலங்குவானூர்தி இதற்கு முன் இப்படி எல்லாம் விபத்துக்குள்ளானது கிடையாது.

அதி நவீன தொழில் நுட்பங்களை கொண்ட இந்த உலங்குவானூர்தியில் பாதுகாப்பு அம்சத்தில் குறைபாடு ஏற்படுவது என்பது மிகவும் குறைவு என சொல்லப்படுகிறது. மேலும் பனி மூட்டத்திலும் எளிதாக கடந்து செல்லக்கூடிய உலங்குவானூர்தி என்பதால் இந்த விபத்து தற்செயலாக நடந்ததா? அல்லது ஏதாவது சதியா? என்பது தெரியவில்லை.

உயிரிழந்த முப்படைத் தலைமை தளபதி பிபின் ராவத் நாட்டின் பாதுகாப்புக்காக சில வேலைகளை கையில் எடுத்திருந்ததாகவும், அதனால் இது வெளிநாட்டு அமைப்புகளின் சதி திட்டமாக இருக்குமோ? என்ற சந்தேகமும் ஏற்பட்டுள்ளது. அந்த கோணத்திலும் இராணுவ அதிகாரிகளின் விசாரணை நடந்து வருகிறது.

இதற்கிடையே உலங்குவானூர்திக்கு என்ன நடந்தது என தெரிய வேண்டும் என்றால் அதில் இருந்த கருப்பு பெட்டி கிடைத்தால் மட்டுமே தெரியவரும். அதனால் அந்த கருப்பு பெட்டியை தேடும் பணியில் இராணுவ வீரர்கள், விமானப்படையினர் தீவிரமாக ஈடுபட்டனர்.இதன் காரணமாக கருப்பு பெட்டி மீட்கப்பட்டுள்ளது. அதில் உள்ள விவரங்களை கொண்டு விபத்து நடந்தது எப்படி? என்பது பற்றியும் விசாரணை நடைபெற்று வருகின்றது.

# பிபின் ராவத் உடல் டெல்லியில்; பிரதமர் உள்ளிட்டோர் நேற்று அஞ்சலி



குன்னூரில் உலங்குவானூர்தி விபத்தில் பலியான முப்படை தலைமை தளபதி பிபின் ராவத் உள்ளிட்ட 13 பேரின் உடல்கள் நேற்று வியாழக்கிழமை தனி விமானம் மூலம் டெல்லி கொண்டு செல்லப்பட்டது.

குறித்த விபத்தில் பலியான முப்படை தலைமை தளபதி பிபின் ராவத் உள்ளிட்ட 13 பேரின் உடல்கள் வெலிங்டன் இராணுவ வைத்தியசாலையில் வைக்கப்பட்டன. உடல்களை பிரேத பரிசோதனை செய்ய கோவையில் இருந்து மருத்துவக்குழு குன்னூர் சென்றது.

இந்நிலையில் நேற்று முந்தினம் பிரேத பரிசோதனை செய்யப்பட்டு, வெலிங்டன் இராணுவ மையத்தில் வைக்கப்பட்டது. அங்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், தரைப்படை இராணுவ தளபதி நரவனே, விமானப்படை தளபதி வி.ஆர்.சவுத்திரி, கடற்படை தளபதி அட்மிரல் ஹரிகுமார் ஆகியோர் தலைமையில் அஞ்சலி செலுத்தப்பட்டது.

பின்னர் முழு இராணுவ மரியாதையுடன் 13 பேரின் உடல்களும் சூலூர் விமானப் படை மையத்துக்கு கொண்டு செல்லப்பட்டது. அங்கிருந்து இராணுவ விமானம் மூலம் நேற்று டெல்லி கொண்டு செல்லப்பட்டது.

டெல்லியில் பிரதமர் நரேந்திரமோடி, இராணுவ அமைச்சர் ராஜ்நாத்சிங், மத்திய மந்திரிகள், அதிகாரிகள் தலைமையில் இறுதி மரியாதை செலுத்தப்பட்டது. இறுதிச் சடங்கு இன்று வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது என்று இராணுவ அதிகாரிகள் தெரிவித்தனர்.

### -80 சதவீத தீக்காயங்கள்-

# விபத்தில் உயிர் தப்பிய கப்டனுக்கு தீவிர சிகிச்சை



குன்னூரில் நடந்த ஹெலிகொப்டர் விபத்தில் முப்படை தலைமை தளபதி பிபின் ராவத் உள்பட 13 பேர் பலியானார்கள்.

இந்த விபத்தில் அவர்களுடன் பயணித்த வெலிங்டன் இராணுவ பயிற்சி கல்லூரி பேராசிரியரும், குரூப் கப்டனுமான வருண்சிங் மட்டும் உயிர் தப்பினார். அவர் 80 சதவீத தீக்காயங்களுடன் குன்னூர் இராணுவ வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார்.

அவருக்கு தீவிர சிகிச்சை வழங்கப்பட்டு வருகிறது. அவர் மீண்டு வரும் பட்சத்தில் விபத்துக்கான காரணம் குறித்து முழுமையான விவரங்கள் தெரியவரும். இதனால் அவரை காப்பாற்றும் முயற்சியில் வைத்தியர்கள் தீவிரமாக ஈடுபட்டு உள்ளனர். கோவையில் இருந்து சென்ற சிறப்பு மருத்துவக்குழுவினர் அவருக்கு சிகிச்சை வழங்கி வருகிறார்கள்.

வருண்சிங், கடந்த ஆண்டு தேஜஸ் ரக போர் விமானத்தை இயக்கியபோது நடுவானில் தொழில்நுட்ப கோளாறு ஏற்பட்டது. ஆனால் சூழ்நிலையை திறம்பட கையாண்ட வருண் சிங், விமானத்தை பத்திரமாக தரையிறக்கினார். அவரது தீர செயலுக்காக இந்த ஆண்டு ஆகஸ்டு மாதம் நடந்த நிகழ்ச்சியில் அவருக்கு சவுரிய சக்ரா விருது வழங்கி கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# முப்படை தலைமை தளபதி பதவிக்கு ஜெனரல் நரவனேயின் பெயர் பரிந்துரை




பிபின் ராவத் அகால மரணம் அடைந்ததையடுத்து முப்படைத் தலைமை தளபதி பதவிக்கு ஜெனரல் நரவனேயின் பெயர் பரிந்துரை செய்யப்பட்டிருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது.

முதன்முதலாக முப்படைக்கும் ஒரே தலைமைத் தளபதி என்ற பதவி உருவாக்கப்பட்டு பிபின் ராவத் நியமிக்கப்பட்டிருந்தார். அவரது மறைவைத் தொடர்ந்து அப்பதவிக்கு நரவனேயை நியமிக்க பாதுகாப்பு அமைச்சகம் பரிசீலித்து வருகிறது.

அடுத்த ஆண்டு ஏப்ரல் மாதம் தமது 62 வயதில் நரவனே ஓய்வு பெறுகிறார். ஆனால் முப்படைகளின் தலைமைத் தளபதி பதவி அவருக்கு வழங்கப்பட்டால் அவர் 65 வயது வரை பணிகளைத் தொடர முடியும். கிழக்கு லடாக்கில் சீனாவுடன் இந்தியப் படைகள் நேருக்கு நேர் நிற்கும் சூழ்நிலையில் முப்படைகளின் ஒத்துழைப்பும் செயல்திறனும் முக்கியமானதாகக் கருதப்படுகிறது.

# இந்தியாவில் கொரோனா நிலைவரம்: புதிதாக 9,419 பேருக்கு தொற்று



இந்தியாவில் நேற்று காலை 8 மணியுடன் முடிந்த 24 மணி நேரத்தில் புதிதாக 9,419 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். இதில் அதிகபட்சமாக கேரளாவில் 5,038 பேருக்கு தொற்று உறுதியானது.

நாட்டில் கொரோனா பாதிப்பு குறித்து மத்திய சுகாதாரத்துறை நேற்று வெளியிட்ட அறிக்கையில் கூறி இருப்பதாவது:-

கடந்த 6 ஆம் திகதி நிலைவரப்படி, தினசரி பாதிப்பு 6,822 ஆக இருந்தது. மறுநாள் 8,439 ஆக உயர்ந்த நிலையில் நேற்று மேலும் அதிகரித்துள்ளது. நாட்டில் மொத்த பாதிப்பு 3 கோடியே 46 இலட்சத்து 66 ஆயிரத்து 241 ஆக உயர்ந்தது.

கொரோனா பாதிப்பால் கேரளாவில் 112 பேர் உள்பட நாடு முழுவதும் மேலும் 159 பேர் இறந்துள்ளனர். மொத்த பலி எண்ணிக்கை 4,74,111 ஆக அதிகரித்துள்ளது.

தொற்றில் இருந்து குணம் அடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 3 கோடியே 40 இலட்சத்து 97 ஆயிரத்து 388 ஆக உயர்ந்தது. இதில் நேற்று முன்தினம் மட்டும் 8,251 பேர் நலம் பெற்று வீடு திரும்பினர்.

இந்நிலையில், நேற்று முன்தினம் பாதிப்பு அதிகரித்துள்ளது. நேற்றைய நிலைவரப்படி 94,742 பேர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# மக்களவையில் விளக்கம் அளித்த ராஜ்நாத் சிங்

### இராணுவ உலங்குவானூர்தி விபத்து:



உலங்குவானூர்தி வெலிங்டனை அடைவதற்கு 12 நிமிடங்களுக்கு முன் விபத்துக்குள்ளானது என்று மத்திய பாதுகாப்புத்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் விளக்கம் அளித்துள்ளார்.

உலங்குவானூர்தி விபத்தில் முப்படைகளின் தளபதி பிபின் ராவத் உள்பட 13 பேர் உயிரிழந்த இச்சம்பவம் குறித்து இந்திய பாதுகாப்புத்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் மக்களவையில் விளக்கம் அளித்தார். அப்போது அவர் கூறியதாவது:-

பிபின் ராவத் சென்ற விமானம் 11.35 மணிக்கு புறப்பட்டது. வெலிங்டனை சென்றடைவதற்கு 12 நிமிடங்கள் இருக்கும் போது உலங்குவானூர்தியின் தொடர்பு துண்டிக்கப்பட்டது.

தொடர்பு துண்டிக்கப்பட்டதும் விமானம் விபத்துக்குள்ளானது. உள்ளூர் மக்கள் கொடுத்த தகவலின்படி மீட்பு பணி நடைபெற்றது. உடனடியாக உடல்கள் மீட்கப்பட்டன.

இராணுவத்தின் முப்படைகள் சார்பில் விசாரணை நடத்த உத்தரவிடப்பட்டுள்ளது. விசாரணை விமானப்படை மார்ஷல் மனவந்த்ரா சிங் தலைமையில் நடைபெறும். விசாரணை குழு நேற்று (நேற்று முன்தினம்) வெலிங்டன் சென்றடைந்தனர். அவர்கள் விசாரணையை தொடங்கிவிட்டனர்.

குரூப் கேப்டன் வருண் சிங் உடல்நிலை மோசமாக உள்ளது. தீவிர கண்காணிப்பில் உள்ளார். அவர் வெலிங்டன் இராணுவ மருத்துவமனையில் இருந்து பெங்களூரு கமாண்ட் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்படுவார்.

அவருடைய உயிரை காப்பாற்ற அனைத்து முயற்சிகளும் எடுக்கப்பட்டு வருகிறது. பிபின் ராவத் இறுதிச் சடங்கு முழு அரசு மரியாதையுடன் நடைபெறும். அதுபோல் மற்ற வீரர்களின் இறுதிச் சடங்குகளும் இராணுவ மரியாதையுடன் நடைபெறும் என்றார்.

# பயிற்சி பெற்ற ஊரிலேயே உயிரிழந்த பிபின் ராவத்



தான் படித்த கல்லூரியில் நடக்க கூடிய கருத்தரங்கில் பங்கேற்று, பயிற்சி இராணுவ வீரர்களுடன் கலந்துரையாடுவதற்காக வந்தபோது தான் பிபின் ராவத் விபத்தில் சிக்கி பலியானார்.

நீலகிரி மாவட்டம் குன்னூர் வெலிங்டன் இராணுவ அதிகாரிகள் பயிற்சி கல்லூரியில், 40 நாடுகளை சேர்ந்த 430 பேர் இராணுவ பயிற்சி பெற்று, இராணுவ உயரிய பதவிகளை வகித்து வருகின்றனர்.

குன்னூர் நஞ்சப்பாசத்திரம் பகுதியில், நேற்று முன்தினம் நடந்த உலங்குவானூர்தி விபத்தில் பலியான முப்படை தளபதி பிபின் ராவத் பல்வேறு உயரிய பதவிகளை வகித்தார். அதற்கான பெருமை இந்த கல்லூரிக்கு உள்ளது. அவரும் இந்த கல்லூரியில் பயிற்சி பெற்ற மாணவர் ஆவார்.

இந்த நிலையில், தான் படித்த கல்லூரியில் நடக்க கூடிய கருத்தரங்கில் பங்கேற்று, பயிற்சி இராணுவ வீரர்களுடன் கலந்துரையாடுவதற்காக வந்த போது தான் அவர் விபத்தில் சிக்கி பலியானார்.

இந்த சம்பவம் இராணுவ பயிற்சி கல்லூரி மாணவர்கள், உயர் அதிகாரிகள் மத்தியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது. குன்னூரில் பயின்று நம் இராணுவ படைக்கு தலைமை வகித்து, பின்னர் முப்படைகளின் தளபதியாக தலைநிமிர்ந்த அந்த சிங்கம், தன் இராணுவ தந்திரங்கள் பயின்ற மண்ணிலேயே கம்பீரமாக தலை சாய்ந்தது, பெரும் வரலாற்று பதிவாகி உள்ளது.

# விபத்து நடந்த இடத்தில் விமானப்படை தளபதி நேரில் சென்று ஆய்வு



தமிழகத்தின் கோவை மாவட்டம் சூலூர் விமானப் படை தளத்தில் இருந்து குன்னூர் வெலிங்டனில் உள்ள இராணுவ பயிற்சி கல்லூரிக்கு முப்படைகளின் தளபதி பிபின் ராவத் இராணுவ உலங்குவானூர்தியில் நேற்று முன்தினம் சென்றார். அப்போது துரதிருஷ்டவசமாக அவர் சென்ற உலங்குவானூர்தி விபத்திற்குள்ளானது. இதில் பயணம் செய்த 14 பேரில் 13 பேர் உயிரிழந்தனர்.

குன்னூர் பஸ் நிலையத்தில் இருந்து 5. கி.மீ. தொலைவில் உள்ள காட்டேரி பூங்கா, நஞ்சப்சத்திரம் மலைப்பகுதி பள்ளத்தாக்கில் உலங்கு வானூர்தி விழுந்து நொறுங்கியது.

இந்த நிலையில் வெலிங்டன் வந்துள்ள விமானப்படை தளபதி மார்ஷல் வி.ஆர். சவுத்ரி உலங்கு வானூர்தி விபத்து நடைபெற்ற இடத்திற்கு நேரில் சென்று ஆய்வு செய்து வருகிறார். அவருடன் தமிழக டி.ஜி.பி. சைலேந்திர பாபு சென்றுள்ளார்.

இப்பத்திரிகை ஏசியன் மீடியா பப்ளிக்கேஷன்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட்டால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 267 ஆம் இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 2021 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 10 ஆம் திகதி வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.